பிரேம வாஹினி



பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின்
சொற்பொழிவுகள்

பிரேம வாஹினி

*

*

[பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின்
சொற்பொழிவுகள்]

*

[ஆங்கிலத்திலிருந்து மொழியாக்கம்]

*

- முதல் வெளியீடு: 1991 – 1200 பிரதிகள்
- அச்சுப்பதிவு: ஸ்ரீ லங்கா அச்சகம், காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்.

மொழியாக்கம்: ஞா. குகஞானி

- கிடைக்குமிடம்:
  1) பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி, திருநெல்வேலி.
  2) பிரசாந்தி நிலையம், நாச்சிமார் கோயிலடி
  3) சாயி இல்லம், தாவடி.

விலை ரூபா: 30/-

பிரேம வாஹினி

அறிமுகம்

அன்பான வாசகருக்கு, கூடூரில் சில வருடங்களுக்கு முன் மாபெரும் கூட்டமொன்றில் பகவான் உரையாற்றுகையில் ''என்னை நீங்கள் பிரேமை ஸ்வரூபமென்று அழைப்பதில் உங்களிடம் ஒரு தவறேதுமில்லை'' என்றார். எல்லாத்தேசங்களிலும் சமூகத்தின் நாலா திசைகளிலும் ஒவ்வொரு மனிதனின் இருதயத்திலும் பிரேமையை பாபா சொரிந்து அதனை நாடச்செய்து பிரேமையை ஸ்தாபனம் செய்கிறார். தனது வழியைத் தவறவிட்டு சித்த சுவாதீனமான குறும்புகளால், தானே உருவாக்கிய தீமையைக் கட்டுப்படுத்த முடியாத பயத்தினால் நடுநடுங்கும் மானுட சமூகத்திற்குப் பீதியைப் போக்கி ஒளிக்கு அதனை மீட்டுச் செல்ல பாபாவின் திருவருள் தேவைப்படுகிறது. தர்மத்தின் அடிப்படையில் மனிதனுக்கு புதுப்பொலிவூட்டி புத்துயிரளிக்கும் பணியை இவ்வுலகில் தான் அவதரித்து 32 வருடங்களின் பின்னர் தான் மேற்கொள்ள இருப்பதாக பகவான் பல வருடங்களின் முன்னர் கூறியிருந்தார். 1958-ம் ஆண்டு அந்த நேரம் கிட்டியதும், கீதையின் நறுமணத்தையும் தன்னை வழிகாட்டியாகக் கருதும் எவருக்கும் தேர்ச்சாரதியாகும் பொறுப்பையும் கொண்டு விளங்கும் ''சனதனசாரதி'' என்று பெயர் சூட்டிய, மாத சஞ்சிகையை வெளியிடும் பணியை, பாபா ஆசீர்வாதம் அளித்து ஆரம்பித்து வைத்தார். சனதனசாரதி சஞ்சிகைக்குப் பாபா முதலில் எழுதிய தொடர் கட்டுரைகளில் ''பிரேமவாஹினி'' என்பது பிரதானமாகக் குறிப்பிடத்தக்கது. ஆங்கிலத்தில் முதலில் மொழி பெயர்க்கப்பட்ட இக்கட்டுரைகள் இந்நூலில் இப்போது சேர்க்கப்பட்டுள்ளன. சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை என்னும் சாயியுக புது உலகின் நான்கு தூண்களுடன், பாபாவின் வழிகாட்டலின் கீழ், பிரேமை மூலம் சாந்தியைக் கண்டு கொள்ள வேண்டும். அப்பணிக்கு இந்நூல் பெரிதும் உதவும். இந்நூலைப் படிக்கையில் பிரேமையின் இருப்பிடத்தையே நீங்கள் தொட்டு விடுவீர்கள். இறைவனின் திருவருளே அது வழங்கும் செய்தியை செயலாக்குவதற்குப் பிரத்தியட்சமாக வழிகாட்டும். இங்கு கூறப்பட்டிருக்கும் சாதனையின் நெகிழ்ச்சியில் திளைத்திருக்கையில் கருணைசமுத்திரத்தின் மகிமைக்கு நீங்கள் ஆளாகிறீர்கள்.

ந. கஸ்தூரி

ஆசிரியர்–ஆங்கில சனதன சாரதி

ஒம் சாயிராம்

முன்னுரை

இறைவன் அவதாரமாக மனித ரூபத்தில் தோன்றுவது பல ஆயிரம் வருடங்கள் இடை வெளிகளில் நடக்கும் சம்பவம். இந்த அபூர்வ சம்பவம் நடக்கும் சம காலத்தில் மனித ரூபம் எடுத்த மனிதர்கள் அரும்பேறு பெற்றவர்கள். அந்த அவதாரத்தின் மகிமைகளை, போதனைகளை அறியும் வாய்ப்புப் பெற்றவர்கள் இன்னும் பாக்கிய சாலிகள்.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா, தான் இறைவனின் அவதாரம் என்று உலகிற்குப் பிரகடனம் செய்த பொன்விழா 1990-ம் ஆண்டு கொண்டாடப்பட்டது. பகவானின் மகிமை உலகம் எங்கும் பரவிக்கொண்டு வருகின்றது. அவர்களின் போதனைகளை அறிவதற்கு உலகம் எங்கும் புதிய உத்வேகம் காணப்படுகிறது. பல மொழிகளில் பல நூல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அத்தோடு இன்றுவரை ஆங்கிலத்திலேயே இருந்த முக்கியமான நூல்கள் வெவ்வேறு உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்படுகின்றன.

பிரசாந்தி நிலையத்தில் உள்ள ''ஸ்ரீ சத்திய சாயி நூல் வெளியீட்டு டிரஸ்ட் (Publications Trust)'' தங்கள் வெளியீடுகளை பிற நாடுகளில் உள்ள மத்திய ஆலோசனைச் சபைகளுக்கும் இணைப்புக் குழுக்களுக்கும் தத்தம் மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடுவதற்கு சில நிபந்தனைகளுக்கு அமைய அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு இலங்கையிலுள்ள இணைப்புக் குழுவிற்கு பல பக்தர்கள் உதவியிருக்கிறார்கள். இவர்களுள் தமிழ்ப்பிரசுரங்கள் சம்பந்தமாக முக்கிய இடத்தை வகித்து அரும் பெரும் தொண்டாற்றியவர் 1990-ம் ஆண்டு சாயிபதம் எய்திய கொக்குவில் சாயி செ. ஞானசேகரம் அவர்கள். சுவாமியின் போதனைகளை ஆழமாக அறிந்து கொள்ளவும், சாதனைப் பயிற்சிகளில் ஈடுபடவும் விரும்பிய பல சாயி அன்பர்களுக்கு வழிகாட்டியாகவும் குருவாகவுமிருந்து இன்னும் மேலான தொண்டுகளை அவர் செய்தார்.

சாயி செ. ஞானசேகரம் அவர்களின் நூல் தமிழாக்கம் செய்யும் தொண்டை அவர்களின் மகனும், சிஷ்யனுமான ஸ்ரீ குகஞானி ஏற்றுக் கொண்டிருக்கிறார். இந்த நூல் அவரால் தான் முழுமையாக தமிழாக்கம் செய்யப்பெற்றது. தமிழாக்கத்தை

திருப்பிப் பார்க்கும் பொறுப்பை எழுத்தாளரும் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட பேராசிரியருமான வைத்தீய கலாநிதி செ. சிவஞானசுந்தரம் ('நந்தி') அவர்கள் மனமுவந்து ஏற்றார். மொழி பெயர்ப்புக்குள் புகுந்தபின் மனம் மகிழ்ந்தார். ''பிரேம வாஹினியில்'' மாத்திரமல்ல, பொதுவாகப் பகவானின் நூல்களில் ஊறித் திளைத்த ஒருவர்தான் இந்தத் தமிழாக்கத்தைச் செய்திருக்கலாம் என்று தீர்ப்பும் கூறினார்.

கையெழுத்துப் பிரதியை பிழைவிடாது ரைப் அடிக்க வேண்டும். ரைப் அடித்ததை ஒத்துப்பார்க்க வேண்டும். இத்தகைய பக்க உதவிகளை சாயி ஞானசேகரத்தின் அன்பர்கள் அன்புக் காணிக்கையாகச் செய்தார்கள்.

இவ்வளவு பிரயத்தனங்களின் பின் நூல் அச்சேற வேண்டுமே? அந்தச் செலவையும் முற்பணமாகக் கொடுப்பதற்கு சில அன்பர்கள் முன்வந்தார்கள். அவர்கள் அநாமதேயமாக இருக்கிறார்கள்.

இந்த நூலையும் வேறு சில நூல்களையும் சாயி செ. ஞான சேகரம் சாயிபதம் எய்திய ஓராண்டு பூர்த்தியில் நடை பெற விருக்கும் நிகழ்ச்சிகளில் வெளியிட வேண்டும் என்ற ஆவலுடன் முயற்சிகள் நடைபெறுகின்றன. வழமையான சாதாரண நிகழ்ச்சி களைத் தவிர்த்து பகவானின் போதனைகளைப் பரப்பும் பணியையே அன்பர்கள் தலைமேல் கொண்டிருப்பது மிகவும் போற்றத்தக்கது.

முன்னுரைக்கு முடிவுரையாக ஒன்றை எழுதுவதற்கு உந்தப் படுகிறேன். இந்த நூல் தமிழாக்கத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட விதம், மொழி பெயர்த்தவர், திருப்பிப் பார்த்தவர் பெற்ற ஆனந்தம், வெளியீட்டு முயற்சியில் பலவகைகளிலும் ஈடுபட்ட வர்களின் மகிழ்ச்சி, அச்சகத்தாரின் ஆர்வமும் உற்சாகமும் – இவை யாவையும் உற்று நோக்கின், இத் தெய்வீகப்பணி சாயி சங்கற்பம் அல்லாது வேறில்லை.

ஜெய் சாயி ராம்

செ. சிவஞானம்
அகில இலங்கை பகவான்
ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனங்களின்
இணைப்புக் குழுத் தலைவர்

03-04-91

பொருளடக்கம்

		பக்கம்
	அறிமுகம்	iii
	முன்னுரை	iv
01.	மேன்மையான குணங்களே சாதகனுக்குரிய மார்க்கம்	01
02.	நூல்களைக் கற்றலும் மன ஒருங்கு குவிப்பும்	03
03.	சாதனை – வாழ்க்கை முறை	05
04.	மனித வாழ்வின் உண்மை இயல்பு	06
05.	பக்தியினதும் ஞானத்தினதும் ஒற்றுமை	08
06.	வாழ்க்கையின் கடமைகள்	09
07.	சத்குணமே ஞானம்	10
08.	சத்தியமே கடவுள்	11
09.	அஹங்காரம் அசாந்தியைத் தருவிக்கிறது	13
10.	பக்தி மார்க்கத்தில் சாதகன்	15
11.	உருவ வழிபாடு	18
12.	கல்வி	19
13.	சனாதனக் கல்வியின் அவசியம்	20
14.	இப்புறவுலகு உண்மையல்ல	22
15.	சம்ஸ்காரங்களைப் பொறுத்தே வாழ்க்கைப் பிரயாணம் அமைகிறது.	25
16.	வாழ்வெனும் வியாபாரத்தில் அமிழ்ந்து மனிதன் வெறும் சம்ஸ்காரங்களையே சம்பாதித்துக் கொள்கிறான்;	26
17.	மனித சமூகத்தின் தெய்வ மாதா சனாதன தர்மமே	31
18.	சர்வாந்தர்யாமி ஒருவர் மட்டுமே	37
19.	பக்திக்கான விதைகள் முளை விடுகின்றன	41
20.	ஒரு சாதகனுக்கு இன்றைய தினம் அவரது; ஆனால் நாளை?	42
21.	முக்தனைப் பக்தன் மாறும் வழி	43
22.	மானவனும் தானவனும்; குணங்களில் வேறுபாடுகள்	48

23.	நேற்றைய கர்மங்களே இன்றைய வார்த்தைகள்	49
24.	பக்தி இருவகை	52
25.	வானப்பிரஸ்தன்	54
26.	முத்தி நான்கு வகைப்படும்	57
27.	இறை சாந்நித்தியத்தையடைய சத்சங்கற்பமே வழி	58
28.	செயல்களின் குறிக்கோள் நற்கர்மங்களே	59
29.	நல்லியல்பே மானிட வாழ்க்கையின் அணிகலனுகும்	60
30.	சஹஜ மார்க்கமும் சாதனை மார்க்கமும் ஒன்றல்ல	62
31.	சாதகனின் அறுவடை	63
32.	சாதகர் தெரிய வேண்டிய கருவி	65
33.	நேற்றைய சுபீட்சமும் இன்றைய வறுமையும் இரண்டும் 'மஹான்கள்' என்று அழைக்கப்படுபவராலேயே	68

பிரேம வாஹினி

01. மேன்மையான குணங்களே சாதகனுக்குரிய மார்க்கம்

விவேகம் அல்லது புத்தியை பல்வேறு மார்க்கங்களிலிருந்து மனிதன் பெற்றுக்கொள்ள. முந்திய ஏனைய யுகங்களைவிட, கலி யுகமே உதவுகிறது. கல்வி உங்களுக்கு வேண்டுமாயின், போது மான அளவு பாடசாலைகளும், கல்வி நிறுவனங்களும் உள்ளன. செல்வத்தில் ஒருவருக்கு நாட்டமிருப்பின். பல்வேறுவழிகளில் முயற்சி செய்து, அதனை அவர் சம்பாதிக்க முடியும். இவை யெல்லாமிருப்பினும் மனிதனின் மன அமைதியிலும் மகிழ்ச்சி யிலும் எதுவித ஏற்றமும் இல்லை. ஏன் முந்திய யுகங்களைவிட, இன்று, துயரம் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

அவ்வாறெனின், இதற்கு எதுதான் காரணம்? மனிதனின் நடத்தையிலும், அவன் வாழும் முறையிலுமே. இதன் காரணம் தங்கியுள்ளது. மானுட வாழ்வு, விலங்கியல் பரிணமத்தில், உயர்ச்சி பெற்றதென்பதில் ஒரு சந்தேகமுமில்லை. அம்மனித வாழ்விற்கு அர்த்தம் கொடுப்பதாயின் ஆத்மீக சாதனை அவசியம். அவ்வாத்மீக சாதனை தூய்மையும், தெய்வீகமும் நிறைந்ததா யிருக்க வேண்டும். இவ்விதமான வாழ்க்கைக்கு, பண்பு மிக முக்கியமானதொன்று. பண்பு, வாழ்வை அமரத்துவமாக்கும். அது மரணத்தைக் கூட வென்றுவிடும். அறிவுதான் சக்தி மிக்க தென்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. பண்புதான் சக்தி, அறிவைப் பெறுவதற்குக்கூட தேவையானது நற்பண்பே. ஆகவே தீமையற்ற, தூய்மைமிக்க பண்பை, ஒவ் வொருவரும் பெற விளைய வேண்டும். மனிதனின் ஞாபகத்தில், புத்தர், யேசுகிறிஸ்து, சங்கராச்சாரியார், விவேகானந்தர், மா முனிவர்கள், ரிஷிகள் பக்தர்கள் என்பவர்கள் இன்றுவரை கூட திகழ்வதைக் கவனித்துப் பாருங்கள். என்றும் அவர்களை நினைவு கூரும் விதத்தில். அவர்களில் என்னதான் தன்மைகள் இருந்தன? அது அவர்களிடம் இருந்த பண்பே என்று நான் சொல்வேன்.

செல்வம், கல்வி சமூக அந்தஸ்து இவை பண்பில்லையேல் பயனற்றவையே. அது பூவின் நறுமணத்தைப்போன்றது. அது தரமும் பெறுமதியும் அளிப்பது. கவிஞர், ஓவியர், கலைஞர், விஞ்ஞானிகள் தத்தம் துறைகளில் மேன்மை மிக்கவராயிருக்க லாம்; ஆனால் அவர்களிடம் பண்பில்லையேல் சமூகத்தில் அவர் களுக்கு இடமே இராது.

சமூகத்தினுல் மதிப்பளித்து கௌரவிக்கப்படுவோரிடம், மேன்மைக்குத் தேவையான பண்புகள் இருக்கின்றனவா என்று சந்தேகம் நிச்சயமாக எழும். மாறுப் பெறுமதிகளைக்கொண்ட சமூகமொன்றையும், பண்பொன்றையும் பற்றியே நான் கூறுவது. நாளுக்குநாள் சில பண்புகளுக்கு, பல்வேறு வகையில் உயர்ச்சியை சமூகம் அளித்து வருகிறது. சமூகத்தின் விருப்புவெறுப்புகளுக்கு, பண்பின் அமைப்புக்களில் மாற்றமேற்படுகிறது. ஆனல் அப்பழுக்கற்ற பண்பின் அடிப்படை இயல்போ சாஸ்வதமானது. சமூகத்தின் போக்குகள் எதுவாயினும். அது அதே விதத்தில் இருக்கும். இந்நோக்கில், ஆத்மா எனப்படும் இன்னுமொரு அழியா வஸ்துவுடன் அது இணைந்திருப்பதால், அதுவும் அழியாதது.

அப்பழுக்கற்ற பண்பிற்குரிய குணங்களான பிரேமை, பொறுமை, சகிப்புத்தன்மை, வைராக்யம், தானம் இவையே மேன்மைமிக்கவை; பணிந்து போற்றற்குரியவை.

இனமும் நாங்கள் ஈடுபடும் நூற்றுக்கணக்கான சிறிய பணிகள் நிலைபெற்று பழக்கங்களாக மாற்றமடைகின்றன. இப் பழக்கங்கள் எமது விவேகத்தையும், வாழ்க்கைக் கண்ணோக்கையும் மாற்றியமைக்கின்றன. எமது கற்பனையில் புனைவதும், லட்சியத்தில் தேடுவதும், எமது வேண்டுதல்களில் இறைஞ்சுவதும், அழியாச் சுவடை எமது மனத்தில் பதிக்கின்றன. இவற்றினுல் பாதிக்கப்பட்டு எமது அறிவையும், எம்மைச் சூழ உள்ள உலகக் காட்சியையும், நாம் அமைத்து, இத்தோற்றத்துடன் நாம் பிணைக்கப்பட்டுள்ளோம்.

இறந்த காலமும், அந்நீண்ட காலத்தில் வளர்க்கப்பட்ட பழக்கங்களினதும் விளைவே மனிதனின் நிகழ்காலமாகும். எவ்விதமான பண்புகளைக் கொண்டு அவன் வாழ்ந்து வந்திருப்பினும், இதுவரையில் அவன் பழகி ஊறிப் போயிருந்த கற்பனை எண்ணமுறைகளை மாற்றி அமைப்பதால் அவற்றை மாற்ற முடியும்.

தீய இயல்பு எவரிடமிருப்பினும், அது திருத்த முடியாததொன்றல்ல. கொள்ளைக்காரனை அங்குலிமாலா புத்தர் மூலம் மாறவில்லையா? ரட்னகரன் எனும் திருடன் வால்மீகி ரிஷியாக வில்லையா? மனப்பூர்வமான முயற்சிமூலம், பழக்கங்களை மாற்றி, பண்புகளைத் தூய்மையாக்கலாம். தீய உணர்வுகளை எதிர்கொண்டு, தீய பழக்கங்களை மாற்றியமைக்கும் வல்லமையை,

தன்னுள்ளும், தனக்கருகிலும், மனிதன் என்றும் வைத்திருக் கிறான். மனிதனை, இப்பூமியுடன் பிணைத்திருக்கும் பழக்கங்களை, தன்னலமற்ற சேவை, பக்தி, பிரார்த்தனை, புத்திக்கூர்மை இவற் றின் மூலம் உதறித் தள்ளிவிட்டு, ஆத்மீக வாழ்வை நோக்கி எம்மை இட்டுச் செல்லும் புதிய பழக்கங்களை, எம் வாழ்வில் புகுத்திக் கொள்ளலாம். ஆத்மீக சம்பந்தமான இலக்கியங்கள், பாடல்கள், காவியங்கள், நூல்கள், சஞ்சிகைகள் இவற்றின் நோக்கம் எதுவெனில், இப்பண்பின் தன்மை, அதன் போக்குகள், அதன் விசித்திரமான செயல்கள், என்பவற்றை விவாதித்தலும் அதனை மீள மாற்றியமைக்கும் செயன்முறைகளைப் பற்றி அறிவித் தலுமாம். இந்த லட்சியத்தையே சனாதனசாரதியும் கொண் டுள்ளது. பாண்டித்தியத்தைக் காட்டவும், பேர்புகழைப் பெற வும் அது நாடுவதில்லை.

ஆயினும் நூலையோ அல்லது சஞ்சிகையையோ, வெறுமனே வாசிப்பது விவேகத்தையோ, புத்தியையோ கொடுத்து விடாது என்பதைக் கூறியே ஆக வேண்டியுள்ளது. கண்ணால் பார்த்ததை யும், கேட்டதையும், கற்றதையும் வாழ்க்கையில் தினமும் அனு சரிப்பது அவசியம். இவையின்றி வாசித்தல் காலத்தை வெறு மனே விணுக்குவதாகும். காலத்தைக் கழிப்பதற்காக ஏதாவது வாசிக்கப்படின் அது காலத்துடனேயே கடந்து சென்று விடுவ துடன் ஒன்றுமே எஞ்சி நிற்காது.

2. நூல்களைக் கற்றலும், மன ஒருங்கு குவிப்பும்.

மலிவு விலைக்கு நூல்கள் பெரும் எண்ணிக்கையில் கிடைக் கின்றன. வேதங்கள், சாஸ்திரங்கள், புராணங்களைப் பெற்று வாசிக்க எல்லோராலும் முடிகிறது குருஸ்தானம் வகிப்பவர் களுக்கும் குறைவில்லை. அறிவுச் செல்வத்தை கணக்கற்ற வித்தியாசாலைகள் தங்குதடையின்றி வழங்குகின்றன மனப் பயிற்சிக்குரிய வசதிகளும் தாராளமாகக் கைக்கெட்டக் கூடிய தாக உள்ளன. அப்படியிருந்தும் ஞானம் என்னும் தேனைப் பருகுவதால் கிடைக்கும் நிறைவு எங்கும் இருப்பதாக இன்னும் கேள்விப்படவில்லை.

குவியல்களாக நூல்கள் எங்கும் கிடப்பதை நான் காணுகை யில் அவற்றினைச் சுற்றிக்கட்டப்பட்டுள்ள மொத்தமான காகித அட்டைகளினூடு அந்நூல்களுள் பொதிந்திருக்கும் ஞானம் தூளித்துக் கொண்டு வெளியே வெளிப்பட்டு வரமுடியாதென் பதை உணர்கின்றேன்.

மலைபோன்ற குவியல்களான காமம், குரோதம், பொறுமை, சுய நலங்களாலேயே கடவுள் ஒளித்து வைக்கப்பட்டுள்ளார். இவ்வளப்பரிய நூற் குவியல்களிலும் ஞான சூரியனும் மறைத்து வைக்கப்பட்டுள்ளார்.

உலகெங்கிலுமுள்ள திசைகளெல்லாம் இந்நூல்கள் பரவி இருந்தும் கலாசாரத்தில் முன்னேற்றமும் அல்லது ஞானத்தில் வளர்ச்சியும் உண்டாகியுள்ளதென்று எம்மால் கூறமுடியாது. மனிதனுனவன் மனிதக் குரங்கிலிருந்து இன்னும் வெகு தூரத்திலில்லை. வாசகர்கள் நாடுவது கவர்ச்சியான மேலட்டையும் தலைப்பும் கண்கவரும் படமுமே அதாவது கணநேர இன்பத்தையும் நிலையற்ற சுகத்தையுமே. தாம் படிக்கும் நூலைத் தமது விவேகத்தைப் பயன்படுத்தித் தெரிவு செய்து அதில் கற்றதை பயிற்சி செய்பவரே சத்தியத்தைப் பெற்றுப் பேரானந்தத்தில் திளைத்திருப்பர். இவர்களே பயனுள்ள வாழ்க்கை வாழ்கின்றனர். ஆகவே மிக உயர்ந்த இலட்சியத்தை நாடுவோரும் இறை சிந்தனையில் ஆழ்ந்திருப்போரும் முனிவர்கள், மஹான்கள் இவர்களது சரிதங்களையும் இறைசிந்தனைக்குதவும் நூல்களையுமே படித்தல் வேண்டும். கைக்கெட்டும் பலதும் பத்துமான சில்லறைப் புத்தகங்களை ஒரு நோக்கமுமின்றி வாசித்தல் குழப்பத்தை மேலும் சிக்கலாக்கி விடும். ஒருவித பயனையும் அது கொடுக்காது; சாந்தியையும் அளிக்காது.

எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் புரியும் பணிகளில் மன ஒருங்கு குவிப்பை (ஏகாக்கிரதை) வளருங்கள். சம திருஷ்டியே சுபதிருஷ்டி.

சிங்கம் காட்டின் அரசனுயிருந்தும் அது கானகத்தூடு நடக்கையில் தன்னை ஏதாவது பின் தொடருகிறதா என்னும் பயத்தால் சில அடிகளுக்கொருதரம் திரும்பிப் பார்த்துக் கொள்கிறது. மனத்திலுள்ள பயமே எமது கண்ணோக்கை பழுதுபடுத்துகிறது. இருதயத்திலுள்ள கொடூரம் பார்வையைப் பிழையாக்கி கண்ணோக்கைத் திசைதிருப்புகிறது.

சமதிருஷ்டி மனிதனிடம் அவசியம் தேவை. சிருஷ்டி முழுவதும் அவன் கண்களுக்கு சமமான புனிதத்தையளிக்க வேண்டும். தன்னிடம் எவ்வளவு அன்பும் விசுவாசமும் ஒருவன் கொண்டுள்ளானோ அவ்விதத்திலேயே மற்றைய உயிர்களையும் அவன் நோக்க வேண்டும் ஏனெனில் சிருஷ்டியில் எதுவித தீதும் இல்லை. ஒரு

கிஞ்சித்தளவு கூட இல்லை. தவருன பார்வையினுலேயே நீமை கண்ணுக்குப் புலனுகிறது. நாம் அணிந்து கொள்ளும் கண்ணுடியின் இயல்பினைப் பொறுத்தே சிருஷ்டியும் வர்ணமூட்டப்பட்டிருக்கும். சிருஷ்டியோ சாஸ்வத நூய்மையும் தெய்வீகமும் கொண்டது.

03. சாதனை – வாழ்க்கை முறை

மன ஒருங்குகுவிப்பினுலும் தேக, மனே, புத்தி சக்திகளின் முழு வெளிப்பாட்டினுலும் மேன்மையை மனிதன் அடைய வேண்டிப் போதித்த மஹான்கள் முற்காலத்திலும் தற்போதும் இனிமேலும் இருப்பார்கள். புற உலகப் பொருட்களில் நீளத்தும், வெளி உலகைக் காரணமில்லாது குறைகள் கூறுவதிலு மேயே மனித மனது ஈடுபடுகிறது. இத்தகைய மனத்தை எவ்வாறு ஒருங்குகுவிக்க முடியும்?

ஒவ்வொருவரும் தம்மைத்தாமே கேட்டுக்கொள்ள வேண்டியது ''என்னைப் போன்றவர்களே மஹாத்மாக்களும், மஹாபுருஷர்களும் அவர்களும் தேகம படைத்தவர்கள், அவர்களால் பூரணத்துவம் பெறமுடியின் அவர்களின் வழியைப்பின்பற்றினுல் நானும் வெற்றி பெறலாம். ஏனையோரின் தவறுகளையும் குற்றங்களையும் பார்ப்பதில் எனது காலத்தை விரயமாக்குவதால் எனக்கு என்ன பயன் உண்டு?''

ஆகவே முதலாவது சாதனையானது என்னுள் உறையும் தவறுகளையும், குற்றங்களையும் தேடி அவற்றைத் திருத்த முயற்சி செய்து பூரணமடைதலே.

கடந்து செல்லும் ஒவ்வொரு தினத்தின் கடும் உழைப்பினது லட்சியமும், நிறைவும் ஒருவனது இறுதி நாட்கள் மகிழ்ச்சியும் இனிமையும் கொண்டதாக ஆக்குவதே. ஆனுல் ஒவ்வொரு தினமும் அதன் மாகூப் பொழுதை உடையது. நற்பணிகளில் ஒவ்வொரு நாட்களும் செலவிடப்படின் மாலைப் பொழுது எமக்கு ஆழ்ந்த தூக்கத்தையும் புத்துயிரையுமளிக்கும். சமாதிக்கொப்பான நித்திரையை அது கொடுத்து ஆசீர்வதிக்கும்.

ஒரு குறுகிய கால வாழ்வை இவ்வுலகில் மனிதன் கொண்டுள்ளான். காலத்தை அவதானமாகப் பயன்படுத்துவதனுல் இக் குறுகிய நேர வாழ்விலும் ஒருவன் பேரானந்தத்தைப் பெற முடியும். ஒரே தோற்றமும் ஒரே உருவமும் கொண்டு ஒரே

சூழ்நிலையில் இரு மனிதர்கள் வளர்ந்திருந்தாலும் ஒருவர் தெய்வீகமானவராக வளர மற்றவர் தனது மிருக இயல்புடனே நின்று விடுகிறார் இவ்வேறுபாடான வளர்ச்சிக்கு என்ன காரணம்? இப்பழக்க வழக்கங்களிலிருந்து தோன்றிய ஒழுக்கங்கள், பழக்கங்கள் அவரது இயல்பான தன்மை மாறுதல், இவற்றினாலேயேயாகும். பண்பு கொண்ட உயிரே மனிதன்.

04. மனிதவாழ்வின் உண்மை இயல்பு

மேலோட்டமாகப் பார்ப்பவனுக்கு உண்ணுதல், அருந்துதல், உழைத்தல், உறங்குதல் என்ற முடிவற்ற வட்டம் போன்றதாக மனித வாழ்க்கை தோற்றும். ஆனால் வாழ்க்கையோ இதிலும் மேலான உயர்ந்த நோக்கம் கொண்டது. அதி உயர்ந்த சிறப்புப் பொருந்தியது. வாழ்க்கை ஒரு யக்ஞம், தியாகம் ஆகும். ஒவ்வொரு சிறு பணியும் இறைவனுக்கு அர்ப்பணமாகிறது. இத்தகைய சரணாகதி மனப்பான்மையுடன் நாட்களை பணிகளில் செலவிடின் உறக்கம் சமாதியைவிட வேறென்னவாகும்?

தேகத்துடன் தன்னைப் பிணைத்துக் கொண்டு, அதுவேதான் என்கிற மிகப் பெரும் தவற்றை மனிதன் புரிகிறான் தேகத்தின் பராமரிப்புக்கும் சுகத்திற்கும் தேவையான பல்வேறு வகைப் பொருட்களைச் சேர்த்து வைக்கிறான். தேகம் மூப்படைந்து நலிவும் தளர்வும் முற்றிலும் அதனை ஏதாவது வழிகள் மூலம் மெருகூட்ட முயற்சி செய்கிறான். ஆனால் எவ்வளவு காலம் மரணத்தை இவ்வாறு பின்போட முடியும்? யமனின் ஆணை பிறந்ததும் ஒவ்வொரு வரும் பிரிந்து செல்ல நேரிடும் மரணத்தை எதிர்கொண்டு நிற்க முடியாது. பதவி, பெருமை, வலிமை என்பன மறைந்து விடும். இதைக் கருத்தில் உணர்ந்து மனம், வாக்கு காயங்களை தூய்மையாக்கி உயிர்களெல்லாவற்றிற்கும் பணி செய்வதன் மூலம் பரமாத்மாவை அடைய முயற்சி செய்யுங்கள். தேகத்தை இப்பணிக்கு உதவும் வாகனமாகப் பாதுகாக்க வேண்டும். ஆனால் நீங்கள் இத்தேகமுமல்ல. இத்தேகம் நீங்களுமல்ல என்பதை நினைவுறுத்திக்கொள்ளுங்கள் ''தத்வமஸி'' ''நீங்களே அது.'' இதுவே மிக உயர்ந்த புனிதமான மஹா வாக்கியம். நீங்களே அழிக்க முடியா ஆத்ம தத்துவமாகும். இவ்வாத்ம தத்துவத்திற்காகவே இத்தேகம் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது ஆகவே பரமேஸ்வரனை இப்பொழுதே, இங்கேயே அடையும் முயற்சிக்கு இத்தேகத்தை அர்ப்பணித்து, தியாகம் புரிய எந்நேரமும் ஆயத்தமாக நீங்கள் இருக்க வேண்டும் உலக நலனைப் பேணு

வதற்காக இத்தேகத்தின் மீது உங்கள் அதிகாரத்தைக் கையாளுங்கள். இறைவனால் உங்களுக்கு அளிக்கப்பட்ட வெறும் கருவியே இத்தேகமாகும். அது அதன் குறிக்கோளுக்காகப் பணியாற்றட்டும்.

எக்காரணத்திற்காக இக்கருவியளிக்கப்பட்டுள்ளதோ, அக்குறிக்கோளை அடைந்து, அனுபூதி பெறுமட்டும், தேகம் அங்கஹீனமுறுது, காயப்படாது, விழிப்புடன் அவதானித்துப் பாதுகாப்பது உங்கள் கடமையாகும். குளிர்காலத்தில் குளிரின் கொடுமையிலிருந்து தேகத்தைக்காக்க கம்பளி ஆடை அணியப்படுகிறது. குளிர் தணிந்ததும் அவை ஒரு பக்கமாக ஒதுக்கி விடப்படுகின்றன இவ்வாறே லௌகீக வாழ்வெனும் குளிர்ப்புயல் எங்களைச் சற்றேனும் பாதிக்காவிடில் இந்தப் பஞ்ச பூதங்களாலான தேகத்தின் அவசியம் ஏற்படாது. தேகத்திற்கு அப்பாலான நிலையைப் பற்றி மாத்திரமே ஒருவர் நினைவாக இருப்பார்.

மழை வருகையில் பூமியும் வானமும் சோனுமாரி மழையில் ஒன்றுகக் காட்சிதரும். அக்காட்சி மூலம் தன்னுடன் உங்களை இணையுமாறு சிருஷ்டி கூடச் சொல்லித்தரும் அருமையான ஒரு அழகுக் காட்சி அது. ஒருவர் கற்க வேண்டிய மூன்று பாடங்கள் உள்ளன. உலகப் பொருட்கள் நிலையற்றதென்றும் பணியாளென்ற பாத்திரமே மனிதன் என்றும், கடவுளே எஜமானென்பதுமாகும். இச்சிருஷ்டியே பூஜை. மனிதனே வழிபடுபவன், வழிபடப்படுபவன் இறைவனே, இவற்றைக் கொண்டு வாழ்க்கை என்னும் விளையாட்டு விளையாடப்படுகிறது.

புருஷோத்தமனை மனிதன் வெவ்வேறு உருவங்களில் பூஜையும், பணியும் புரிந்து வழிபடும் வண்ணம், மனிதனைச் சூழ புதுப்புது உலகப் பொருட்களை அவர் அளித்து வருவது கண்டு மனிதன் உவகையுற வேண்டும். புதுப்புதுச் சந்தர்ப்பங்களைக் கொடுக்குமாறு அவன் வேண்டுவதுடன் தனது கைகளுக்குக் கிட்டும் சந்தர்ப்பங்களினால் மகிழ்வுற வேண்டும். இம்மனப்பான்மை எல்லையற்ற ஆனந்தத்தை அளிக்கும். இம்மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை வாழ்தலே பேரானந்தமாகும்.

சூரிய உதயத்திலிருந்து அஸ்தமனம்வரை செய்வனவற்றை இறை வழிபாடாக அர்ப்பணிக்க வேண்டும். அன்றலர்ந்த மலர்களைக் கொய்து அவை தூய்மையாகவும் வாடாதுமிருக்க எவ்வளவு சிரத்தை தேவையோ அவ்வாறே தூய்மையான அப்பழுக்கற்ற கடமைகளைச் செய்ய இடைவிடாது முயற்சி எடுக்க வேண்டும்.

மனக்கண்முன் இவ்வாறு நோக்கித் தினமும் வாழ்க்கையானது இவ்வகையில் அமைந்து வாழப்படின் அது இறைவனுக்கு இடை விடாது நீண்ட காலம் செய்யும் ஒரு பணியாக அமைந்துவிடும். ''நான்'', ''நீ'' என்னும் உணர்வுகள் விரைவில் மறைந்து விடும். 'நான்' என்பதன் சுவடுகள் முற்றுய் ஒழிக்கப்பட்டுவிடும், வாழ்வெல்லாம் இதனுல் ஹரிபாராயணமாகி விடும். நான் சேவை செய்பவன். இவ்வுலகமே அர்ப்பணிக்கும் பொருள். இறைவனே வழிபாட்டு நாயகன். இத்தகைய சிந்தனையும் உணர்வும் செயல்பாங்கும் ஒருவன் பெற்றிடின் ''எனது'', ''உனது'' என்னும் வேறுபாடுகளெல்லாம் மறைந்தோடி விடும்.

05. பக்தியினதும் ஞானத்தினதும் ஒற்றுமை

பக்திக்கும் ஞானத்திற்குமிடையே வேறுபாடேதும் இல்லை. சகுண நிலை எப்படி நிர்க்குணமாக மாறுகிறதோ பக்தியும் அவ் வாறே ஞானமாகிறது. கர்மம், பக்தி, ஞானம் மூன்றும் வேரு னவை என்பதை நான் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இவற் றில் ஒன்று முதன்மையானதென்றும் மற்றது இரண்டாவதென் றும் அடுத்தது மூன்ருவதென்றும் பாகுபடுத்த எனக்கு விருப்ப மில்லை. இம்மூன்றினதும் ஒரு கலப்பையோ அல்லது இம்மூன்றும் ஒன்ருன சேர்க்கையையோ (சம்யுச்சய) நான் ஏற்றுக் கொள் ளப் போவதில்லை. கர்மாதான் பக்தி; பக்திதான் ஞானம்; மைசூர்ப்பாகுத் துண்டம் ஒன்று இனிமையும், நிறையும் உருவ மும் கொண்டுள்ளது. இம்மூன்றையும் ஒன்றிலிருந்து மற்ருென் ருகப் பிரிக்க முடியாது. ஒரு துண்டில் உருவத்தையும் இன் னென்றில் நிறையையும் இனிப்பை மூன்றும் பகுதியிலும் எம் மால் காண முடியாது; நாவில் அதனைப் போட்டவுடனேயே, சுவை அறியப்பட்டு, நிறைகுறைந்து உருவம் மாறி இவ்வாறே இவ்வெல்லா நிகழ்ச்சிகளுமே ஒரே கணத்தில் நிகழ்ந்து விடுகின் றன. இவ்வாறே ஜீவன், ஆத்மா, பரமாத்மா இவை மூன்றும் வேறல்ல. இவையெல்லாம் ஒன்றேயானவை. ஆகவே சேவை, பிரேமை, ஞானம் இம்மூன்றினுலும் ஒவ்வொரு செயலும் நிறைந் திருக்க வேண்டும். இன்னெரு வகையில் விளக்கின் வாழ்க்கைப் பணிகளின் ஒவ்வொரு பிரிவும் கர்மம், பக்தி ஞானத்தினுல் நிறைந்திருக்க வேண்டும் இது ஒன்றே புருஷோத்தம யோகம் என அழைக்கப்படும். வெறும் வார்த்தைகளே உதிர்க்காது அதனை செயலில் செய்து காட்ட வேண்டும் பக்தியும் ஞானமும் நிறைந்து சாஸ்வதமாக விரிவடைந்து கொண்டிருக்கும் இருதயத்தைக் கொண்டு இடைவிடாது சாதனை மேற்கொள்ள வேண்டும். இறை

திருநாமத் தேனின் இனிமையே வாழ்க்கையின் கவர்ச்சிமிக்க தோற்றமாகும். நாமத்திலுல் கிட்டும் உள் மகிழ்ச்சி புறவாழ்வில் கிட்டும் மகிழ்ச்சிக்கு இணையாகும்.

தான் ஆற்றும் பணியை இறைவனுக்கு ஒருவன் அர்ப்பணிக்கையில் அவனது சுவார்த்த (நன்மை) பரார்த்த (உயர்ந்த நன்மை) பரமார்த்த (அதி உயர்ந்த நன்மை) என்பன ஒன்றுகி விடும். ''நான்'', ''நீ'' என்பன முதலில் 'நாம்' என ஒன்றுகின்றன. அடுத்து நாமும் அவனும் ஒன்றுகிறது. ஜீவனனது (நான், ஒவ்வொரு ஆத்மா) முதலில் சிருஷ்டியுடனும் (பிரகிருதி, நீங்கள்) அதன் பின்னர் பரமாத்மாவுடனும் (பரமாத்மா, அவன்) ஒன்றுகக் கலக்க வேண்டும். இதுவே ஓம் தத் சத் என்னும் மந்திரத்தின் முக்கியத்துவமாகும்.

இன்று இருப்பதும் நேற்று இருந்ததும் நாளை இருக்கப் போவதும் ஓம் தத் சத் தேயாகும். ''அவனும்'', ''நானும்'' என்றும் உள்ளவர்கள். சாதனையும் என்றுமுள்ளது. தனது கிரணங்களிலிருந்து சூரியன் வேறுபடாதும் பிரியாதும் எவ்வாறுள்ளதோ அவ்வாறே சாதகனும் எச்சூழ் நிலையிலும் சாதனையற்று இருத்தலாகாது. இவ்வாறு தனது சாதனையில் சாதகன் தொடர்ந்து பிணைத்துக் கொண்டாலேயே 'ஓம்' உடன் அவன் ஒன்றுகி விட்டதாகக் கருதப்படும்.

06 வாழ்க்கையின் கடமைகள்.

ஒழுக்கமாக வாழ்வதாலும், தன் கடமைகளைச் செய்வதனாலுமே ஒருவரின் இருதயத்திலுள்ள களங்கம் கழுவப்படுகிறது. இளைத்துக் களைப்படையும் நேரமொன்று மனிதனிடம் தோன்றும். அப்பொழுது அவன் பிரார்த்திக்க வேண்டியது, ''பிரபுவே நிலைமைகள் எனது சக்திக்கு அப்பால் கட்டுக்கடங்காது போய் விட்டன. இனிமேலும் முயற்சியெடுப்பது பெரும் பழுவாக இருக்குமென நான் உணர்கிறேன், ஹே.! பிரபு எனக்கு சக்தியையருள்வாயாக''.

ஆசிரியர்களின் வினுக்களுக்கு மாணுக்கர்கள் விடையெழுதுகையில் அவ்வாசிரியர் எவ்வாறு எட்டத்தள்ளி நிற்கிறாரோ அதே போல எட்டத்தில் நின்றவண்ணம் இறைவனும் மனிதனின் முயற்சிகளை முதலில் அவதானிக்கிறார். போகப் பிணைப்பை அகற்றி நற்கருமங்களிலும் சேவைகளிலும் எப்பொழுது மனிதன்

ஈடுபடுகிறானே அப்பொழுது அவனை உற்சாகப்படுத்தும் வண்ணம் கடவுள் அவனுக்கு அண்மையில் வருகிறார் தனது எஜமானனின் அதிகாரங்களையும் தன்மீதுள்ள கட்டுப்பாடுகளையும் அறிந்துள்ள சேவகனைப்போல, பூட்டப்பட்டுள்ள கதவின் வெளிப்புறத்தில் காத்து நிற்கும் சூரிய நாராயணனைப்போன்று இறைவனும் காத்து நிற்கிறார். தான் அங்கு வந்து காத்து நிற்பதை கதவில் பலமாகத் தட்டியோ அல்லது உரக்கக் கூவியோ இறைவன் அறிவிப்பதில்லை. அவர் சும்மா காத்து நிற்கிறார். கதவு எப் பொழுது எஜமானனால் சற்று திறக்கப்படுகிறதோ அப்பொழுது சூரியன் வேகமாக உள் நுழைந்து அங்குள்ள இருளை உடனே உள்ளிருந்து அகற்றுகிறார். அவரிடம் உதவி கேட்ட கணமே மனிதனுக்கு உதவி புரிய அவனருகே கைகளை அகல விரித்தபடி அவர் காத்து நிற்கிறார். ஆகவே இறைவனைப் பிரார்த்திக்கும் விவேகமும் அவரை நினைவு கூர ஞானமுமே மனிதனில் வேண்டப்படுவது.

07. சத்குணமே ஞானம்

தெளிவு பெறுதலே ஞானமெனப்படும். ஆனால் அது புத்தி சாதுரியமான ஒரு செய்கை மட்டுமல்ல. நாவில் உணவை வைப்பது மாத்திரம் உண்ணுதலல்ல. உணவு மெல்லப்பட்டு, விழுங்கப்பட்டு, சமிபாடடைந்து இரத்தத்தில் கலந்து தசையாயும் எலும்பாயும், சக்தியாயும், திறனுயும் மாற்றப்பட்டாலன்றி உண்ணும் செய்கையால் பிரயோசனமில்லை. இவ்வாறே தெளிவான விளக்கம் அல்லது ஞானமும் வாழ்வின் எல்லாக் கால நேரங்களிலும் பரவிப் புத்துயிர் ஊட்ட வேண்டும். புலன்கள், உறுப்புகள், இவற்றினூடாக எல்லாக் கர்மேந்திரிய ஞானேந்திரியங்களினாலும் இவ்விளக்கம் வெளிப்படுத்தப்பட வேண்டும். இவ்வுயர்ந்த நிலைக்கு மனிதன் சென்றடைய வேண்டும்.

வெறுமனே சுற்றுக் குவிப்பது ஞானமல்ல சத்குணம் ஒன்றே ஞானமாகும். சேவையாற்றுவதற்காக ஒருவர் சொற்ப போகத்தில் ஈடுபட வேண்டியுள்ளது. அத்தகைய போகம் ஞானத்தின் ஒரு பகுதியாகும் இத்தேகம் என்னும் இயந்திரம் தொழில் புரிய அன்னம் என்னும் எரிபொருளைப் பயன்படுத்த வேண்டும். அன்னம் யக்ஞமல்ல, ஆனால் யக்ஞம் புரிய அது உதவுகிறது. எனவே உணவுக்கெலிக்கு தினை அளிக்கும் உதர போஷணையாக உணவுண்ணலை ஒருவர் கேலி பண்ணலாகாது. அது வழிபாட்டின் ஓர் அங்கமாகும்.

பூக்கொய்து விக்கிரகத்தின் மீது சாத்துவது வெறும் பூஜையாகாது. பூவைக் கொடுக்கும் மரத்தைக் காக்க உழைக்கும் தோட்டக்காரனும் வழிபடுபவனே. அன்னம் ஊட்டப்பட்டாலேயே தேகம் தொழில் புரியும். தியாகத்துக்கான வழிமுறைகளுமே யக்ஞமாகிறது.

இங்கு கூறப்படும் மூன்று பொருட்களுக்கு ஆற்றப்படும் கர்மங்களெல்லாமே தியாகமாகும். அவையாவன: இறைவனை வழிபட சமூகத்தைப் பயன்படுத்துதல்; சமூகத்தில் சாந்தியையும், நீதிநெறியையும் நிலைநாட்டல்; தேகத்தின் தொழில்களை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துதல் என்பனவாகும். முதலாவது யக்ஞமென்றும், இரண்டாவது தானமென்றும், மூன்றுவது தவம் என்றும் அழைக்கப்படும். மனிதனின் கடமைகள் முழுவதும் இம் மூன்று தேவைகளுக்குட்பட்டே ஆற்றப்பட வேண்டும்

08 சத்தியமே கடவுள்

இந்நிலையை அடைவதற்கான அத்திவாரம் நீதியும் நெறியும் மிகுந்த வாழ்வே. இத்தகைய வாழ்வோ சத்தியத்தையும் அசத்தியத்தையும் பகுத்தறிவதில் தங்கியுள்ளது. சிப்பியை அகற்றி அதனுள் இருக்கும் முத்தை எடுப்பது போன்றது இது. சத்தியம் என்னும் சாரத்தை எடுத்துக் கொண்டு சக்கையை எறிந்துவிட வேண்டும். அத்தோடு திருவருளும், ஒவ்வொருவரின் முயற்சியும், இரண்டும் இருக்க வேண்டும். தேகமும், ஆத்மாவும் வேறானவை என்னும் மேன்மையான பாடத்தை இடைவிடாது ஒவ்வொருவரும் அப்பியசிக்க வேண்டும், பயன் தரும் உயர்ந்த பயிற்சி இதுவாகும். லௌகிகமாயிருப்பினும், ஆத்மீகமாயிருப்பினும் இவற்றின் எல்லா நிலைகளுக்கும் இத்தகைய விவேகம் அவசியம். சிருஷ்டியிலும் வாழ்விலும் அழிவிலும் இருக்கும் சத்தியத்தை, இறைவனேவடிவான சத்தியத்தை அறிந்துணர்வதற்கு இது இன்றியமையாததாகும்.

இப் பரம்பொருளுக்கு பணி செய்வதற்கு உண்ணும் உணவில் தூய்மையை அனுசரிக்க வேண்டும் உணவாயின் அது எத்தகைய தரம் கொண்டதென்பதேயல்லாது அதன் அளவு முக்கியமல்ல. உணவின் அளவு கூட புறக்கணிக்கு மொன்றல்ல ஆனால் உணவு ஏன் அவசியம்? பணி செய்வதற்குத் தேவையான சக்தியைப் பெறுவதற்காக அது தேவைப்படுகிறது. சேவை யக்ஞம் பலனளிக்க வேண்டுமாயின் உணவு அவசியம். அவ்வுணவு சுத்தமானதாயிருக்க வேண்டும். உணவைப் பற்றிய இவ் வம்சத்தினை கவனிக்க வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொருவரும் தத்தம் பழக்கங்களையும் குணங்களின் போக்குகளையும் தொடர்ந்து கவனிக்க வேண்டும். அப்போது சரீரப்பற்று அகன்று ஆத்மானந்தம் பெறும் முயற்சி இலகுவாகிறது இத்தகைய கடமைகளை, உண்மையாக விடுதலையை மனிதன்பெற முன்பு செய்தாக வேண்டும். ஏனெனில் இத்தகைய ஆத்மீக வாழ்வு மூலமே அவன் தூய்மையடைவதுடன் அத்தூய்மையான இயல்பினால் மாத்திரமே பரமாத்மாவை அவனால் அறிந்துணர முடிகிறது. இவ்விதமான கடமைகளில் ஈடுபடாது பரமாத்மாவைத் தன்னால் அறிய முடியவில்லையே என்று அவன் கூக்குரலிட்டு அழுவதில் எவ்வித பயனுமில்லை.

இத்தகையதான ஆத்மீக வாழ்வையும் அதன் தூய்மையையும் அனுபவ மூலமறியாது ஆத்மீக உழைப்பின் பெறுமதியை இவ்வுலக வாழ்க்கையில் ஒருவரால் புரிந்து கொள்ள முடியாது. ஆத்மீக உழைப்பின் பெறுமதியைப் பற்றித் தெரிந்து கொண்ட பின்னரே அந்த முயற்சி செய்ய முடியுமென்று ஒருவர் கூறுவது, நீச்சலைப் பற்றிக் கற்றுக் கொண்டதன் பின்னரே நீரில் இறங்க முடியும் என்று ஒருவர் கூறுவதையொப்பது. மிதவையொன்றை உடலுடன் பிணைத்துக் கொண்டு நீரில் இறங்கிய பின்னரே நீச்சலைக் கற்றுக் கொள்ளமுடியும். இவ்வகையில் மனத்துடன் மிதவையொன்றைக் கட்டிக் கொண்டு எதுவித பயமுமின்றி ஆத்மீக உழைப்பில் இறங்குங்கள். அதன் பின்னர் ஆத்மீக உழைப்பின் பெறுமதியை நீங்களே புரிந்து கொள்வீர்கள். ஆன்மீக மார்க்கத்தின் தன்மையையும் அதன் தகைமைகளையும் அம்மார்க்கத்தில் பயணம் செய்தவர்களால் மாத்திரமே அறிந்து கொள்ள முடியும் சத்தியம், விவேகம் என்னும் மார்க்கம் பரமாத்மாவிடம் இட்டுச் செல்லும் என்று அவர்கள் அறிவார்கள். இம் மார்க்கத்தில் காலடி எடுத்து வைக்காதவர்களாலும் இப்படி ஒன்று இருப்பதாகக் கூட தெரியாதவர்களாலும் இதனைப் பற்றித் தமக்கும் பிறருக்கும் விளக்கிக் கூற ஒருபோதும் முடியாது.

பரமாத்மா ஒன்றே உண்மையானது. பரமாத்மாவே சத்தியம். பரமாத்மாவே அன்பு. சத்தியமாகவும் அன்புமயமாகவும் அவரைத் தியானியுங்கள். நீங்கள் தியானிக்கும் ஸ்வரூபம் எவ்விதமாயினும் அதன் மூலமும் அவரை அடைய முடியும். சத்சங்கத்தில் என்றும் இருங்கள். இச் சத்சங்கத்தினால் விவேகமும் வைராக்கியமும் நன்கு நிலைநாட்டப்பட்டு வளர்ச்சியடையும். இது ஜீவனுக்கு வலுவூட்டி அகச்சாந்தியை உங்களுக்கு வழங்கும். இதன் பின்னர் பரமாத்மாவோடு உங்களது மனம் ஒன்றுபடக் கலந்து விடும்.

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள முழுத்திறனையும் முழுப் பலத்தையும் பயன் படுத்தி சத்தியத்தையே பேசியும் அதன் வழி நடந்து கொண்டும் உங்களது செயல்களெல்லாவற்றையும் செய்யுங்கள். ஆரம்பத்தில் நீங்கள் தோல்வியுற்று கஷ்டங்களையும் துயரங்களையும் சந்திக்க நேரிடும் ஆனால் இறுதியில் நீங்கள் வெற்றி பெற்று ஆனந்தமடைவீர்கள். (சத்தியமேவ ஜயதே ந இன்ரிதம் என்ற வாக்கை இங்கு நினைவு கூருகிறேன்) உங்களது ஒழுக்கத்திலும் நீங்கள் வாழும் வாழ்க்கை முறையிலும் சத்தியத்தை நீங்கள் அடைய முடியும் பரமாத்மாவை அறிந்துணர முடியும்.

09. அகங்காரம் அசாந்தியைத் தருவிக்கிறது.

மனிதன் கணக்கற்ற பல்வேறு சுய நல பழக்கங்களையும் தன்மைகளையும் தன்னிடத்தில் உருவாக்கி வளர்த்துத் தனக்குத் தானே அசாந்தியை ஏற்படுத்திக் கொள்கிறான். பதவியில் ஆசை, மேலதிகமான அதிகாரத்தைச் சேர்க்கும் பேராசை, பலத்தில் பேராசை, ஒரு முடிவும் நிறைவுமற்ற விடயங்களில் பேராசை இவற்றிலிருந்தே அத் தாண்டுதல் உருவாகிறது. உண்மையில் திருப்தியான ஒரு நிலையை மனிதனால் ஒருபோதும் பெறமுடியாது. எல்லாம் வல்ல தன்மை சர்வேஸ்வரன் ஒருவருக்கேயுரியது. தான் சகலகலாவல்லவன் அல்லது முழுச் செல்வங்களுக்கும் அதிபதி அல்லது எல்லா அறிவும் கொண்டவன் அல்லது சாஸ்திரங்கள் எல்லாவற்றிலும் கரை கண்டவன் என்றோ ஒருவர் பெருமைப் படலாம். ஆனால் இவற்றையெல்லாம் அவர் யாரிடமிருந்து பெறுகிறார்? அது கிடைக்கும் ஊற்று இன்னும் உயர்ந்ததாகும். இவையெல்லாம் தன் சுயமுயற்சி சுய உழைப்பு தனது அயரா உழைப்பு என்பனவற்றால் சம்பாதிக்க முடிந்ததாக அவன் உரிமை கூறலாம். ஆனால் இவற்றையெல்லாம் ஏதோ ஒரு உருவில் அல்லது வேறு வழிகளில் யாரோ ஒருவர் நிச்சயமாக அவனுக்களிக்கிறார். இது அவன் தட்டிக்கழிக்க முடியாத ஒன்று. அதிகாரங்கள் முழுவதும் பதவி பலம் எல்லாம் உண்டாவதற்கான ஊற்று சர்வேஸ்வரனே. இத்தகைய சர்வவல்லமையைப் புறக்கணித்து தான் அடைந்த சொற்ப அதிகார பலம் கூட தனதே என்று தன்னைத்தானே ஏமாற்றுவதே சுயநலமும், ஆணவமும், பெருமையும், அகங்காரமுமாகும்.

அதிகார சக்தி பெற்ற வாகனமாக ஒருவர் உண்மையில் இருப்பின் சத்தியம், கருணை, அன்பு, பொறுமை, சகிப்பு, பெருந்தன்மை என்னும் குணங்களால் அவரை அறிந்து கொள்ளலாம்.

இவை எங்கே வாசம் செய்யினும் அங்கே அகங்காரம் குடிபுக முடியாது. அங்கே அதற்கு இடமே கிடையாது. எனவே இவற்றை வளர்க்க இவற்றைத் தேடுங்கள்

ஆத்மாவின் பிரகாசத்தை அகங்காரம் மூடியுள்ளது ஆகவே அகங்காரம் ஒழிந்தால் கஷ்டங்களெல்லாம் முடிவுற்று, அசாந்தி அகன்று பேரானந்தம் கிட்டும். மூடுபனியானது எவ்வாறு சூரியனை மறைத்துள்ளதோ அவ்வாறே அகங்கார உணர்வும் பேரானந்தத்தை மறைத்துள்ளது கண்கள் திறந் திருப்பினும் ஒரு துண்டு துணி அல்லது காகித அட்டை, பார்வை திறமாகவும், பிரயோசனமாகவும், தொழில் படுவதைத் தடுக்கிறது. அவ்வாறே மனிதனின் சுயநலம் என்னும் திரை மற்றெல்லாவற்றிலும், உண்மையாக. அருகே உள்ள இறைவனை அவன் காணமுடியாதவாறு தடுக்கிறது. நீண்ட வருடங்களாக வருந்தி தியாகம் புரிந்து பெற்ற உயர் பண்புக ளெல்லாவற்றையும் சாதகர்களும், சந்நியாசிகளும், பக்தர்களும், துறவிகளும், தேகப் பற்றின் மூலம் நழுவ விட்டுவிடுகிறார்கள். முக்தியின் பேரானந்தம் இல்லாத அதிகார பலம் சுவரற்ற அடித்தளம் போன்றது வெறும் புலமையால் யாதொரு பயனு மில்லை. ஒருவர் தினமும் அனுசரித்து வாழ வழிகாட்டும் தத்து வங்களே வேதங்கள். உபநிடதங்கள், சாஸ்திரங்களாகும் எனவே புலமையும் வாக்குவன்மையும் எத்தகையதாயினும் இவ்வனுஷ்டானமின்றி அவை பெரும் கழிவுகளே. வேதங்கள் உபநிடதங்கள், சாஸ்திரங்கள் இவற்றின் உபதேசங்களை தனது வாழ்வில் புகுத்த ஒருவர் செய்ய வேண்டியது "எனக்குத் தெரியும்" என்னும் உணர்வை நீக்கி உண்மையான சாரத்தை நோக்கி கண்களை அகலத் திறந்து அகநோக்கில் இருப்பதே. பேரானந்தத்தை அப்பொழுதே ஒருவரால் பெறமுடைய முடியும்.

மழை பத்து அலகுகள் பெய்யும் என்று பஞ்சாங்கம் காட்டினாலும் அதனை பத்துத் தடவை மடித்து பிழிந்தாலும் ஒரு துளி மழைகூடப் பெறமுடியாது. பஞ்சாங்கத்தின் குறிக் கோள் மழையைத் தருவதல்ல. அது மழைபற்றியும் அதன் அளவைப் பற்றியுமான செய்தியை மாத்திரமே வழங்கும். பத்து அலகு மழை அதன் பக்கங்களில் காணப்படாது. மேலே தென் படும் மேகங்களிலேயே மழை இருக்கும். அவ்வாறே சாஸ்திரங் களும் தத்துவம், இயமம், நியமம், கர்மங்கள் இவை பற்றிய செய்தியை மாத்திரமே வழங்கும். வேதங்கள் உபநிடதங்கள்,

சாஸ்திரங்களின் மேன்மையான தன்மைகளெதுவெனில் சாந்தியையும் விடுதலையையும் பெறவேண்டிய வழிகளை அவை போதிப்பதேயாகும். ஆயினும் இந்நூல்களை ஒன்று சேர்த்துப் பிழிந்தால் பேரானந்தமளிக்கும் வகையில் இவற்றில் பேரானந்தம் நிறைந்திருப்பதில்லை. அவற்றில் கூறப்பட்டபடி மார்க்கத்தையும், வழியையும், லட்சியத்தையுமே ஒருவர்கண்டு கொள்ள வேண்டும். அம்மார்க்கத்தில் இறங்கி அதன் வழியில் சென்று குறிக்கோளை ஒருவர் அடைய வேண்டும். இதனை விட்டு "எனக்கே எல்லாம் தெரியும்" என்னும் பெருமையையும் நான் எனும் உணர்வையும் அது உருவாக்கின் அவரது வீழ்ச்சியை தடுக்கவே முடியாது. இந்த அறியாமை மரணத்தை உண்டாக்கிவிடும். இந்த அபாயத்தை அறிந்துணர்தலிலேயே விடுதலையின் மர்மம் அடங்கியுள்ளது. இந்த அபாயத்தை விலக்காவிடின் மறு பிறப்பைத் தடுக்க இயலாது

இவை எல்லாவற்றையும் புரிந்து பின்னர் ஆன்மீகப் பயிற்சியில் நீங்கள் அமிழ்ந்து விட்டால் உலகமும் அதன் துன்பங்களும் உங்களைப் பாதிக்கா. இவ்வுண்மைக்கு அப்பால் நீங்கள் இருந்தால்தான் துன்பத்திலும் வேதனையிலும் புரண்டு நீங்கள் கஷ்டங்களை அனுபவிப்பீர்கள். சந்தையிலிருந்து எட்ட ஒருவர் வருகையில் அதன் ஓசை புரியாத, உரத்த தொனியிலேயே அவருக்குக் கேட்கும். ஆனால் சந்தையில் அவர் நுழைந்த கணமே வெவ்வேறு வித பேரம், அங்கு பேசப்படுவதை தெளிவாக அவரால் வேறுபடுத்த முடிகிறது. இவ்வாறு பரமாத்மாவின் உண்மையை நீங்கள் அறியும்வரை உலகத்தின் ஓசைகளில் நீங்கள் வசப்பட்டு திகைத்து நிற்பீர்கள் ஆயினும் ஆத்மீக முயற்சியில் நீங்கள் ஆழமாக இறங்கிய கணமே எல்லாம் தெளிவாகத் தெரிவதுடன் உங்களுள் ஞானம் மலரும். அது வரையில் வீண் விதண்டாவாத சச்சரவுகள், பகட்டுக்கள், அகங்காரங்கள் என்னும் ஓசைகளினால் நீங்கள் பீடிக்கப்பட்டிருப்பீர்கள்.

10. பக்தி மார்க்கத்தில் சாதகன்

பக்தி மார்க்கம் மூலமாக அமரத்துவத்தைத் தேடும் ஒவ்வொரு சாதகர்களும் பின்வரும் குண இயல்புகளைப் பெற்றிருக்க வேண்டும். இவ்வுலகக் கொடுமைகள், சச்சரவுகள், பொய்மைகள், இவற்றினின்றும் அவர்கள் விலகி சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை இவற்றை அனுசரிக்க வேண்டும். இதுவே உண்மையான பக்தி மார்க்கம் எனப்படுகிறது. இறைவனுடன் ஒன்றறக் கலக்கவும், உலக நலனை நாடவும் விரும்புவோர் புகழ்ச்சி,

இகழ்ச்சி, போற்றுதல், தூற்றுதல், செல்வம், வறுமை என்ப வற்றை பெறுமதியற்றவையாகக் கருத வேண்டும். தங்களுள் உறையும் உண்மையின் மீது உற்சாகத்துடன் நம்பிக்கையைத் தளராது வைத்து தங்கள் ஆத்மீக உயர்ச்சிக்கு அவர்கள் அர்ப் பணிக்க வேண்டும். அவதார புருஷரோ, மகாபுருஷரோ எவரா யினும் எவருமே இகழ்ச்சி, பழிச்சொல் இவற்றினின்றும் விடுபட முடியாது. ஆயினும் அவர்கள் குனிந்து விடுவதில்லை சத்தியத் தையே அவர்கள் பிடித்துக் கொள்கிறார்கள். அச்சுறுத்தல்களுக்குச் சத்தியம் ஒருபோதும் விட்டுக் கொடுப்பதில்லை. தாங்கொணாத் துயரத்தினூடு தாம் கடந்து சென்ற பின்னரே மஹான்கள், அவதாரபுருஷர்களின் உண்மை இயல்பினை பழிச்சொல் கூறுபவர் களும், குற்றம் குறை காண்பவர்களும் கண்டுணர்ந்து இவர்களும் அப்பெரியோர்களை போற்றத் தொடங்கி விடுவார்கள். அறியாமை என்னும் பலஹீனமே இத்தோல்விக்குக் காரணம். எனவே இத்தகைய சஞ்சல மனமும் அறியாமையும் கொண்டவர்களிட மிருந்து சாதகன் விலகி நின்று தனக்குள்ள நம்பிக்கையையும் விசுவாசத்தையும் பற்றி அவர்களுடன் அளவளாவுதலாகாது. தெய்வீக நூல்களிலும், சத்சங்கத்திலும் என்றும் அவன் அமிழ்ந்து இருத்தல் வேண்டும். அதன் பின்னர் ஆத்ம விடுதலை, அனுபூதி நிறைவு, ஆத்மீகத் தொடர்பினால் கிட்டிய உற்சாகம் இவற்றைக் கொண்டு சாதகனால் எவ்விதமான கூட்டத்தினருடனும் உறவாட முடிவதுடன் தானே கண்டுகொண்ட சத்தியத்தில் அவர்களின் மனத்தைத் திசை திருப்பி விடவும் முயற்சி செய்யலாம்.

நற்பணிகளில் ஈடுபட்டு, முத்திப்பாதையில் செல்வோர்களில் மூன்று தரம் உண்டு.

01. அமைதியின்மை, இழப்புக்கள், துயரங்கள் இவற்றினால் முயற்சியை ஆரம்பிக்க பயப்படுவோர் – இவர்கள் மிகக் கீழான அதம வகுப்பினர்.

02. பிரயாணத்தை ஆரம்பித்து சிறிது தூரம் சென்றதும் இடைஞ்சல்களாலும் ஏமாற்றத்தாலும் மனம் முறிந்து இடை யில் முயற்சியை கைவிடுபவர்கள் – இவர்கள் மத்திய வகுப்பினர்.

03. துயரம் எத்தகைய தன்மையாயினும், பாதை எத்தகைய கடினம் மிக்கதாயினும் தமது பாதையை, அமைதியுட னும், உற்சாகத்துடனும் கெட்டியாகப் பிடித்துக் கொள் பவர்கள் – இவர்களே உண்மையாக உயர்ந்த வகுப்பினர். உத்தம வகுப்பினர். இத்தகைய சிரத்தையும் நம்பிக்கையும் உறுதியுமே ஒரு பக்தனின் சிறப்பம்சங்களாகும்.

நிலையான பரிபூரண ஆனந்தத்தைப் பெறும் வழிவகைகளை இவ்வுலகப் பற்றிற்கும், நிலையற்ற இன்பக் கவர்ச்சிக்கும் பணயம் வைத்து விடாதீர்கள். உங்களின் ஆத்மீகப் பணிகளில் பக்தியுடன் ஈடுபடுங்கள்.

நம்பிக்கையும் உறுதியுமின்றி பரமாத்மாவை அடைய முடியாது. பிரேமையின் மூலமே சிரத்தையைப் பெறலாம். சிரத்தையின் மூலமே ஞானம் உதயமாகும். ஞானத்திலிருந்தே பரபக்தி பெறப்படுகிறது. பரபக்தியிலுலேயே பரமாத்மா அடையப்படுகிறது.

அப்படியானுல் பிரேமை எவ்வாறு வளர்த்துப் பேணப்படுகிறது. இருவழிகளில் அது முடிகிறது.

01. பிறர் குற்றங்கள் எத்துணை பெரிதாகிலும் அதனைப் பெரிதுபடுத்தாது அற்பமாகக் கருதவும் உங்கள் தவறுகள் எவ்வளவு குறைவாயிருப்பினும், புறக்கணிக்கத்தக்கதாயிருப்பினும் அவற்றைப் பெரிதாகக் கருதி, அதற்காக வருந்தி மீண்டும் அதனை செய்யாத துயர உணர்வுடன் ஏற்றுக் கொள்ளவும். இவ்வழிகளிலுல் நீங்கள் பெரிய தவறுகளையும் குற்றங்களையும் வளர்க்காது சகோதர மனப்பான்மையையும், சகிப்புத்தன்மையையும் வளர்த்துக் கொள்ளலாம்.

02. உங்களுக்கு நீங்கள் ஆற்றும் பணிகளிலும் மற்றவர்களுக்கு செய்வதிலும் இறைவனே எங்கும் நிறைந்துள்ளார் என்று எண்ணியபடி செய்யுங்கள். அவர் பார்க்கிறார், கேட்கிறார் எல்லாவற்றையும் அறிகிறார். நீங்கள் எது பேசினும் உங்கள் வார்த்தை ஒவ்வொன்றையும் இறைவன் கேட்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். வாய்மையையும், பொய்மையையும் பகுத்தறிந்து சத்தியத்தையே பேசுங்கள். நீங்கள் எது செய்யினும், சரி எது, பிழை எது என்பதைப் பகுத்தறிந்து சரியானதையே செய்யுங்கள். இறைவனின் சர்வவல்லமையை ஒவ்வொரு கணமும் அறிந்து கொள்ள முயலுங்கள். ஜீவன் குடியிருக்கும் ஆலயமே தேகம். எனவே அவ்வாலயத்தில் எது நிகழினும் அது ஜீவனைச் சார்ந்ததே. இவ்வாறே உலகமும் இறைவன் உறையும் கோயிலாகும். அங்கு நடப்பவை நல்லதோ தீயதோ அவை அவரையே சார்ந்ததாகும். ஜீவனையும் தேகத்தையும் பற்றி அவதானித்த கருத்திலிருந்து, இறைவனையும் உலகையும் பற்றிக் காண முடியாத உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஜீவனுக்கும் இறைவனுக்குமிடையிலான உறவை, இவை இரண்டுக்குமிடையேயான பிணைப்பை, பின்வரும் மூன்று முக்கிய கருவிகளைக் கொண்டு, எவராலும் விளங்கிக் கொள்ள முடியும்.

01. பற்று வெறுப்பற்ற மனம்.

02. பொய்ம்மையிலுல் களங்கமடையா வாக்கு.

03. குழப்பங்களிலுல் அழுக்கடையாத் தேகம்.

ஆனந்தமும் அமைதியும் புறப்பொருட்களில் தங்கியிருப்பதில்லை. அவை உங்களிடமே உள்ளது. ஆனால் மக்கள் தம் மடமையிலுல் இன்றே நாளையோ விட்டுப் பிரியப் போகின்ற உலகிலிருந்து இவற்றைத் தேடுகின்றனர். எனவே சீக்கிரம் விழிப்படையுங்கள். எல்லாவற்றினதும் சாரமான அழியாச் சத்தியத்தை அறிய முயலுங்கள். பரமாத்மாவே உருவான பிரேமையை அனுபவிக்க முயலுங்கள். ஒவ்வொரு திருப்பு முனையிலும் பகுத்தறிந்து சத்தியத்தை ஏற்று ஏனையவற்றை விலக்கி விடுங்கள். உலகப் பற்றுக்கள் ஒருவரின் பார்வையில் இருக்கும்வரை துயரத்திலிருந்து அவரால் மீளமுடியாது.

11. உருவ வழிபாடு:

உருவ வழிபாட்டைத் தூற்றுவோர் பலர். ஆனால் உண்மையில் அதன் அடிப்படையானது பிண்டத்தில் மனிதன் அண்டத்தைக் காணும் நிறனேயாகும். உருவவழிபாட்டின் பெறுமதி மனிதனின் அனுபவத்திலுல் நிரூபிக்கப்படுகிறது. அது மனிதனின் கற்பனைப் புலத்தில் தங்கியிருப்பதில்லை. இறைவனின் விராட் வடிவத்தில் காணப்படுவதே உருவ வடிவத்திலும் குறையாது மாசுக்கலப்பற்றுக் காணப்படுகிறது.

எக்காரணத்திற்காக கவிதைகளில் உருவகம், உவமைகள் இருக்கின்றதோ அதே போன்ற நோக்கிற்காகவே உருவங்களும் பணி புரிகின்றன. அவை விளக்கமும், விரிவும் நல்கித் தெளிவையுண்டாக்குகின்றன.

பொருட்களின் வடிவமைப்பிலுலன்றி அவற்றின் உறவிலுலேயே ஆனந்தம் மனிதனிடம் நிலை நிறுத்தப்படுகிறது. ஒரு தாய்க்கு அவளின் குழந்தையைத் தவிர வேறு எக்குழந்தையும் ஆனந்தமளிக்காது. இவ்வாறே ஒவ்வொருவருக்குள்ளும் எல்லாவற்றிலும். பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளுடனும் இத்

தகைய உறவை, ஈஸ்வர பிரேமையை ஒருவர் நிலைநாட்டிக் கொண்டால் ஆஹா! அது எத்தகைய புளகாங்கிதம்மிக்க அனுபவத்தை ஒருவருக்களிக்கும். இதனை உணர்ந்தவர்களாலேயே புரிந்து கொள்ளமுடியும்.

12 கல்வி

வேதங்களையும், புராணங்களையும் வாசித்தும் கேட்டும் அறியலாம்; கடவுளின் நாமமோ உச்சரித்தும் கேட்கவும் வேண்டிய தொன்று. நோய்கள் சிலவற்றிற்கு வெளிப்பரிகாரமாக மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. ஏனைய நோய்களுக்கு அவை உள்ளுக்கும் பரிகாரமாக அளிக்கப்படுகின்றன. ஆனால் இந்த சம்சாரச் சக்கரமான எவருக்கும் பொதுவான பவரோகமென்னும் நோயிற்கு வெளி, உள் பரிகாரமாக சிரவணமும், கீர்த்தனமும், ஏனைய மருந்துகளும் சிபாரிசு செய்யப்படுகின்றன. இறைவனின் நாமத்தை ஒருவர் உச்சரிப்பதோடு அதனைச் செவிமடுக்கவும் வேண்டும். இறைவனது திருநாமத்தை ஒருவர் உச்சரித்து செவிமடுக்க வேண்டும். இறைவனின் அருளையும் குருவின் அருளையும் பக்தர்களின் அருளையும் சாதகன் பெற்றடைய வேண்டும். ஆயினும் இன்னுமொரு அருளான உள்ளுணர்ச்சியின் கிருபையை அதாவது அந்தக் கரணத்தின் அருளைப் பெருவிடில் இக்கிருபையினால் எதுவித பயனுமில்லை. இவ்வருளில்லையேல் அவன் நரகத்தைச் சேர நேரிடும். மற்றெல்லாம் ஒருவித பயனுமளிக்காது.

இறைவனின் திருவருள் இலகுவில் பெறக்கூடியதொன்றல்ல. நான் செய்கிறேன் என்று ஒருவரைக் கூறவைக்கும் நான் எனும் உணர்வு அதாவது அகங்காரமானது இருதயத்திலூன்றியிருக்கும். அது வேரோடு கல்லி எறியப்பட வேண்டும். கல்வியறிவிருப்பினும் இல்லாவிடினும் கடவுளை அறிய விழையும் பூரணமான உந்துதல் உணர்வு ஒருவரிடம் இருக்க வேண்டும். இறைவன் தன் குழந்தைகள் மீது ஒரே விதமான பிரேமையைக் கொண்டுள்ளார். ஏனெனில் ஒளியின் இயல்பு பிரகாசமளிப்பதே. இவ் வொளியைப் பயன்படுத்தி எவரும் நூல்களைக் கற்கவும் தினசரிக் கடமைகள் எதுவாயினும் அவற்றைச் செய்யவும் முடியும் இவ் வழியில் இறைவனின் நாமத்தை ஸ்மரித்தபடி இறைவனை அடைவதில் ஒருவர் முன்னேற முடிகிறது. மற்றவரோ நிய கருமங்களில் ஈடுபடக்கூடும் இவ்வொளிப் பிரகாசத்தை எப்படி நீங்கள் உபயோகிக்கிறீர்கள் என்பதில் இவையாவும் தங்கியுள்ளது. ஆயினும் இறைவனின் திருநாமமோ என்றும் எக்காலமும் அப்பழுக்கற்றது.

13. சனாதனக் கல்வியின் அவசியம்

எண்ணற்ற கலைகள் நுண்வேலைகள் விஞ்ஞானம் இவற்றில் பயிற்சியை மனிதர்கள் பெற்றிருக்கவில்லையா? கணக்கற்ற இயந்திரங்களை அவர்கள் உருவாக்கவில்லையா? தொன் நிறைக்கணக்கில் அந்த அறிவை அவர் சேர்த்து வைத்திருக்கவில்லையா? ஆயினும் மகிழ்ச்சியுடனிருக்கத் தேவையான மன அமைதியை அவனால் பெறமுடியவில்லை. இதற்குப் பதிலாக கழிந்து செல்லும் ஒவ்வொரு தினமும், இக்கல்வியோ, மனிதனை நீரின் மிக ஆழத்துள் இழுத்துச் செல்ல, அமைதியோ அவனிடமிருந்து மிக எட்டத்திற்குச் சென்று கொண்டிருக்கிறது.

இதற்கான காரணத்தை இவ்வாறு கூறலாம். இக்கலைகளும் விஞ்ஞானமும் தற்காலிகமான பெறுமதியை மாத்திரமே பெற்றிருக்கின்றன. இவ்வியந்திரங்கள் உலக சுகத்தை ஊட்டுகின்றன. இவ்வறிவோ தற்காலிகமான நிலையற்ற பொருட்களைப் பற்றியது. பிரபஞ்சத்தின் மிகவும் உள்ளான மர்மத்தை இத்தகைய கல்வி புலப்படுத்தாது. மர்மங்களெல்லாவற்றையும் புலப்படுத்தும் மர்மம் ஒன்றுள்ளது. இவ்விடைஞ்சலை தீர்த்துவிடின் எல்லாவற்றிற்கும் தீர்வு உண்டாகிறது. சிக்கல் மிகுந்த முடிச்சொன்றுள்ளது. அதனை அவிழ்த்துவிடின் ஏனைய முடிச்சுக்களைத் தளர்த்திவிடலாம். விஞ்ஞானமொன்றுண்டு. அதில் புலமை பெற்றால் ஏனையவற்றில் புலமை பெறமுடியும். இத்தலையாய விஞ்ஞானமே சனாதனக் கல்வியாகும்.

ஒரு மரத்தை அழிப்பதற்கு அதன் ஆணிவேர் வெட்டப்பட வேண்டும். அம்மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாகக் களைவதன் மூலம் அதனை அழிக்க முனைவதினால் ஒரு பயனும் இல்லை. அச்செயல் நீண்ட நேரத்தை செலவாக்குவதுடன் பயனளிக்காத செயலாகியும் விடும். ஆதியில் இருந்த ரிஷிகள் இக்கல்வியை அறிந்திருந்தார்கள். ஆனால் இந்தியர்களோ அதனை தமக்குச் சொந்தமாகவும் தமதாகவும் உரிமை பாராட்ட வெட்கப்படுகிறார்கள். அவர்கள் தம் தவவலிமையால் இறைவனைக் கண்டு அவரின் அருளைப் பெற்றார்கள். தாம் கண்டறிந்த விஞ்ஞானத்தைப் பயமின்றி அவர்கள் போதித்தார்கள். இந்நூல்களை ஆராய்ந்தறிந்த ஏனைய நாட்டின் நாட்டம்மிக்கோர்கள் உலகம் முழுவதற்கும் இந்தியா வெளிச்சம் மிகுந்த பாதையைக் காட்டியுள்ளதாகக் கூறினர். இது யாவருமறிந்த உண்மை. வீட்டிற்கு ஒளியை விளக்கு வழங்குகிறது. விளக்கின் அடிப்பாகத்திலோ

இருள் வட்டம் ஒன்று நிழலாடுகிறது. இந்தியா அப் பொக்கி ஷத்தைப் பற்றி அறியவோ பேணவோ தெரிந்திருக்கவில்லை. இது விதியின் விளையாட்டு என்று கூறிவிட்டு நாம் பேசாதிருக்க லாகுமா?

முற்காலங்களில் தூய்மை மிகுந்த சுற்றுடலில் பரிசுத்தமான இடத்தில் இந்தியர்கள் அமர்ந்து தமது அன்றாட சந்தியாவந் தனக் கிரியைகளைச் செய்து வேதங்கள் உபநிடதங்கள் இவற்றின் போதனைகளைப் பயில்வதிலும் கற்பதிலும் அமிழ்ந்திருந்தனர். பிறருக்கு வழிகாட்டவும் தம் உள்ளுணர்வுள் இவ்வனுபவங்களை மீளக் கொண்டுவரவும் அவர்கள் தமது அனுபவங்களைக் குறித்து வைத்தார்கள் ஆனால் அவர்களின் குழந்தைகளும் பேரக்குழந்தை களும் தமது சுவாமி பீடத்தில் இந்நூல்களை வைத்துப் போற்றி வழிபட்டு வந்தனர். புறக்கணிப்பினால் அவை தூசிபிடித்து பழு தடைந்துவிட்டன இத்துப்போய் எலிகள் அவற்றை அரித்து விட்டன இவ்வித்துப்போன சுவடிகளை மேற்கிலுள்ள மாணவர் கள் தேடி, ஒப்பற்ற ஞானத்தின் விளக்கங்களின் பிறப்பிடத்தை யும், விலைமதிப்பற்ற அறிவு முத்துக்களையும் அவை கொண் டுள்ளன என்றறிந்து அவற்றைப் பயபக்தியுடன் தத்தம் தலை களில் தூக்கித் தாங்கியவாறு பாரத கண்டத்தின் விலைமதிப் பற்ற பரிசு அவை என்று தமமுள்ளும் தமது குழந்தைகளுக்கும் புகழ்ந்துரைத்தனர். கண்களில் ஆனந்தக்கண்ணீர் மல்க நன்றி மிகுந்த இருதயங்களுடன் அவற்றைக் கடல் கடந்து எடுத்துச் சென்றனர்.

இதுவரை இந்தியக் குழந்தைகள் என்ன செய்து கொண்டி ருந்தார்கள் என்பதை உங்களுக்கு நான் கூறட்டுமா? அவர் களோ அந்நூல்களின் பக்கங்களையும் திறக்கவில்லை. அதில் பொதிந்து இருப்பவற்றை ஆய்ந்தறியவுமில்லை. சொற்ப அளவு தானும் அவற்றில் சிரத்தை கொள்ளவில்லை. அவற்றை ஒரு கோடியில் ஒருவரே கற்பார்கள். ஆனால் அவரையும் கூட ஒரு மூடனாகவோ அல்லது ஒரு விபரீத புத்தியுள்ளவனாகவோ கேலி பண்ணுகிறார்கள். இந்நூல்கள் பொய்யும் புனைவும் நிறைந்தன வாகக் கருதி எள்ளி நகையாடி அந்நூல்களின் பழைமையையும் அதன் ஆசிரியர்களையும் பற்றி தர்க்கமும் புரிகிறார்கள். சமஸ் கிருத மொழியை, கற்பதற்கு கடினமானதொன்றாக அதனை ஒதுக்கி இவ்வரிய பொக்கிஷத்தை ஏனைய நாடுகளிலுள்ள பண்டி தர்களுக்குத் தானம் பண்ணி விடுகிறார்கள். இது எவ்வளவு வேதனை மிக்க காட்சி. தமது தாய் மொழியை அவர்கள் கற்றி

ருப்பதன் மூலமாவது ஏதோ ஒரு நன்றிக்கடனைச் செய்திருக்கலாம். ஆனால் இதனைக்கூட அவர்கள் செய்வதில்லை. புறக்கணிப்பே அது. எங்கும் புறக்கணிப்பு.

இல்லை, உலக இன்பத்தை நான் கண்டிக்கவில்லை. மக்கள் மகிழ்ச்சியாக இருப்பது எனக்கு சந்தோஷத்தையளிக்கிறது. ஆனால் தயைகூர்ந்து இத்தகைய மகிழ்ச்சி நிலையானது என்று நம்பி விடாதீர்கள். உலக இன்பத்தை நீங்கள் பெற, கலைகளையும், அறிவியல்களையும் (விஞ்ஞானம்) நீங்கள் கற்கவேண்டுமென்பதே நான் வேண்டுவது. ஆனால் இத்தகைய இன்பம் நிலைத்திருக்காது என்று நீங்கள் எல்லாரும் நினைவில் கொள்ள வேண்டுமென்பதே நான் வேண்டுவது.

ஒரே ஒரு கல்வி மூலமே நிலையான மகிழ்ச்சியைப் பெறலாம். அது உபநிடதக் கல்வியாகும். அதுவே மோட்ச விஞ்ஞானமும். ரிஷிகளின் போதனையுமாகும். அது ஒன்றே மனிதனைக் காத்து அமைதியை அவனுக்களிக்க வல்லது. அதனை விட மேலான தொன்றுமேயில்லை. இது மறுக்க முடியாத உண்மையாகும் உங்கள் வேதனையும் இன்பமும் எத்தகைத்தாயினும், உயிர்வாழ விசேட திறமை மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட பாடங்கள் எத்தகைத்தாயினும், உங்கள் கண்ணோக்கை பிரம்ம வித்தையில் நிலைப்படுத்துங்கள். ஒழுக்கங்களைப் பயின்று வளர்க்காது புத்தியை மாத்திரம் கூர்மைப்படுத்தி வேறும் செய்திகளை மூளையில் சேகரிப்பதால் உலகில் முன்னேற்றம் ஏற்படாது. அதன் நலனுக்கும் கூட அபாயம் ஏற்பட்டு விடும்

ஆனால் ஒழுக்கங்களின் மீது தாம் கொண்டுள்ள நம்பிக்கையை தற்பொழுது மக்கள் இழப்பதாகத் தோன்றுகிறது. ஏனெனில் ஆத்மீக போதனைக்கோ அல்லது அதன் பயிற்சிக்கோ கல்வி எவ்வித இடமும் அளிக்காததனலாகும். சிறுவர் சிறுமியர்களது அழகிய நற்பண்புகளை உண்மையான கல்வி ஒருபோதும் திரிக்கவோ குலைக்கவோ மாட்டாது. மூளையுள் சுமை மிகுந்த குப்பையை நிரப்புவதுடன் அது திருப்திப்படுவதில்லை. மனிதனுக வேறுபடுத்திக் காட்டும் நற்பண்புகள் எல்லாவற்றினதும் வளர்ச்சிக்கு முழு இடம் கொடுக்கவல்ல கல்வி ஒன்றே பயனுள்ளது.

14. இப்புறவுலகு உண்மையல்ல

உண்மையில் மனிதர்கள் நிழலைப் பார்த்துவிட்டு அதுவே பொருளென்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நீளம், அகலம்,

உயரம் மொத்தம் இவற்றைக் கவனித்துவிட்டு தங்கள் முன்னர் பொருளொன்று இருப்பதாக விரைவாக முடிவெடுத்து விடுகிறார் கள். ஒரே தொடர்ச்சியான உணர்ச்சிகளையும் நினைவுகளையும் அவர்கள் அனுபவித்து அவையெல்லாவற்றையும் திரட்டி அவற்றை உற்பத்தி செய்யும் பொருட்கள் இருப்பதாக அனு மானிக்கிறார்கள். தோற்றம் உண்மையானதெனக் கருதுவது தவருக ஞானமெனப்படுகிறது. எவ்வாறு அது ஞானமாக இருக்க முடியும். ஒருவரது பிம்பம் எவ்வாறு அவராக இருக்க முடியும்? அவர் பிம்பம்தான் என்று கருதினாலும் அதனை அறிவு என்று கூறிவிட முடியுமா? தற்போது அறிவு என்று கூறப்படு வது இத்தன்மையதே. பொருளாகக் காண்பதெல்லாம் உண்மை யன்று. அதன் உண்மையான விளக்கம் கண்டு கொள்ள முடியாதது.

'அஹம் பிரம்மாஸ்மி' (நானே பிரம்மம்) என்பதனை அத் வைதம் பயில்பவர் நம்புகிறார். இந்நம்பிக்கை அவருக்கு எப்படிக் கிடைத்தது? ஏன் இவ்வாறு அவர் கூறுகிறார்? அவரைக் கேட் டால் 'ஸ்ருதியே அவ்வாறு கூறியுள்ளது அதனால் குரு அவ்வாறு கற்றுத் தந்துள்ளார்' என்று விடையளிப்பார். ஆயினும் இவற்றிலிருந்து கற்றறிவதனால் இம்மஹா வாக்கியத் தைக் கூறும் தகுதியை ஒருவர் பெற்றுவிட முடியாது. அஹம், பிரம்மம், அஸ்மி என்னும் மூன்று சொற்களிலும் கரை கண்டு விட்டால் ஒருவர் பிரம்மமாகி விட முடியுமா? கணக்கற்ற பிறவிகளில் செய்த இடைவிடா முயற்சியாலும் சாஸ்திரங்கள் கூறும் கடமைகளை பக்தியுடன் நிறைவேற்றுவதாலும் மனம் பரிசுத்தப்படுகிறது. அத்தகைய மனத்தில் பக்தி வித்துக்கள் துளிர்விடும். அத்துளிரைக் கவனமாக அறிவுடன் பேணின் மலர்கள் பூத்து பழங்கள் தோன்றிக் கனிந்து அவற்றில் இனி மையும் நறுமணமும் நிறைந்து விளங்கும். ஜீவராசிகளெல்லா வற்றிலும் திக்குத்திசைகளெங்கும் ஊடுருவி நிறைந்து காணப் படும் சத்சித் ஆனந்தமயமான பரமாத்மாவை இக்கனியை உண்டதும் மனிதன் அடைந்து விடுகிறான்.

'அஹம் பிரம்மாஸ்மி' என்னும் மந்திரத்தை தவறின்றி ஒரு வரால் உச்சரிக்க முடியும். சொல்லிலக்கணம் பிழையின்றி இருக்க லாம். ஆனால் உலகைப்பற்றி ஒன்றும் தெரியாது, 'நான்' என் பதைப் பற்றி உணராது, பிரம்மத்தைப்பற்றி வெறும் இருளி லும் ஒருவர் இருப்பின், ஞானியிடம் விளங்கும் ஒப்பற்ற ஆனந் தத்தை அவரால் ஆனந்திக்க முடியுமோ? சொல்லிலும் சொற்

பொருளிலும் புலமை பெறுதல் மாத்திரம் கணக்கிலெடுக்கப் படுவதில்லை. தன்னையறிதல், அனுபவம் – இவையே அதன் அடிப் படைகளாகும்.

களிமண் ஒன்றே உண்மையானது. களிமண்ணைப் பற்றிய அறியாமை என்னும் உணர்வாலேயே பானை என்னும் உணர் வும் உருவாகிறது. பானையின் ஆகுபொருளும் அதன் அடிப்படை யும் களிமண்ணேயாகும். களிமண்ணின்றி பானை எவ்வாறு தோன்ற முடியும்? காரணத்திலிருந்து காரியம் எவ்வாறு வேறு கக் காணப்பட முடியும்? அறியாமையில் மூழ்கியுள்ளவனுக்கே உலகம் பன்மையாகத் தோற்றமளிக்கிறது. பொருட்களெல்லாம் தோன்றுவதற்கேதுவான பிரம்மம் ஒன்றே உள்ளதாக ஞானி கருதுகிறான். ஆத்மா ஒன்றையே கண்டறிய அவனால் முடிகிறது. வேறொன்றையும் காண்பதில்லை, இதுவே அத்வைத அனுபவ மாகும்.

உலகம் நிஜமாயின் அது கனவற்ற ஆழ்தூக்கத்தில் அறியப் பட்டிருக்க வேண்டும். ஆனால் முற்றாக அதனை நாங்கள் உணர்வ தில்லை. ஆகவே தென்படும் இவ்வுலகம் கனவுலகைப் போன்றே அநித்தியமானது. மாயையினால் கயிறு எவ்வாறு பாம்பாகத் தோற்றமளிக்கிறதோ உலகமும் பிரம்மத்தில் அவ்வாறு தோற்ற மளிக்கிறது. பாம்பும் கயிறும் ஒரே நேரத்தில் தென்படுவதில்லை. கயிறு முழுவதுமே பாம்பாகும். இவ்வாறு முழுவுலகும் பிரம்மமே. இம் மாபெரும் நாம ரூபத் தோற்றம் அதுவே, ஆயினும், கற்பனையில் இவ்வாறு அறியப்பட்ட பன்மைத் தோற்றங்கள் அடிப்படையில் பொய்ம்மையே. பிரம்மம் ஒன்றே உண்மையானது.

கள் பானையொன்றில் ஆகாயம்பிரதிபலித்தாலும் அதனைக் கள் மாசுபடுத்துவதில்லை. இவ்வாறே தேகமெனும் இவ்வண்டி யிலும் மாசற்ற தூய்மையாய் ஆத்மா குடிகொண்டுள்ளது. செயல்களின் பலாபலன்கள் நல்லதோ, தீயதோ, தூயதோ, அழுக்கானதோ அவை காண்பவராகிய தேஹியுடனல்லாது தேகத்துடனேயே ஒட்டிக் கொள்கின்றன.

இத்தகைய ஞானம் பிறந்ததும் அதன் முன்னர் ஆகாமியம், சஞ்சிதம், பிராரப்தம் என்னும் மூன்று வகைக் கர்மங்களின் கரிய நிழல்கள் பறந்தோடி விடும். ஆம். பிராரப்த கர்மத்தைக் கூடத்தாண்டிக் கடந்து விடலாம். ஏனெனில் இறைவனின் சங் கல்பம் சர்வ வல்லமை கொண்டது. சர்வ வல்லமைக்கு எல்

ஆயோ வரையறையோ இல்லை இறைவனின் சங்கல்பத்தை சாதனை மூலம் நீங்கள் அடைந்தால் அச்சங்கல்பத்திலுள் பிரார ரப்தத்தின் மேல் நீங்கள் வெற்றி பெற முடியும். வேறென்றின் மூலமும் நீங்கள் விரக்தியடைய வேண்டாம்.

இவ்வுலகின் துயரங்களும் துன்பங்களும் அநித்தியமானவை. மாயையை ஒத்தவை. இப்பெரும் உண்மையில் உங்கள் மனதை இறுகப் பதித்து பக்தி என்னும் சாதனையில் பீடுநடை போடுங்கள்.

15. சம்ஸ்காரங்களைப் பொறுத்தே வாழ்க்கைப் பிரயாணம் அமைகிறது

பல்வேறு பணிகளிலும் தொழில்களிலும் மனிதர்கள் ஈடு பட்டுள்ளனர். இது எல்லோரும் அறிந்த உண்மை. இக்கர்மங் களின் எண்ணிக்கை பெரும் அளவு இருப்பதனால் மனிதனது நாளாந்தப் பணிகளுக்கு 24 மணி நேர அவகாசம் போதாது என்று சிலவேளைகளில் ஒருவர் எண்ணலாம். அருந்துதல், உண் ணுதல். கற்றல், நடத்தல், இருத்தல், கனவுகாணுதல், வெறுத் தல், புழுகுதல், மெச்சுதல், அழுதல், சிரித்தல், தலைமயிர் வாருதல், எதிர்பார்த்தல் என்னும் இவ் வெல்லாத் தொழிற்பாடு களும் முடிவற்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மனத்தோடு இக்கர்மங்களெல்லாம் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. இவை வாழ்க்கையை வெறும் சம்ஸ்காரங்களின் குவியலாக்கு வதுடன் ஒருவரது ஒழுக்கத்தையும் இயல்பையும் பாதிக்கின்றன.

நல்லவை, தீயவை என இரண்டு வகைக் கர்மங்களே உண்டு. மனித வாழ்வில் இவை இரண்டின் பாதிப்பையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தனது சிறு பராயத்தில் சிறுவனொருவனால் ஆற்றப்பட்ட கர்மங்கள் கரும்பலகையில் அவனால் எழுதிய எழுத் தினைப்போல் மறைந்துவிடும். ஒருவரின் சிறு பராயத்துச் செயல் கள் இவ்வாறு ஞாபகத்திலிருந்து நீங்குகையில் முற்பிறப்பு நிகழ்ச்சிகளை ஞாபகத்தில் எவ்வாறு இருத்த முடியும்? இவ்விளக் கம் ஒருபுறமிருக்க ஞாபகத்தில் இருந்த நிகழ்ச்சிகளே நடை பெற்றதாகவோ அல்லது அவை ஒருவரின் ஒழுக்கத்தை மாற்றி யமைத்ததாகவோ கருதுதல் தவறு. நடந்து முடிந்த செயல்களும், நிகழ்ச்சிகளும் பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளினால் மறதிக்குள் தள்ளப்பட்டவையும் அவற்றின் தாக்கங்களின் சுவடுகளை மனதில் பதியவைக்கின்றன. அவற்றின் மிச்சங்கள் அங்குள்ளன. தூங்கும்

நேரத்தில் ஞாபகசக்திக்கு ஒரு நாளில் நடந்த நிகழ்ச்சிகளை நினைவு மீட்கப் போனால் அக்கோரிக்கைக்கு, நடந்த சம்பவங்களில் முக்கிய மானதிலிருந்து, முக்கியமற்றது வரையிலுள்ள எதுவும் விடை யளிக்காது உள்ளே ஆழப்பதிந்தனவற்றை மட்டுமே அவர் மீள நினைவு கூர முடியும்.

ஒரு நாளொன்றின் நிகழ்ச்சிகளுக்கு இவ்வாறுனல் இன்பம் அல்லது துன்பத்துடன் தொடர்பற்ற நிகழ்ச்சிகள் எல்லாவற்றை யும் நீங்கள் மறப்பதனால் கடந்துவிட்ட கிழமை அல்லது மாதம் அல்லது வருடம் இவற்றில் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றி எத னைக் கூற முடியும். பிரதானமான நிகழ்ச்சிகளே தெளிவாகப் பதியப்படுகின்றன. ஏனையவை ஞாபகத்தெளிவின்றி மங்கி மறைந்துவிடுகின்றன. இச் சொற்ப நிகழ்ச்சிகளே சம்ஸ்காரங்க ளாகும்.

கணக்கற்ற கர்மங்களைச் செய்தல், எல்லையற்ற அறிவையும் அனுபவத்தையும் சேர்த்தல், விதம்விதமான பாடங்களை பல்வேறு வகைச் செயல்களிலிருந்து கற்றல் என்பனவற்றிலிருந்து தனது மூலதனமாக, பலமான ஆழவேர்விட்ட சக்திமிகுந்த நான்கு அல்லது ஐந்தையே மனிதன் தன்னுள் வைத்துக் கொள்கிறான்.

16. வாழ்வெனும் வியாபாரத்தில் அமிழ்ந்து மனிதன் வெறும் சம்ஸ்காரங்களையே சம்பாதித்துக் கொள் கிறான்

வியாபாரி ஒருவன் கிழமையொன்று அல்லது மாதமொன்று அல்லது வருடமொன்றின் முடிவில் தனது வரவு செலவுப் பத் திரிகையைத் தயாரிப்பது, ஒரே ஒரு இலக்கத்தை – தனது சம் பாதிப்பைக் காண்பதற்கே. இவ்வாறே கொடுக்கல் வாங்கல்க ளெல்லாம் முடிவுற்றதும் சொற்பமான சில சம்பாத்தியத்தில் இவ்வாழ்வெனும் வியாபாரமும் முடிவடைகிறது வாழ்வின்முடி வில் ஒரு சொற்ப அளவே ஞாபகத்தில் நினைவுகூரப் படுகிறது. முடிவு காலம் வரை நிலைத்திருக்கும் அனுபவங்களையும் வாழ்வு பூராவும் நடந்த நிகழ்ச்சிகளையும் ஒருவர் நினைவு கூரின் தம்முளர் வினுள் எழும் ஒன்று அல்லது இரண்டு நிகழ்ச்சிகளே அவருக்கு உண்மையாக ஆதரவளிப்பதும் அவரின் உண்மையான சம்பாத் தியமுமாகும்.

இதற்காக ஏனைய பணிகளும் பிற அனுபவங்களும் பய னற்றவை என்ற பொருளல்ல அவற்றை மறந்து விடுதல் அச் செயல்கள் நிறைவேற்றப்பட்டு விட்டன என்றும், அவற்றின் பெறுமதி உணரப்பட்டு விட்டனவென்றும் பொருளாகும்.

ஆயிரக்கணக்கான ரூபாய்களைக் கொண்டு வியாபாரம் செய்யும்போது ஒரு சில ஆயிரம் ரூபாய்களை இழக்கையில் இதயம் உறைவதும், ஒரு சில ஆயிரம் ரூபாய்கள் நயமேற்படின் இதயம் துள்ளிக் குதிப்பதும் நிகழ்கின்றன. வாழ்க்கை வியாபாரத்தின் கதை இதுவாகும். வாழ்வு பூராவும் நாவே ஒருவரின் எஜமானன் என்பதற்கு நிரூபணம் அவர் தனது மரணத் தறுவாயில் நாவின் ருசியைப் பேண விழைதலிலிருந்து புலப்படும். மரண வேளையில் ஒரு பெண் தன் குழந்தை மீது நினைவு அதனை சீராட்ட விருப்ப முறுவதற்குக் காரணம் குழந்தைப் பாசமெனும் சம்ஸ்காரம்; அவள் வாழ்வு பூராவும் முன்னணியில் நிகழ்ந்திருப்பதாலாகும். பிற அனுபவங்களெல்லாம் மறதியினுள் அமிழ்த்தப்பட்டுவிட்டன என்பதற்கு இது ஒரு அத்தாட்சியாகும்.

இவ்வாறு வாழ்க்கையின் சம்ஸ்காரங்களில் பலம் மிக்க ஏதாவதொன்றோ, அல்லது இன்னொன்றோ மரண காலம் வரை நிலைத்து நிற்கின்றன. வாழ்க்கை இத்தகையதே. இது கற்க வேண்டிய தொன்றாகும். இத்தகைய வாழ்க்கையில் ஆற்றிய கடின உழைப்பின் இறுதி விளைவு அவ்வாழ்வின் மரண வேளையில் நினைவுக்கு வரும் நிகழ்ச்சியே. மரண வேளைக்குகந்த சிறப்பான சம்ஸ்காரம் எது என்று நீங்கள் கருதுகிறீர்களோ அதனைப் பெற்றுக் கொள்ள வாழ்வின் முழு ஓட்டத்தையும் திசை திருப்புங்கள். அதன் மேல் இரவு பகலாகக் கவனம் செலுத்துங்கள். மரணத் தறுவாயில் எவ்வுணர்ச்சி முன்னிற்கிறதோ அதுவே வரப்போகும் வாழ்வில் மிகப்பலங்கொண்ட விசையுடன் தொழிற்படும். இவ்வுலக வாழ்க்கைப் பிரயாணத்திற்கும் இவ்வுண்மை வழிகாட்ட வேண்டும். ஏனெனில் இப்பிரயாணத்திற்கும் இதன் பின்னர் வரவிருக்கும் பிரயாணத்திற்கும் தேவையானதெல்லாம் சம்ஸ்காரங்களே.

எனவே உங்கள் ஞாபகக் கண்ணில் மரணம் தவிர்க்க முடியாதென்றும், எல்லோரும் நலமாக இருக்க வேண்டுமென்னும் விருப்பத்துடனும் சத்தியத்திற்கு இறுகக் கட்டுப்பட்டும், என்றும் சத்சங்கத்தை நாடியவாறும். மனதை என்றும் இறைவன் மேல் பதித்துக் கொண்டும் நாளையிலிருந்து உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் ஈடுபடுங்கள். தீய செயல்களையும் வெறுப்பையும், இம்சை மிக்க எண்ணங்களையும் தவிர்த்து உலகத்தின் மேல் பற்று வைக்காது வாழுங்கள். இவ்வாறு நீங்கள் வாழின் உங்களின் இறுதிக் காலம் தூய்மை, இனிமை, ஆசீர்வாதம் பெற்று விளங்கும். இத்தகைய இறுதி நிகழ்ச்சியை உறுதி செய்ய வேண்டுவது, வாழ்க்கை முழுவதும் கட்டுப்பாடுடன் முயற்சி செய்வதே. நல்ல

சம்ஸ்காரங்களை நோக்கி மனத்தைத் திருப்ப வேண்டும். தம்மைக் கடுமையாக ஒவ்வொருவரும் சோதித்துத் தம் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைத் திருத்த கடும் முயற்சியெடுக்க வேண்டும். தன்னிடத்தேயுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றை வெளிப்படுத்துதல் மறு பிறவிக்கு ஒப்பாகும். அதன் பின்னர் புதியதோர் சிறு பராயத்திலிருந்து புதிதாக மீள வாழ ஆரம்பிக்கிறான். இதுவே விழிப்பின் உண்மையான நேரமாகும்

வாழ்க்கையை மரணம் என்றும் பின்தொடருகிறது. ஆனால் மரணம் எனும் சொல் கூறப்படுவதைத் தாங்க முடியாது மனிதனுள்ளான். எவ்வளவுதான் தாங்க முடியாததொன்றாக இச் சொல்லிருப்பினும் ஜீவராசிகளொவ்வொன்றும் அந்நிகழ்ச்சிக் கண்மையில் ஒவ்வொரு கணமும் அண்மித்துக் கொண்டிருப்பினும் அச்சொல்லைச் செவிமடுப்பது மிக அமங்கலமானதொன்றாகக் கருதுகிறான் பிரயாணம் செய்வதற்காக பிரயாணச் சீட்டை வாங்கி புகையிரதத்தினுள் நீங்கள் நுழைந்த பின்னர் அமைதியாக நீங்கள் உட்கார்ந்திருந்தாலென்ன, அல்லது சாய்ந்து படுத்திருந்தாலென்ன அல்லது வாசித்துக்கொண்டிருந்தாலென்ன அல்லது தியானம் செய்தாலென்ன புகையிரதமோ நீங்கள் விரும்பினும் விரும்பாவிடினும் நீங்கள் இறங்குமிடத்திற்கே அது உங்களைக் கொண்டு சென்று விடும். அவ்வாறே ஒவ்வொரு ஜீவனும் தாம் பிறக்கையில் மரணத்திற்கான பயணச் சீட்டை வாங்கிக் கொண்டு பிரயாணத்தை ஆரம்பித்து தற்பொழுது வந்துள்ளார்கள். எனவே நீங்கள் கையாளும் கடின முயற்சிகள், பாதுகாப்புகள், முன்னெச்சரிக்கைகள் எத்தன்மைத்தாயினும் அவ்விடத்தை நீங்கள் என்றோ ஒரு நாள் சென்றடைந்தேயாக வேண்டும். எது நிச்சயமில்லாததெனினும் மரணம் நிச்சயமான தொன்று. இந்நியதியை மாற்றவே முடியாது.

தொடர்ச்சியான புதுப்புது சுகானுபவங்களை நாவிற்கும் செவிக்கும் கண்ணுக்கும் மனிதன் கற்றுக் கொடுத்துள்ளான். இவற்றிற்கெதிரான தன்மைகளையே இப்பொழுது மனிதன் இவற்றிற்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். நல்லனவற்றிடம் மனத்தைத் திருப்பிவிடல் வேண்டும். ஒவ்வொரு நிமிடமும் நடைபெறும் செயல்களை இவ்வாறு சோதிக்க வேண்டும். மனிதத் தன்மை என்னும் கற்பாறையில் செதுக்கும் உளியின் கைவண்ணமாக இச்செயல்களொவ்வொன்றும் திகழ்கிறது. கையசைவொன்றில் தவறேற்படின் அது கற்பாறையைச் சீர்குலைத்து, உருக்குலைத்துவிடும். எனவே ஒவ்வொரு நுண்ணிய செயலையும் மிகக் கவனத்துடனும் அவதானத்துடனும் சிரத்தையுடனும் ஆற்ற வேண்டும்.

நீரில் அமிழ்ந்து கொண்டிருப்பவனுக்கு ஒரு நாணல் தானும் ஏதோ ஒரு வகையில் உதவுகிறது அவ்வாறே சம்சார சாகரத்தில் தத்தளிக்கும் ஒருவனுக்கு யாதேனும் ஒருவர் பேசும் சில நல்வார்த்தைகள் கூட பெரிதும் உதவி புரியும். எத்தகைய நற்செயலும் வீணுவதில்லை ஏன் தீய செயல் கூட அப்படியே. ஏனெனில் அதுவும் அதன் பலாபலன்களைக் கொண்டுள்ளது. எனவே சிறிய அளவில்தானும் தீச்செயல்கள் புரிவதைத் தவிருங்கள். உங்கள் கண்களைப் புனிதமாகவும், செவிகளை இறைவனின் நாமங்களாலும், நற்செய்கைகளைப் பற்றிய கதைகளாலும் நிறைத்து பிறர் குற்றங்களைச் செவிமடுக்காது வைத்திருங்கள். நாக்கை, நல்வார்த்தைகளையும். அன்பான சத்தியம்மிக்க வார்த்தைகளையும் பேசும் பணியில் பயன்படுத்துங்கள். இறைவனை எந்நேரமும் உங்களுக்கு அது நினைவூட்டட்டும். இத்தகைய அயராமுயற்சி வெற்றியை உங்களுக்களிக்கும். இத்தகைய புனிதமான ஸம்ஸ்காரங்களைச் சம்பாதிக்க, உயர்ந்த எண்ணங்கள் உணர்வுகளின் தொடர்ச்சியான ஓட்டத்தை ஒருவர் நிலைநாட்ட வேண்டும்.

கைகளை நற்கர்மங்கள் புரியவே பயன்படுத்த வேண்டும். இறைவனின் நாமத்தை உள்ளே உச்சரித்தபடி வெளியே ஸ்வதர்மத்தைப்புரியுங்கள். கை சேவையில் மும்மரமாக ஈடுபட்டிருக்கையில் உங்கள் மனதோ இவையெல்லாவற்றிலும் பதிந்திருக்கலாம். இதனால் ஒரு தீங்கும் இல்லை, மலைச்சிகரங்களின் மீது மழை சோனுமாரியாகப் பொழிந்து இரு பக்கங்கள் வழியே நீர் வழிந்தோடுவதனால் அதிலிருந்து ஆறு உருவாக முடியாது. ஆனால் நீராவது ஒரே திக்கில் பாய்வதனால் முதலில் சிற்றோடையும் பின்னர் நீரோடையும் பின்னர் நீர்வீழ்ச்சியும் இறுதியில் வெள்ளம் பெருகும் நதியாகவும் உருப்பெற்று மழை நீர் சமுத்திரத்தையடைகிறது. ஒரே திசையில் பாயும் நீர் சமுத்திரத்தையடையும். நாலாதிசைகளிலும் பாயும் நீர் வற்றி மறைந்து விடுகிறது. சம்ஸ்காரங்களும் இத்தகையதே. இவ்வழியால் இன்றும் அடுத்து வேறுவழியினூடும் அவை வெறுமனே வந்து போயின் அவற்றினால் யாது பயன்? புனிதமான நற்சம்ஸ்காரங்கள் பூரணமாகப் பாய்ந்து நல்லெண்ணங்களென்னும் வயல்களில் தங்கியிருந்து இறுதியாக மரணத்தறுவாயில் பேரானந்தப் பெருங்கடலில் சங்கமமாக வேண்டும். இத்தகைய குறிக்கோளை அடைபவனே பெறுமதிவாய்ந்தவன்.

உளியினால் இருபது தரம் கற்பாறையொன்றை அடித்தாலும் அதனை உடைப்பதில் வெற்றிபெற முடியாதிருக்கலாம். அதனை

இருபத்தியோராவது அடி உடைத்துவிட முடியும். ஆனால் இதன் பொருள் அவ்விருபது அடிகளும் பயனற்றவையென்பதா? இல்லை. இறுதி வெற்றியில் அவ்வொவ்வொரு இருபது அடிகளும் தம் பங்கையளிக்கின்றன. இருபத்தியொரு அடிகள் எல்லாம் சேர்ந்த தன் பயனே இறுதி விளைவாகும். அவ்வாறு உள்ளும் புறமும் உலகோடு மனமும் போராடுகிறது. வெற்றி என்றும் உங்கள தல்ல என்று சொல்லத் தேவையில்லை. ஆனால் நற்கருமங்களி னலும் இறைபக்தியினால் மனத்தை நிரப்புவதனாலும் மனிதன் எல்லையற்ற பேரானந்தத்தைப் பெறமுடியும். வாழ்வின் ஒவ் வொரு க்ஷணத்தையும் அப்பக்தியினால் நிரப்புங்கள். அப் பொழுதே தீய தன்மைகள் பாதையில் குறுக்கிடமாட்டா அவனது மனம் இறைவனிலேயே ஒன்றி நிற்பதனால் நற்கருமங் களிலேயே அவன் கவர்ந்திழுக்கப்படுவான். சாதனைகளெல்லா வற்றின் நோக்கமும் மனத்தைத் துவம்சம் செய்வதே. இருபத்தி யோராவது அடியினால் எவ்வாறு கற்பாறை உடைகின்றதோ அவ்வாறே மனத்தினை ஒழிப்பதில் ஏதாவது ஒரு நற்கர்மம் வெற்றிபெறும் கடந்த காலங்களில் ஆற்றிய நற்கர்மங்கள் இவ் வெற்றிக்குப் பங்களிக்கின்றன. ஒவ்வொரு அற்ப விஷயமும் கணக்கில் கொள்ளப்படுகிறது நற்செய்கையொன்றுமே வீணுவ தில்லை.

ஆத்மீக வழியில் போராடுகையில் உங்களது காவலராகப் பரமேசுவரன் ஒருவரையே ஏற்க வேண்டும் குழந்தைக்கு உற் சாகம் ஊட்டுவதற்காக அதனை சில அடிகள் நடந்து திரும்பு மாறு தாய் செய்யினும் அது தரையில் மாத்திரம் விழுந்து விடாதவண்ணம் அவள் கவனித்துக் கொள்வாள். குழந்தை தடக்கி நிலை தவறின் அது தரையில் விழாதவாறு பின்னே சென்று அவள் தாங்கிக் கொள்வாள். ஜீவனை நோக்கி ஈஸ்வர னும் தனது கண்களை நிலை குத்தியவாறு வீற்றிருக்கிறார். மனிதன் என்னும் சாற்றடியின் நூலை அவர் தன்கையில் கொண்டுள்ளார். சிலவேளைகளில் அவர் அந்நூலிழையை ஒரு இழுவை இழுத்துவிடுவார். நூலைச் சிலவேளை லேசாக்கியும் விடுவார். ஆனால், அவர் எது செய்தாலும் மனம் தளராது சுதந்திரமாக இருங்கள். ஏனெனில் அந்நூலைப் பிடித்திருப்பவர் அவரே அந்நம்பிக்கையை என்றும் கொண்டிருக்க அவ்வுணர்வு கடினமடைந்து ஒரு சம்ஸ்காரமாக மாறி உங்களை பிரேமை என்னும் ரசத்தினால் நிரப்பும்.

பக்தி திருவருள் என்னும் பிணைப்பே இந்நூல், மேலே மிதக் கும் காற்றடி என்ற ஜீவி, ஈஸ்வரனுடன் பிணைக்கப்பட்டுள்

ளார். பக்தி, திருவருள் என்னும் பிணைப்பைத் தூண்டிக்காது, இறுகும் வண்ணம் நல்ல சம்ஸ்காரங்களையே நீங்கள் புரிந்தும் சம்பாதித்துக் கொள்ளவும் வேண்டும்.

ஒரு ஜீவியை ஆக்கவோ அழிக்கவோ சம்ஸ்காரங்களால் முடியும். ஜீவிகளெல்லாவற்றையும் குறிக்கோளை நோக்கிக் கொண்டு செல்லும் படிகளே அவை ஒரு ஜீவியை வேதனையிலும் இழப்பிலும் சம்ஸ்காரங்கள் மெல்ல நடக்கவைக்கின்றன. நற் சம்ஸ்காரங்களாலேயே இறைவனை ஒருவன் அடைய முடியும். எனவே சத்கர்மத்தில் முழுமூச்சுடன் ஒவ்வொரு ஜீவியும் ஈடுபட வேண்டும் சத்கர்மமே சாஸ்திரபூர்வமான பூஜையாகும். இறைவனை நினைவுகூர மிகச்சிறந்த வழி அதுவே. அதுவே மேலான பஜனையாகும் வேதமும் வேறுபாடுமின்றிப் பிரேமையை அது பரப்புகிறது. தனது கடமையாக ஜீவி செய்யும் பணி அது.

இத்தகைய கர்மங்களில் ஈடுபடுங்கள். இறை சிந்தனையில் தொடர்ந்து திளைத்திருங்கள். நீங்கள் சென்றடைய வேண்டிய லட்சியத்துக்கு இட்டுச் செல்லும் ராஜபாதை இதுவே.

17. மனித சமூகத்தின் தெய்வ மாதா சனாதன தர்மமே

இவ்வுலக தர்மங்களுக்கும் அறநெறிகளெல்லாவற்றிற்கும் சமயங்களெல்லாவற்றிற்கும் சனாதன தர்மமே தாயாகும். அத் தாயின் பிறந்தகம் பாரத தேசமே ஓ! பாரத மக்கள் எவ் வளவு பாக்கியம் செய்தவர்கள். எத்துணை சிறப்புமிக்கது இப் பாரத தேசம். சர்வேஸ்வரனின் தேகமே இம்முழு உலகும். அத்தேகத்தின் ஒப்பற்ற அங்கமான கண்களே பாரத தேசமாகும். கண்ணில்லாது தனக்கு எஜமானனுக தேகத்தால் முடியாதல்லவா, மேலும் வேதங்கள், சாஸ்திரங்கள் என்னும் இரு கண்களும் பாரத தேசத்திற்கு அழகூட்டுகின்றன எனலாம். இதனால் பாரதீயர்களால் பெறப்பட்ட சம்ஸ்காரங்களை வேறு எத்தேசத்தவர்களும் பெறவில்லை என்று ஐயமின்றி உறுதியுடன் கூறலாம். சமயங்களெல்லாவற்றினதும் உண்மையையும் சகிப்புத்தன்மையையும் போதிக்கும் சனாதன தர்மமே மானுட சமூகத்திற்குரிய தர்மமாகும். பல்வேறு இடங்களில் பிறந்து பல்வேறு மார்க்கங்களில் பாயும் நதிகள் இறுதியில் சமுத்திரத்தையே அடைகின்றன. அவ்வாறே பல்வேறு தேசங்களில் பிறந்து, பல்வேறு தர்மங்களைப் பயின்று பல்வேறுவகை வழிபாடுகள் மூலம் சமுத்திரமாகிய பரமாத்மாவை மக்கள் அடைகின்றனர். இப் பல்வேறு பாதைகளும் வெவ்வேறு திசைகளில் சென்றடையும் மத்திய

ஸ்தானமே சனாதன தர்மம். வாக்கில் சத்தியத்தைப் பேசியும், பொறுமை, கோபங்களை விலக்கியும் பிரேமை மிகுந்த இருதயத்துடன் எப்பொழுதும் இருப்பதனாலும் இச் சனாதன தர்மத்தைப் பல்வேறு சமயங்களைப் பின்பற்றுவோர் பயின்று கொள்ளலாம். இவ்வாறு சனாதன தர்மத்தைப் பயின்று அதில் பிறழாது வெற்றி பெறுவோரெல்லோருமே 'பாரதீயர்கள்' என்றழைக்கப்பட உரிமை பெறுவர்.

புராதன காலம் தொட்டு சமயங்களெல்லாவற்றிலும் மேன்மை பெற்று திகழ்ந்து வருவதுடன் தன்னை நிரந்தரமாக ஸ்தாபித்துக் கொண்டுமிருப்பது இந்து சமயமொன்றே. சரித்திர காலங்களினூடாக அழியாது உயிர் பிழைத்து வாழும் மக்கள் இந்துக்கள் ஒருவரே. இச்சமயத்தில் ஏனைய சமயங்களைவிட அன்பு, சமத்துவம், செய்நன்றி என்பனவற்றை வாழ்வு முழுவதும் மக்கள் கடைப்பிடித்து வந்துள்ளனர். தத்துவதர்சனங்களைக் கண்டு பிடித்தும் வேதங்கள் மூலமும் தமது தர்மத்தை இந்துக்கள் சம்பாதித்துக் கொண்டனர். ஆதியும் அந்தமுமில்லாத வேதங்களின் சாரத்தை அவர்கள் ஆழப் பருகியுள்ளனர். இத்துணை தெய்வீகமான வேதங்கள் உலகிற்கு மிகச் சிறந்ததொரு ஆத்மச் சுரங்கமாகும். தனது வயிற்றுள் ஒவ்வோர் பகுதியிலுமுள்ள பல்வேறு வகைக் கனிச் சுரங்கங்களை பூமி வெளிப்படுத்துவது போன்று, வேதங்கள், சாஸ்திரங்கள், உபநிடதங்கள் எல்லாவற்றினதும் தர்மங்களின் பிழிவாக சனாதன தர்மம என்னும் சுரங்கத்தை பாரத தேசம் கொண்டுள்ளது. பாரதீயர்கள் ஏதோ அதிர்ஷ்டம் செய்தவர்கள் போலும், பாரதீயர்களின் வசிப்பிடம் போன்ற சனாதன தர்மம் என்னும் சுரங்கம் எப்பொழுது வெளிவந்ததோ அக்கணம் முதல் சனாதன தர்மம் என்னும் குறிக்கோளுக்காக தலைவர்கள், சிந்தனையாளர்கள், விமர்சகர்கள், மகான்கள், ஆசிரியர்கள் முதலியோர் இப்பாரத தேசத்திலிருந்தே தோன்றிய வண்ணமுள்ளனர். இத்துணை பாரத தேசத்திலிருந்தே சுயநலமற்ற கர்ம யோகிகளும், ஞானிகளும் யோகிகளும் இச்சமயத்துடன் தொடர்புடைய திவ்விய புருஷர்களும் தோன்றியுள்ளனர். அனுபூதியினால் நிரூபிக்கப்பட்ட ஆத்மீக ஞானம் இவர்களாலேயே இத்தேசமெங்கிலும் பரவியது. இவ்வாறு சாரத்தைத் தன்னுள் கொண்டு சனாதன தர்மம் உலகம் முழுவதும் முன்னேறியது. ஆனால் அது எத்தேசத்தினை நோக்கிப் பரவினும் அதன் ஆதி வதிவிடம் பாரதம் ஒன்றே.

இன்றைய உலகைப் பாருங்கள். இயந்திரங்கள் மோட்டார் வாகனங்கள் ஏதாவதொரு வகை இயந்திரக் கருவிகள் என்பன ஒரு தேசத்தில் உருவாகி ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்

படுகின்றன. ஆனால் அவற்றின் பிறப்பிடத்தை மறக்க முடியாது. இத்தகைய மோட்டார் வாகனங்களும் இயந்திரங்களும் அவைகளின் அனுபவத்தின் அடிப்படையிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. அவ்வடிப்படையின்றி ஒன்றுமே செய்ய முடியாது. சனாதனதர்மமும் இவ்வாறே எழுந்தது. அதன் நீரூற்றிலிருந்து மகான்கள் மூலமும் அவர்கள் ஆக்கிய நூல்கள் மூலமும் பாரத தேசமும், பிறநாட்டு மக்களும் பயனடைந்தனர். எனவே ஆதி இருப்பிடத்தின் அடிப்படை புறக்கணிக்கமுடியாததொன்று இது நடைபெற முடியாததொன்று இப் புனித தர்மத்தைப் போற்றியும் பேணியும் வளர்த்த மகான்களின் பிறப்பிடமாகிய பாரத தேசத்தில் சனாதன தர்மத்தின் இனிமையைச் சற்றேனும் சுவைக்காதவர்களாலும், இதன் பொருளைப் புரியாதவர்களாலும் இத் தர்மத்தை வெறும் குதர்க்கமூலம் நாசம் செய்பவர்களாலும் பிறநாட்டு மக்களுக்கு இச்சனாதன தர்மம் தத்துக் கொடுக்கப் பட்டு தாமோ புதுவித வழிவகைகளை தமது தர்மமாக ஏற்றுக் கொண்டுள்ளதைப் பார்க்கையில் அது மிக வேதனையைக் கொடுக்கிறது. வழிகாட்டுவதற்கு முறையான வழிகாட்டிகள் இல்லாததே இதற்கான உண்மையான காரணமாகும் இத்தகைய வழிகாட்டிகள் இருந்தாலும் இவ்விதமான நவின போக்குகளினால் மக்கள் கவரப்பட்டு அவற்றுடன் ஒட்டிக் கொள்கிறார்கள். இவை உண்மையிலே பஜாரில் விற்பனையாகும் பகோடாக்கள் போன்றவை. அவற்றின் மணத்தினால் விவேகத்தைப் பயன்படுத்தாதவர்கள் கவரப்பட்டு அவற்றை வாங்குகின்றனர். தம் சுயதர்மம் சனாதன தர்மமாயிருப்பினும் புறத்தோற்றத்தில் பெறப்படும் கவர்ச்சி அவற்றில் இல்லாததால் சனாதன தர்மமானது அவர்களால் புறக்கணிக்கப் படுகிறது. இத்தகைய அலங்காரங்கள் உண்மைக்கு அவசியமில்லை. சுவையே முக்கியமானது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்னும் மூண்டுதலால் மக்கள் இன்று இயங்குவதே இதன் உண்மையான அடிப்படைக் காரணமாகும் சத்தியத்தை ஒதுக்கி பிறர் தர்மத்தை ஏற்கும் பழக்கம் தோன்றியுள்ளது இது பெரும் குற்றமாகும். வெளிப்பகட்டிலும் புறத்தோற்றங்களிலும் பாரதீயர்கள் கவர்ந்திழுக்கப்படுவது, தர்மத்திற்கு விரோதமாகும். சனாதன தர்மத்தைக் காட்டிலும் மேலான அல்லது அப்பாற்பட்ட சத்தியத்தையும் பரம பிரேமையையும், பிறதர்மமெதுவும் கொள்ளவோ, கொண்டிருக்கவோ முடியாது. சத்தியத்தின் உண்மை வடிவமே சனாதன தர்மம், அது எல்லோரின் பிறப் புரிமை – தெய்வீகத்தன்மைக்கு எல்லையொன்றும் இருக்கவே முடியாது. தெய்வீகம் ஒன்றே; அதற்கு இரண்டாவது இல்லை. அது அப்படிப்பட்டதுதானே.

இறைவனருள் பெற்றவர்கள், சத்தியத்தின் இயல்பை அறிந்தவர்கள், விடுதலை பெற்றவர்கள் இச்சனாதன தர்மத்தை அனுஷ்டித்து இப்பிறவியிலேயே முக்தி பெற்றவர்கள் ஆகிய எல்லோருமே பாரதியார்கள். இத்தெய்வீக நிலை பெற்றவர்களைப் பாரதியார்கள் சாதி, குலம், பால் வேறுபாடின்றி போற்றியுள்ளார்கள். இத்தகைய வரையறைகள் எல்லாவற்றையுமே அந்த நிலையிலுள்ள தெய்வீகம் எரித்துப் பொசுக்கிவிடும். அந்நிலையையடையும்வரை எல்லாம் சமமானவை என்று ஏற்றுக் கொள்வது முடியாததொன்றாகும். எனவே சனாதன தர்மத்தைப் பெற்றதுமே பயமின்றித் தீர்மானிப்பது அவசியம். பாரதியார்களின் பிறப்புரிமை இதுவேயாகும்.

வரலாற்றை அதன் ஆரம்பத்திலிருந்து பரிசீலித்தால் எத்தகைய மகான்கள் இந்துக்களின் எவ்வெப்பிரிவுகளில் தோன்றினார்கள் என்ற விவரங்களை அறிந்து கொள்ளலாம். அவதார புருஷர்கள், தெய்வங்கள், இராமர், கிருஷ்ணர், பலராமர், பரீட்சித்துப் போன்ற ஜீவன் முக்தர்கள், விசுவாமித்திரர் போன்ற ராஜ யோகிகள் ஆகிய எல்லோரும் க்ஷத்திரியர்களிலிருந்தே தோன்றினார்கள். பிரம்மரிஷிகள், மகாபண்டிதர்கள், சாஸ்திரவிற்பன்னர்கள், வேதரிஷிகள் பிராமணப் பிரிவிலிருந்து தோன்றினார்கள். பாரதம் பாகவதம் போன்ற இதிகாசங்களில் சூத்திரர்கள் முன்னணியில் திகழ்கிறார்கள். பகவானின் தலைசிறந்த பக்தர்களில் தாழ் குலத்தோரே பெரும் எண்ணிக்கையில் உள்ளனர். உலகத்தின் பாதிப்பற்று தெய்வீகத்தைப் பெறவும், பரமாத்மாவை அடையவும் ஒவ்வொருவருக்கும் தேவையானது சாதனையே. சாதிபோன்ற மற்றவை ஒருவருக்கும் தடையாகாது. ஆனால் அதற்குத் தேவையான திருவருளைப் பெறும் தகுதி ஒருவரிடம் காணப்பட வேண்டும். பயிற்சியில் கட்டுப்பாடும், ஒழுங்கும் ஒருவரிடம் காணப்பட வேண்டும்.

எனினும் இத்துணை புனிதமான பாரதியார்கள், தற்பொழுது எல்லையற்ற இழிவை இந்து சமயத்திற்கு ஏற்படுத்துகிறார்கள். மேலே கூறிய மஹாபுருஷர்களின் வாழ்க்கைக் கோட்பாடுகளைப் புறக்கணிப்பதாலும், அவர்களது வாழ்க்கையை அவதானிக்காமலும், அவர்களது போதனைகளைப் பின்பற்றாமலும் மாறும் உலகிற்கேற்பத் தம் வாழ்வின் போக்கை (விஞ்ஞானமே விபரீதபுத்தி) மாற்றுவதாலும், பெயருக்கும் புகழுக்கும் அடிமைகளாவதாலும் அதிகாரத்திற்கும் அந்தஸ்திற்கும் பேராசைப்படுவதாலும், சுயநல வழிகள் மூலம் தத்தம் மனைவி மக்களைப் பேணத் துடிப்ப

தாலுமே இவ்விழிவை உண்டாக்குகிறார்கள். இருந்தும் எல்லோரிடமும் சம அன்பு கொள்ளல், சுயநலமற்றிருத்தல், பிறர் நலன் பெருக்குதலில் ஈடுபடுதல், மனித சமூகத்திற்காகத் தம்மை அர்ப்பணித்தல், முற்றும் துறத்தல் ஆகிய தகைமைகளைக் கொண்டவர்களுக்கு இங்கு தட்டுப்பாடே இல்லை. ஆனால் அவர்கள் ஒடுக்கப்பட்டுள்ளனர். அவர்களைப் பாராட்டி உயர் அதிகார ஸ்தானங்களில் அவர்கள் அமர்த்தப்படவில்லை. ஏனெனில் இதனால் தீயோர், மூர்க்கர்கள் அதர்மக்காரர்கள் என்போருக்கு இடமில்லாது போய்விடும் என்னும் பீதியின் காரணமாகவே.

சமுத்திரம் எவ்வளவுதான் ஆழமும் அகலமும் உடைய தாயினும், கீழே பூமியதிர்ச்சியுற்றதும் சமுத்திர ஜலம் தாமாகவே பிரிந்து, தனது ஆரம்ப நிலைக்கு, குழப்பம் தணிந்ததும் அடைகின்றது. இவ்வாறே அதர்மம், அநீதி, சுயநலம், பகட்டு என்னும் பூமியதிர்ச்சியில் தாம் சிக்குறுது இச்சான்றோர்கள் இவற்றினின்றும் விலகியிருக்கிறார்கள். குழப்பம் தணிந்த சூழலே மீள உலகினுள் அவர்கள் நுழைகிறார்கள். நிலையற்ற அதிகாரமும் தற்புகழ்ச்சியும் நித்தியமற்றவை. ஆவது அழிவதற்காகவே என்று கூறுவதுண்டு. தற்போதுள்ள அமைதியின்மை அழிவேயன்றி ஆக்கமன்று. ஏனெனில் பாரதியார்களைப் பாருங்கள். ஆதியிலிருந்து தெய்வீக சிந்தனைகளுடனை தர்ம மார்க்கத்தில் சுயகட்டுப்பாட்டுடன் அவர்கள் வளர்ந்து நற்பெயருக்குக் கௌரவமளித்து, உபநிடதங்கள், சாஸ்திரங்கள், வேதங்கள் என்னும் மூலப்பாலை அருந்தி தம் தேசத்தை விட்டுவிரட்டப்பட்ட இனத்தவர்களையும் வரவேற்று உபசரித்து அவர்கள்மீது சமமாகப் பிரேமையைச் சொரிந்துவந்துள்ளார்கள் என்பதை, இன்றோ அவர்கள் அதிகாரத்திலும் சுயநலத்திலும் ஆசையுற்று தம் சொந்தச் சகோதரர்களையே குறை கூறுகிறார்கள். இன்னொருவரின் முன்னேற்றத்தைக் கண்டு ஒருவர் பொறுமையிழந்து எரிச்சலுடன் நோக்குகிறார். சுயநலப் பேராசையால் பைத்தியம் பிடித்துத் தம் சொந்தச் சகோதரர்களையே ஏமாற்றுகிறார்கள். தமக்கு நன்மை புரிந்தவர்களைத் தூரத்தே வைத்துள்ளனர். தத்தம் சுயநல முடிவினைப் பின்தொடருகிறார்கள். இந்து தர்மத்தில் இதுவரை கேள்வியுறுத தீய குணங்களைப் பெருக்குகிறார்கள். தவறான வழிகளையும் வாழ்க்கை வழிமுறைகளையும் பின்பற்றுகிறார்கள். பாபபீதி, தெய்வபயம், கட்டுப்பாடு, பக்தி சிரத்தை இவையற்றதனால் சச்சரவுக்கும் அசாந்திக்கும் உள்ளாகிறார்கள்; இந்த வீழ்ச்சி நம்பமுடியாதது.

இந்து சகோதரர்களே; பாரதக் குழந்தைகளே; சனாதன மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களே; பழைய வீரியம் மிக்க மானுடத் தன்மைகள் எங்கு சென்றன? சத்தியம் பொறுமை, அறம், ஒழுக்கம் இவற்றை நீங்கள் எப்போது ஏற்றுக் கொள் வீர்கள்? எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள், சத்தியம், தர்மம், சாந்தி என்னும் மாளிகைகளுடன் சுடர்விடும் இராம ராஜ்யத்தை மீண்டும் ஸ்தாபியுங்கள் உங்கள் பாரதீயச் சகோ தரர்களிடம் அன்பு கொள்ளுங்கள். சனாதன தர்மத்தைக் கடைப்பிடியுங்கள். கொழுந்து விட்டெரியும் அறியாமை, அசாந்தி, அநீதி, பொறுமை என்பனவற்றை பிரேமை, சகிப் புத்தன்மை, சத்தியம் என்னும் ஜலங்களால் அணையுங்கள். ஒருமையுணர்வைப் பெருக்குங்கள். எரிச்சல், கோபம் எல்லா வற்றையும் ஒதுக்கித் தள்ளி விடுங்கள். மகான்களின் தர்மத்தை யும் உயர்ந்தோரின் குணசீலங்களையும், இறைவனது அரசாட்சி யின் தன்மைகளையும் நினைவு கூருங்கள். ஒவ்வொருவரும் தத்தம் குற்றங்களைக் கண்டறிந்து பிறரிடம் குற்றங்காண்பதில் யாதொரு புண்ணியமும் இல்லை என்று புரிந்து கொள்ள வேண்டும் இச் செயல் காலத்தை விரயமாக்கும். அத்தோடு அது வாதப்பிரதி வாதங்களுக்கும் இட்டுச் சென்றுவிடும். எனவே இப்போக்கினை விட்டுவிடுங்கள். இச்சந்தர்ப்பத்தை நீங்கள் தவறவிடின் வேறு எதனைத்தான் உங்களால் செய்யமுடியும்? விரக்திக்கு ஒருபோது மாளாகாது கடந்து சென்ற அதர்மச் செயல்களுக்கு முற்றுப் புள்ளி வைத்தாகிவிட்டது என்று கூறுங்கள். இருதய பூர்வமாக நினைத்து வருந்தி இறைவழிபாடு, நற்கர்மங்கள், சகோதர அன்பு என்னும் மார்க்கத்தில் செல்லுங்கள். நிலையான ராமராஜ்யத்தை ஸ்தாபியுங்கள்.

சனாதன சாரதி ஆரம்பிக்கப்பட்டது, இந்த ராஜ்யத்தைப் பெறவே. இச்சாரதியின் போர்ப்படை இம்முயற்சிக்கு சொல்லி லும் செயலிலும் ஆதரவளிக்கும். அந்த ரதத்தை முன்னின் றிழுங்கள்! கச்சை கட்டிக்கொண்டு நாராயண சரணத்தில் இறங்குங்கள். ஒரே ஒரு தாயின் குழந்தைகளே பாரதீயர்களெல் லாம். அத்தாயின் நாமம் சனாதன தர்மம். தாயிற்கான கடனை நிறைவேற்றுங்கள். தாயை மறப்பவன் புத்திரனல்ல. தாய் தீயவள் என்று கூறுவோன் நல்லவனாக இருக்க முடியாது. எம் வாழ்வின் மூச்சையொப்பது அவளது முலைப்பால். இவ்வித வாழ்வை அருள்வதும் எல்லோருக்கும் பிதாவாகத் திகழ்வதுமே பரமாத்மாவாகும்.

நாமெல்லாம் ஒரே பெற்றோரின் குழந்தைகளே. எனவே ஒருவரை ஒருவர் தூற்றுது குறைகுற்றம் கூறுது ஒருவரின் இன பந்துக்களுக்குத் தீங்கு நினைக்காது உங்களன்பிற்குப் பாத்திர மானவற்றின்மீது உங்களுக்குள்ள அன்பு போன்றே பிற சகோ தரர்களும் தத்தம் அன்புக்குரியவரிடம் அதே பிணைப்புக் கொண் டுள்ளார்கள் என்னும் புரிந்துணர்வும் கொண்டு வாழுங்கள்.

பிறரொருவர் அன்பு வைத்திருக்கும் பொருள் மேல் ஒருவர் குற்றம் குறை காணலாகாது. அதனைப் பார்த்துக் கேலி பண்ணு வதும் தகாது. இதற்குப் பதில் அதன் மேல் அவர் அன்பு கொள்ள வேண்டும். இதுவே பாரதீயர்கள் கொண்டிருக்கும் குணசீலங்களான சத்தியம், பிரேமை என்பனவாகும்.

18. சர்வாந்தர்யாமி ஒருவர் மட்டுமே.

சகல ஜீவராசிகளுள்ளும் உள்ளுறைந்து விளங்குகின்ற சர் வாந்தர்யாமி பரமாத்மாவே என அனுதியிலிருந்து இன்றுவரை வேதங்களும், சாஸ்திரங்களும், ரிக்ஷிகளின் உபதேசங்களும் சந் தேகத்திற்கிடமின்றி ஒன்று சேரக் கூறுகின்றன. இவ்வாறே சேவையாற்றுபவன் சேவையேற்போன் சேவைக்குத் தேவை யானவை அதாவது பிரகிருதி என்பன பற்றிய விஞ்ஞக்களும் முடி வற்ற சர்ச்சைக்குரிய பொருளாக இருந்து வந்துள்ளன. பர மாத்மாவாகிய சர்வாந்தர்யாமியானவரை அண்மையிலும் தூரத் திலும் தேட வேண்டியதில்லை; தேடுபவனுக்கு மிக சமீபமாக அவர் உள்ளார், என்று தான் கண்ட அனுபவத்தை மகா பக்த ஞன பிரகலாதன் கூறும் பாகவத சுலோகத்தை ஒவ்வொரு ஆஸ்திகர்களும் கேட்டிருப்பீர்கள்.

இங்குள்ளார், அங்கில்லை என்னும் சந்தேகங்களை விட்டுவிடு;
ஓ! தானவர்கோனே; கேள்,
எங்கு நீ தேடினும் எங்கு நீ காணினும்
அங்கே... அங்கேதான்... அவர் உறைகிறார்!

ஒரு குறிப்பிட்ட தன்மை அல்லது குணமும் குறித்த ரூபமும் கடவுளிடம் இருப்பதாக மக்கள் சொல்கிறார்கள். கற் பனையும், சிந்தனையும் சத்தியத்திற்கு மிக அண்மையில் செல்லு மட்டும் இக்கூற்றுக்கள் உண்மையே. அவை அடிப்படை உண்மை யல்ல. வியாவகார உலகிற்கே இக்கருத்துக்கள் பொருந்தும். அவற்றைப் பிரம்மம் பற்றிய உண்மை என ஏற்க முடியாது. ஏனெனில் பூர்ணத்தைக் காணவோ அதனைப் பற்றிப் பேசவோ முடியாது.

அவ்வாறாயினும் பக்தர்களும் சாதகர்களும் தமது பக்திக்கு அடிப்படையாக தத்தம் அக முன்னேற்றத்திற்குப் பொருந்தும் வகையில் கடவுளின் ஏதோ ஒரு உருவத்தை அமைத்து வந்துள்ளார்கள். பரமாத்மா வேறெங்குமின்றி துவாரகையிலோ அயோத்தியிலோ உறைவதாகவும், சில உருவங்கள் படங்கள் இருக்கும் சில இடங்களில் மட்டும் இருப்பதாகவும் வேறெங்கும் இல்லை என்ற வகையில் வழிபடுகிறார்கள். அவ்வுருவத்தை மாத்திரமே பூர்ணம் என அவர்கள் வழிபடுகிறார்கள். அவ்வாறு செய்வதில் தவறேதுமில்லைதான். தமது சமயமொன்றே உண்மையென்றும் தாங்கள் அளித்துள்ள நாம ரூபங்களே கடவுளின் நாம ரூபங்கள் என்றும் ஏனைய நாம ரூபங்கள் பயனற்றதும், கீழ்த்தரமானதென்றும் பக்தர்கள் கூறுதலாகாது. எவ்வாறு ஒருவரின் நோக்கில் அவரின் நாம ரூபம் அன்பும் தெய்வீகமும் பெற்றுள்ளதோ அவ்வாறே மற்றவர்களின் லட்சியங்களாக விளங்கும் நாமங்களும் ரூபங்களும் என்பதை அவர் அறிந்துணர்தல் அவசியம்.

ஒரு உருவத்தை இவ்வாறு கற்பனையில் உருவகித்ததும் உண்மையில் அது அனைத்துலகச் சின்னமொன்றாக உருவாகிறது. ஆனால் வெறும் அனைத்துலகச் சின்னம் எவ்வாறு அனைத்துலகமுமாகவே மாற முடியும் இதை நினைவு கூர்ந்து விவேகமற்ற வெறுப்புக்கு இடமளியாது லட்சியத்தின் உருவங்களெல்லாம் ஒன்றுனவை உண்மையானவை என்னும் திருஷ்டியை ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்ள வேண்டும். இது இல்லையேல் பூர்ணத்தை ஒருவர் அறிந்துணரவே முடியாது. இலட்சியத்துக்குரிய வெளி உருவங்களெல்லாம் நுட்பமான தெய்வீகத் தத்துவத்தால் நன்கு செறியப்பட்டுள்ளன. பரந்த சமுத்திரத்தின் சுவையானது சமுத்திர ஜலத்தின் துளியொவ்வொன்றிலும் சுவை குன்றாதும் குறையாதும் பூர்ணமாகக் காணப்படுகிறது. இதனால் துளிதான் சமுத்திரம் என்ற பொருளல்ல. துளி நீரும் சமுத்திரமும் வெவ்வேறானவை என நாம் காண்பினும் அவை இரண்டினதும் இயல்பும் சுவையும் ஒன்றானவை. இதே போன்றே சர்வாந்தர்யாமி பரமாத்மா தன்னை அறிந்துணர்வதற்காக எடுத்துக் கொண்ட வெளி ரூபமும் நாமமும் வெவ்வேறானவையல்ல; அவை ஒன்றேயானவை.

எங்கும் வியாபகமான எல்லாம் தன்னுள் அடங்கிய சத்சித் ஆனந்தத்தை ஒருவர் வர்ணிக்கையில், அவரின் கோட்பாடுகளிலும் கேட்பவரின் சுவைகளிலும் இவ்விடயமும் சொல்லும்

பாணியும் தங்கியுள்ளன. பக்தனால் அமைக்கப்பட்ட தனித்துவ நாம ரூபமானது நிர்க்குண நிராகார நிலைக்கு மாற்றப்படுகையில் அது பிரம்மம் எனப்படுகிறது. இதே பிரம்மம் நாம ரூபங்களுடன் தோன்றுகையில் அது இராமர், கிருஷ்ணன், விஷ்ணு, சிவன் என்று அழைக்கப்படுகிறது. இறைவனுடன் ஒன்றறக் கலந்த நிலையில் பக்தனொருவன் பரவசம் அடையும்போது அவனுக்கும் இறைவனுக்குமிடையிலான வேறுபாடு மறைகிறதென்பதை ஏன் ஏனைய சமயத்தவர்கள் கூட ஒப்புக் கொள்ளவில்லையா? இவ்வேறுபாடற்ற அனுபவத்தை பரபக்தியின் மூலம் பெறலாம் என்பதை ஏனைய மதங்களின் யோகிகளும் தத்துவ ஞானிகளும் கூட சந்தேகமின்றி ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஒரு சொற்ப அளவு கூட வேறுபாடிருப்பின் அது அவரிடமுள்ள சுவையாலும் பற்றுதலுமேயன்றி வேறு விசேட அடிப்படை எதுவுமாலன்று. நாம ரூபம் வரும் பொழுதே அவை பிரகிருதி, பரமாத்மா, பக்தன் என வெவ்வேறுகப் பெயரிடப்படுகிறது. நாம ரூபமற்ற நிலையில் அது ஆணு, பெண்ணு, அல்லது அலியா என்னும் சந்தேகங்களும் வாதங்களும் ஏற்படாது; அப்பொழுது எத்தகைய வர்ணனையும் அதற்குப் பொருந்தும். கற்பனைக்கப்பாலும், கற்பனைக்கு மேலாயும் உள்ள ஒன்றிற்கு எவ்வித நாம ரூபமும் பொருந்தும். உண்மையில் அதற்கு ரூபமோ, குணமோ இல்லை. அது எங்கும் வியாபகமானது எங்கும் நிறைந்தது. எங்கும் நிறைந்த இத்தகைய சூக்குமமான தொன்றை குணங்கள் பொருந்திய ஸ்தூல ரூபம் மூலம் முறையாக வழிபடின் இச்சாதனையினால் தெளிவாக அதன் இயல்பைப் பக்தன் புரிந்துணர்வான் இச்சாதனையின் விளக்கத்தையும் அதன் உண்மையையும் கொடுத்துதவும் பேரானந்தத்தைப் பக்தனுக்கருள்வதற்காக நிர்க்குண பரமாத்மாவானது நாம ரூபத்துடன் இவ்வுலகில் அவதரித்து நிலையான அனுபவத்தையும், மகிழ்ச்சியையும் சகல ஜீவராசிகளுக்கும் கொடுக்க வகை செய்கிறது. பரமாத்மாவே சர்வாந்தர்யாமி. சர்வ பூதாந்தராத்மா, சிருஷ்டியின் ஒவ்வொரு ஜீவராசியிலும் உள்ளுறையும் எங்கும் வியாபகமான ஆத்மா என்னும் அனுபூதியை இவ்வனுபவங்களின் மூலம் அவதாரங்கள் கொடுத்தருள்கின்றன. சிருஷ்டி முழுவதையுமே தனது சுய ரூபத்தில் கிருஷ்ணன் காட்டியருளினார். தனது ஸ்தூல வடிவில் கிருஷ்ணன் எல்லாவற்றையும் அடக்கியுள்ளதை தன் சொந்தக் கண்களால் அர்ஜுனன் காணும் வரை கிருஷ்ணன் சர்வாந்தர்யாமி என்பதை அர்ஜுனனால் கூட உணரமுடியவில்லை.

அன்பும் அன்பனும், அன்புக்குரியதும் ஒன்றே. அவை ஒரே தன்மைத்தானவை. அன்பின்றி அன்பன் இருப்பதில்லை. அன்பும் அன்பனும் இருப்பினும் அன்புக்குரிய தொன்றில்லையேல் அன்

பிற்கு செலவிருக்காது. இம் மூன்றிலும் பிரதானமான அம்சம் அன்பேயாகும். எல்லாவற்றிலும் ஒரே தன்மைத்தாயும் பிரதான மான தொன்றுயும் செறிந்துள்ளதே பரமாத்மா. ஆதலால் இம் மூன்றிற்குமிடையே வேறுபாடொன்றுமில்லை. இம்மூன்றிலும் சர்வாந்தர்யாமியானது பிரேமையே என தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. எனவே பரமாத்ம ஸ்வரூபமே எல்லாமென்பதை அறிந்துணர முடியாதா? நிச்சயமாக தடங்கல்களேதுமின்றி அது அறிந்துணரத்தக்கது. எல்லாமே பிரேமையினால் ததும்பி விளங்குகின்றன. எனவே பரமாத்மாவே பிரேமை ஸ்வரூபமாக உள்ளதென தயங்காது நாம் கூறலாம். முழு திருஷ்டியிலும், பிரேமையே ஜீவராசிகளெல்லாவற்றிற்கும் பல்வேறு ரூபங்களாகத் தோற்றமளிக்கிறது. பிரேமையை எத்திசையில் திருப்பினும் வாத்ஸல்யம், அனுராகம், பக்தி, இஷ்டம் என்னும் பல்வேறு பெயர்களினால் அது அழைக்கப்படினும், அதன் இயல்பும் என்றும் மாறுத்தன்மையது. ஆனால் உருவம் எப்படிப்பட்டதாயினும் சாரம் ஒருபோதும் மாறுது. இவ்வடிப்படை அறிவினாலும் அனுபூதியினாலும் சிருஷ்டியில் உள்ளுறையும் ஆத்மாவும் சர்வ பூதாந்தராத்மாவும் பரமாத்மாவே என்னும் முடிபு தெளிவடைகிறது.

இவ்வொருமைக்கான மேன்மைமிக்க அறிவைக்கற்றுத் தருவது எதுவோ அது அத்வைதம் என்றழைக்கப்படுகிறது. அன்பன், அன்புக்குரியது, ஜீவன், பிரம்மம் என்பனவற்றைப் பற்றிய தத்துவங்களை விளக்குவதெதுவோ அது துவைதம் எனப் படும். அன்பு, அன்பன், அன்புக்குரியது; பிரகிருதி, ஜீவன்; பிரம்மம் இம்மூன்றையும் பற்றிக் கற்றுத் தருவதெதுவோ அது விசிஷ்டாத்துவைதம் எனப்படுகிறது. ஆனால் இவை மூன்றும் ஒன்றே. பிறந்த குழந்தை மாணவனாகி, மாணவன் இல்லறத்தோனாக மாறுகிறான். ஆனால் இம் மூன்றுபேரும் ஒருவரல்லவா? நடைமுறைகளிலும் பற்றுப் பிணைப்பிலும் பல்வேறு வித மாற்றமேற்படினும், அவர் மாறுதிருக்கிறார். பாலிலிருந்து வெண்ணெயும் மோரும் வெளிப்படுகிறது. இவற்றையெல்லாம் கொண்டிருக்கும் பால் அத்வைதமாகும். இவ்விரண்டு வகைகளையும் கொண்டுள்ள வெண்ணெய் துவைதமாகும். வெண்ணெய் வேறுபடுத்தப்பட்டதும் எஞ்சியுள்ள மோரே விசிஷ்டாத்துவைதமாகும். சுவையில் அவை வேறுபடினும் அவற்றின் நிறம் என்றும் ஒரே தன்மையாக இருக்கும். இவையெல்லாவற்றிலும் உள்ள இது ஒன்றே பிரம்மமாகும்.

19. பக்திக்கான விதைகள் முளை விடுகின்றன

வழிபடுபவனுக்கும், வழிபாட்டுக்குமுரியதற்கும் உள்ள மனோ நிலையே பக்திக்கான விதையாகும். முதலில் வழிபடுவோனின் மனம், வழிபாட்டுக்குரிய பொருளின் விசேட தகைமைகளினால் கவரப்படுகிறது. இவ்விசேட தகைமைகளைப்பெற்று தனக்குள் வைத்திருக்க அவன் முயல்கிறான். சாதனை இதுவே. வழிபடுபவனுக்கும் வழிபாட்டுக்குரியதற்கும் இடையிலான வேறுபாடு ஆரம்பகால கட்டங்களில் முழுமையாக இருக்கும். ஆனால் சாதனை முன்னேறிச் செல்கையில் இவ்வுணர்வு குறைந்து நிறைவு நிலையை அடைந்ததும் வேறுபாடேதும் காணப்படாது.

சாதனையினால் ஒருவர் கண்டு தெளிந்தும் பக்தி செய்தும் பெற்ற வழிபடும் பொருள் எதுவாயினும் ஜீவாத்மாவானது, பரமாத்மாவே என்னும் நம்பிக்கையில் அவர் திடமாக இருக்க வேண்டும். சாதகனிடம் இருக்க வேண்டிய பொருத்தமான விருப்பமொன்றுண்டு. அதுவே ஈஸ்வர சாக்ஷாத்காரமாகும். இதைவிட அவன் மனதில் வேறெவ்வித விருப்பத்திற்கும் இடமிருத்தலாகாது. இதன் காரணமாகவே கிருஷ்ணனிடம் குந்திதேவி பின்வருமாறு பிரார்த்தித்தாள்:

''மீள்பிறப்பை அழிக்கும் உன் தர்சனத்தை மாத்திரம் நீ நல்குவாயேல் ஓ! ஜகத்குருவே; வேதனையும் துன்பமும் எம்மோடு என்றும் உறையட்டும்''.

பரம்பொருளை விரும்பி அதனையடைய நாடும் பக்தன் இத்தகைய மனநிலையைக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது தான் ஒருவன் தன்னிடம் இன்ப துன்பமிருப்பினும் தனது சுய திருப்தியைப் பற்றி நினைத்து வருந்தாது தன் சாதனையில் திடமாகவும் அயராதும் மிக்க நம்பிக்கையுடன் ஈடுபட்டுச் சத்தியத்தை விளங்கியதும் அவன் முழு நிறைவடைகிறான்.

இந்நோக்கில் பார்க்கும் பொழுது ஜீவன்முக்தனுக்கும், பக்தனுக்குமிடையே வேறுபாடேதுமில்லை. இவர்கள் அஹங்காரம், முக்குணங்களாலான பிரகிருதி, வர்ணாஸ்ரம தர்மம் என்பனவற்றிற்கு அப்பாற்பட்டவர்கள். இத்தகையோரின் இருதயங்கள் உலகிற்கு நலன் புரியும் உந்துதலும், கருணையும் நிறைந்து விளங்கும். அவர்களின் பிரம்மானந்தமே இவ்வாறு அவர்களைச் செயற்படத் தூண்டுகிறது. அத்தகைய பக்தனிடம் பற்றுக்கள் இருக்கா. ஏனெனில் 'நான்' 'எனது' என்னும் உணர்வுகளின் பலன்களே

பற்றுக்களாகும். வேரற இவற்றைக் களைந்த பின்னரே ஒருவர் பக்தராக முடியும். அவரிடம் பற்றுக்கு இடமே இராது. அவர் அமிர்தஸ்வரூபத்தின் பக்தன். அமிர்தஸ்வரூபமாயிருப்பவனுக்கு ஆனந்தத்தின் இனிமையை விட வேறு ஆசை இருப்பதேயில்லை.

20. ஒரு சாதகனுக்கு, இன்றைய தினம் அவரது; ஆனால் நாளை?

சிவனைப் போன்று யமனும் எங்கும் நிறைந்தவர். தேகத் துடன் பிணைப்புற்றவர் யமன். அவரால் ஜீவனைப் பாதிக்க முடி யாது. சிவன் ஜீவனுடன் தொடர்பு கொண்டுள்ளார். ஆனால் தேகம் விரும்பிய காலம் வரை வாழ அவர் அனுமதிப்பதில்லை. ஜீவி தனதுண்மையியல்பை அறியத் தேவைமிக்க வண்டியே இத் தேகம். இருப்பினும் இத்தேகம் அதன் எஜமானுகிய யமனின் பார்வைக்குரிய இலக்காக எப்போது ஆகிவிடுமென யாருக்குத் தெரியும்? இயமனின் பாசக்கயிறுகளில் இத்தேகம் எப்பொழுது சிக்குமென்று யார்தான் அறிவார்கள்? இலகுவில் அழியும் இத் தகைய தேகச் சுமையைத் தாங்கும் ஜீவி இவ்வெச்சரிக்கையைப் புரிந்து கொண்டு அக்கணம் எத்தகைத்தாயினும் அப்போதே சிவனோடு கலந்துவிட முழுத்துடிப்புடன் விளங்கவேண்டும். கடந்து சென்று விட்ட ஒரு கூணத்தைக் கூட மீளப்பெற முடியாது. சில செயல்களைப்புரிய மக்கள் இன்றையதை நாளையும் நேற்ற யதை இன்று வரையும் ஒத்திப்போடுகிறார்கள். ஆனால் சாதனைச் செயல்கள் அவ்வியல்பினதல்ல. இவற்றிற்கு நேற்றோ, நாளையோ என்பதில்லை. இந்தச்கூணமே அந்நேரமாகும். நழுவிச் சென்று விட்ட நிமிடம் உங்கள் கைகளுக்கப்பால் சென்று விட்டது. அவ்வாறே உங்களிடம் வந்து கொண்டிருக்கும் நிமிடம் கூட உங்களுடையதல்ல. இவ்விளக்கத்தைத் தனது இருதயத்தில் பதித் துக்கொண்ட ஜீவி ஒருவனே சிவனுடன் ஒன்றுக முடியும். இவ் வுண்மையை இருதயத்தில் சிரணிக்காது தேகமே முக்கியமான தென்று கருதி. இன்றைய நாளைய நோக்கங்களில் ஜீவி மூழ்கி யிருக்கிறான். உலகப்பற்றுக்கான அடித்தளங்கள் இவ்வாறு இடப் படுகிறது. எனவே ஜீவி மீண்டும் மீண்டும் பிறந்து, தொடர்ந்து யமனின் தர்சனத்தையே காண்கிறது. சாதகனின் உரிமை சிவ தர்சனத்தையேயன்றி யமதர்சனத்தைக் காண்பதல்ல. சாதகன அதனை விரும்புவதோ தியானிப்பதோ இல்லை. ஜீவனுடன் தேகத் தொடர்பு கொண்டோரே மனிதர்கள். இத்தத்துவத்தினை அறிந் துணர்ந்தோர் தத்தம் சாதனையில் சற்றேனும் வளைந்து கொடுக்க மாட்டார்கள், மாயமான லௌகீக இன்பங்களில்

தீனப்பதிலும், கற்பனை புரிவதிலுமே தற்காலத்தில் மனிதன் திருப்தி கொள்கிறான். அவனுக்கு ஆறுதலே இல்லை. இரவுகளை நித்திரையிலும் பகற்பொழுதுகளை உண்பதிலும் அருந்துவதிலும் செலவழித்து வளர்ந்து பெருகி இறுதியில் அவனது கிழப்பருவத்தில் மரணம் அவனைச் சூழ்கிறது. அந்நேரத்தில்தான் எங்கு செல்வது, எதனைப் புரிவது என்பதைத் தீர்மானிக்க முடியாதவனாகிறான். அவனது புலன்கள் எல்லாம் நலிவடைந்து போய்க் கிடக்கின்றன. அவனை எவராலும் எதனாலும் பாதுகாக்க முடியாது. எனவே மரணத்தின் வாயில் அவன் இரையாகின்றான்.

விலைமதிப்பற்ற பெறுமதிவாய்ந்த அருமையான வைரத்தை யொத்த இம்மானுட வாழ்க்கையானது தேய்ந்து போன செல்லாக் காசின் நிலைக்கு இழிவடைந்து கிடப்பது எவ்வளவு துயரத்துக்குரியது. காலத்தை வீணே கழித்து, இறைவனைத் தியானம் செய்யாது அவரை அடைய சாதனை எதுவும் பயிலாது விட்ட பின்பு மனம் வருந்துதலில் யாது பயனுமில்லை. வீடு தீப்பற்றி எரிகையில் கிணற்றைப்பற்றித் திட்டம் தீட்டுவதில் என்ன பயன்? எப்பொழுது தோண்டப்போகிறீர்கள்? தண்ணீர் எப்பொழுது பாவனைக்குக் கிடைக்கும்? தீ எப்பொழுது அணைக்கபடும்? அது நடைபெற முடியாத காரியமாகும். ஆரம்பத்திலேயே கிணறொன்று ஆயத்தமாக இருப்பின் இத்தகைய ஆபத்துக்காலங்களில் அது எவ்வளவு உதவியாக இருந்திருக்கும்? இறுதிக்காலத்தில் இறைவனை எண்ண ஆரம்பிப்பது. நீ பிடித்ததும் கிணறு வெட்ட ஆரம்பிப்பதற்கொப்பானது. எனவே இப்போதிருந்தே அடிக்கடி இறை தியானத்தில் தன்னைத் தயார் செய்து கொண்டால் மரணகாலம் வருகையில் அவர் பலத்துடன் திகழ்வார். நாளையாற்ற வேண்டிய சாதனையை இன்றே ஆரம்பியுங்கள். இன்று புரிய வேண்டிய சாதனையை இப்போதே ஆரம்பியுங்கள் அடுத்த நொடி எதனைக் கொண்டுள்ளது என்று ஒருவரும் அறியார். எனவே ஒருவர் செய்ய வேண்டிய சாதனையில் ஈடுபடுதற்கு ஒரு தயக்கமும் இருத்தலாகாது. இச்சாதனைக்கு தேக பலமும் அவசியம். எனவே தேகம் கவனிக்கப்பட வேண்டியது. மிதத்திற்குமேல் கவனிக்கப்படின் அது பாதிப்பை உண்டாக்கும் தேவைக்குப் போதுமான அளவு அதனைப் பேண வேண்டும்.

21. முக்தனுகப் பக்தன் மாறும் வழி

இம்மானிடப்பிறவி பெறற்கரிய பிறவி. அது மலிவாகப் பெற்றுக்கொள்ள முடியாததொன்று. தேகம் ஒரு சத்திரமாகும். மனமே அதன் காவல்காரன். ஜீவியே யாத்திரிகன். எனவே

இவர்களில் எவருக்காயினும் மற்றவரிடம் தொடர்பேதுமில்லை. மோக்ஷபுரியை நோக்கி யாத்திரிகன் பயணம் மேற்கொள்கிறான். தடங்கல்களேதுமற்ற பிரயாணத்திற்கு நாமஸ்மரணையைவிட நம் பிக்கைக்குரியது வேறென்றுமில்லை நாமத்தின் இனிமையை சுவைத்தனுபவித்ததும் ஒருவருக்குக் களைப்போ சோம்பலோ அலைச் சலோ இருக்காது மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் சிரத்தை யுடனும் தனது பயணத்தை அவன் மேற்கொள்ளுவான். இருப் பினும் இச்சாதனையை அடைய சத்பாவம் அவசியமானது. பாபபீதி இன்றி சத்பாவம் பிறக்காது கடவுள் மேல் அன்பும் வளர்ச்சி யடையாது. இப்பீதியே பக்தியை உருவாக்கி அவனை இறை வழிபாட்டில் செலுத்துகிறது.

மனிதனின் வீழ்ச்சிக்கு மடமையே காரணம். அது செம்மறி யாட்டின் தன்மையையொத்தது. ஒரு ஆடு குழிக்குள் வீழின் ஏனையவையும் அதே குழிக்குள் வீழும். இது நாச காரியம். இதனைத் தவிர்த்து நன்மை, தீமை செய்யும் பணியின் சரி, பிழைகள் என்பவற்றைச் சிந்தித்த பின்னர் குதிப்பது சாலச் சிறந்தது. யார் எவராயிருப்பினும், மரணம் ஒருவரையும் விட்டு வைப்பதில்லை. அது எல்லாரையும் தொடர்ந்து மிரட்டிய வண்ண மிருக்கும். இன்று ஒருவரின் தவணையாயின் நாளை அது உங்கள தாகும். பூந்தோட்டத்திலிருக்கும் மலர்களைப் பாருங்கள். தோட் டக்காரன் மலர்களைக் கொய்கையில் மொட்டுக்களோ தோட்டக் காரனின் சரங்களுக்குள் நாளை தாம் சேகரிக்கப்படும் தவணை வந்துவிடும் என்று பூரித்து மகிழ்கின்றன. இந் நம்பிக்கையுடன் மொட்டுக்கள் குவிகையில் அவற்றின் முகங்களில் மகிழ்ச்சி நிறைந்து காணப்படுகிறது. துயர உணர்வை அவை அடைகின் றனவா? அவற்றின் முகங்கள் வாட்டமடைகின்றனவா? எவை யேனும் அவற்றுள் பிரகாசம் குறைந்துள்ளனவா? இல்லை, நாளைய தினம் தமது முறை என்று தெரிந்துதான் ஆர்வம் மிகுந்த பூரிப் புடனும் புளகாங்கிதத்துடனும் தங்களை அவை தயார் செய்து கொள்கின்றன. இவ்வாறே இன்று யாரோ ஒருவர் இறந்து விட்டதனால் தனது தவணை நாளை வந்துவிடும் என்று நினைத்து கவலைப்படாது நாமஸ்மரணை செய்தவண்ணம் உற்சாகத்துடன் சாதனைப் பாதையில் ஒருவர் தயாராகக் காத்திருக்கவேண்டும். தேகம் ஒரு கண்ணுடிக் குழாயை ஒத்தது. அதனுள் மனமோ அமைதியற்றும் மாறிய வண்ணமும் உள்ளது. அதன் குறும்புகளை உற்று நோக்கி மரணம் சிரித்தவண்ணம் உள்ளது. ஒன்பது வாயிற் பானையினுள் ஜீவன் எனும் பறவை குடியிருக்கிறது. தேகத்தை எப்படி அப்பறவை கொண்டுள்ளதென்பதொரு விசித்

திரமே அப்பாண்டத்துள் எப்படி அது வந்ததென்றும், எவ்வாறு அது எழுந்து செல்கின்றதென்பதும் ஒரு விசித்திரமே. நவகண்டங்கள், நவதுவீபங்களின் சுரர், முனிவர், நரர்கள் கூட இத்தேகம் எனும் சுமையைத் தாங்கிச் செல்லும் தண்டனைக்குள்ளாகியுள்ளார்கள். சரி, இவர்களில் யார் நண்பர்கள்? யார் எதிரிகள்? அகங்காரம் இறந்ததும் எல்லோருமே நண்பர்கள். அப்பொழுது எதிரிகள் எவருமே இருக்கமாட்டார்கள். எல்லோரும் இப்பாடத்தை நினைவுகூர வேண்டும்.

மனிதன் செவியினூடாக மகிழ்ச்சியையும் வேதனையையும் அனுபவிக்கிறான். எனவே கடும் வார்த்தைகள் என்னும் கொடூரமான அம்புகளைத் தவிர்த்து இனிமை, சந்தோஷம், மேன்மை பயக்கும் சொற்களை ஒருவர் பயன்படுத்த வேண்டும். சத்தியம் என்னும் இனிமையையும் அம்மேன்மையுடன் சேர்த்துக் கொள்ளுங்கள். வார்த்தைகள் இதமாக இருப்பதற்காக அதற்கு பொய்ம்மை சேர்ப்பின் வேதனைக்கான வழியில் அது மேலும் இட்டுச் செல்லும். சாதகனைப் மாறிவிட்டவர் மிக இங்கிதமும், இனிமையும், சத்தியமும், சந்தோஷமும் அளிக்கும் வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். அத்தகையவர்களை அவர்களது நற்குணங்களாலேயே அறிந்து கொள்ளலாம். இவ்வாறு மாறிய சாதகர்களின் மனமே – மதுரா; ஹிருதயமே துவாரகை; தேகமே காசி; பத்தாவது வாயில் ஸ்தானத்தில் பரஞ்ஜோதியை அறிந்துணர முடியும். ஹ்ருதயம் தூய்மையில்லையேல் எம் முயற்சியை மேற்கொள்ளினும் பயனில்லை. மீனைப்பாருங்கள் நீரிலேயே எப்போதும் அது வசிப்பினும் தனது துர்நாற்றத்தை அது கைவிட்டுவிட்டதா? இல்லை. இருதயம் அகங்காரத்தினால் நிறைந்திருக்குமட்டும் இருதய சுத்திகரிப்புச் சாதனைகள் பலவற்றில் ஒருவர் எவ்வளவு முயற்சி மேற்கொள்ளினும் அவரின் வாசனைகள் ஒருபோதும் மறையாது. 'நான்' 'எனது' என்னும் உணர்வுகளைப் போக்க விருப்பமிருப்பின் இத்தகைய மனிதன் ஹரியை வணங்க வேண்டும். விருப்பு வெறுப்புக்கள் எதுவுமற்று சாதகனை அவன் மாற வேண்டும். சாத்வீகமான இயல்புடன் இத்தகைய விகாரங்கள் ஒன்று சேர்ந்து குடியிருக்க முடியாது. ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் இருளும் ஒளியும் ஒன்றுக் குடியிருக்க முடியாதல்லவா? ஆறுவகைக் இளர்ச்சிகளால் (காம, குரோத.. ...) ஆளப்படும் ஒருவனின் இருதயத்தில் அகங்காரத்தை மாத்திரமே மந்திரியாக அவன் கொள்ள முடியும். இத்தகைய மந்திரியைக் கொண்டவர்கள் தம்மை பண்டிதர், சாதுக்கள், சந்நியாசிகள் என்று எப்படித்தான் கூறிக்கொள்வினும் அவர்கள் மூடர்களிலும் மோசமானவர்களே;

நறுமணத் திரவியத்தைச் சுமந்து செல்லும் கழுதை யானையாகிவிட முடியுமா? சந்தனக் கட்டைகள் கட்டொன்றைச் சுமந்து செல்வதால் கழுதை யானையாகிவிட முடியுமா? நறுமணத்தை விட சுமையையே அது உணர்ந்து கொள்ளும். ஆனால் யானையோ சுமைக்கு எதுவித மதிப்பு மளிப்பதில்லை. அது அச்சுகந்தத்தை நுகருமல்லவா? சாதகர்களும் இவ்வாறே வேதங்கள், சாஸ்திரங்கள், உபநிடதங்கள், தெய்வீகம், நற்கர்மங்கள் இவற்றில் பொதிந்துள்ள தூய்மையான சாரத்தையும் பரிசுத்தமான உண்மையையும் மாத்திரமே எடுத்துக் கொள்வர். இதற்குப் பதிலாக புலமைக்கும், கல்வியறிவிற்கும் வாதம் செய்வதற்குமாக ஒருவர் தர்க்கம் புரிந்து கொண்டிருப்பின் சத்தியம் என்னும் நறுமணத்தைத் தவறவிட்டு தர்க்கத்தின் சுமையையே அவர் அறிந்து கொள்வார். காண்பவர்களோ, சாஸ்திரங்கள், வேதங்களின் திருவுருவேயானவர்கள் என்று புகழக்கூடும். பிரதானமான சாராம்சங்களற்ற இடத்தில் எவ்வாறு அத்திருவுரு தோன்ற முடியும். சாரத்தைத் தேடுவோருக்கு சுமையொரு தடையில்லை. வெறும் புத்தியை மாத்திரம் கையாளின் பயனேதும் பெறமுடியாது, இடைவிடாத நாமஸ்மரணைக்கு, பிரேமை ஒன்றே மிக உயர்ந்த சாதனமாகும். அச்சாதனத்தை பாதுகாப்பாகவும், கவனமாகவும் வைத்திருப்பதற்கு விவேகம், வைராக்கியம் என்னும் வாளைத் தவிர வேறெவ்வித கருவியும் அவசியமில்லை.

இவ்வுலகில் தாம் பயின்ற கல்வி அறிவைப் பயன்படுத்தி வாதம் புரிவதுடன் தாங்களே மேன்மை மிக்கவர்கள் என்று நம்புகிறார்கள்; இது ஒரு பெருந்தவறாகும். உண்மையாக அவர்கள் கற்றிருந்தால் இத்தகைய வாதங்களுக்கு இடமேயில்லை. மௌனமே கௌரவப்மிக்கதென இவர்கள் ஊகிப்பார்கள். ஏனெனில் கல்வியில் மேம்பட்டோர், வேதங்கள், சாஸ்திரங்கள், உபநிடதங்கள் இவற்றின் சாரத்தை அநுபவித்திருப்பார்கள். எப்படித்தான் ஒருவர் அநுபவம் பெறினும் அச்சாராம்சத்தின் தன்மையும் அதன் உட்பொருளும், அது பறைசாற்றும் பரமாத்மாவினுடைய பரிசுத்தமும் எல்லாம் ஒன்றே என அவர்கள் கண்டு கொள்வார்கள். தாம் எடுத்துக் கொண்ட எவ்வுருவிலும் கடவுள் தோன்றுகிறார் என்றும், அவர் மேல் பக்தி பூணும் எவரின் உணர்ச்சிகளிலும், செயலாக அவர் தோன்றுகிறாரென்றும் அவர்கள் அறிவார்கள்,

இவை இரண்டிலும் எது முக்கியமெனில் மன ஒருங்குகுவிப்பு, சமத்துவம், அவிகாரம முதலியவற்றைப் பெற்றுக் கொள்வதேயன்றி தர்க்கத்தைச் சம்பாதித்துக் கொள்வதல்ல.

இவ்வளவு சாதனைகள், இவ்வளவு ஜபம், தியானம், பஜனை என்ன பயற்றை ஏன் நாம் அமைத்திருக்கிறோம். மன ஒருங்குகுவிப்பைப் பெறவல்லவா? இத்தகைய மன ஒருங்குகுவிப்பினை ஒருவர் பெற்றுக் கொண்டதும் மனித முயற்சிகள் தேவையற்று, அதன் உள் முக்கியத்துவம் அவனுக்குத் தோற்றப்பட்டுவிடும் எனவே முத்தி பெற விரும்பும் சாதகர்களெல்லோரும் குதர்க்கத்திற்கும், வாதப் பிரதிவாதங்களுக்கும் வலிந்துவிடாது, தீய உணர்வுகளினால் தூண்டப்படாதிருக்க வேண்டும். தத்தம் குற்றங்களை இனம் கண்டு அவற்றை மீளப் புரியாதிருக்க வேண்டும். தாங்கள் பின்பற்றும் இலட்சியத்தில் தம் கண்ணோக்கைப் பதித்துத் தம் பாதையில் அவர் எதிர் கொள்ள நேரிடும் தடங்கல்கள், தோல்விகள், கஷ்டங்கள் எத்தகைத்தாயினும் அவற்றை ஒதுக்கித் தள்ளிவிட்டு தாம் பெற்றுக்கொண்ட மன ஒருங்குகுவிப்பை அவர்கள் காத்துப் பேண வேண்டும். சிறியதும் பெரியதுமான பொருட்களெல்லாவற்றையும் பற்றிய சந்தேகங்களை வளர்த்துப் பெருக்குவதில் காலப் கழியாது உற்சாகமும், மகிழ்ச்சியும் அளிக்கும் விடயங்களில் அவர் ஆழ்ந்திருக்க வேண்டும். இரு விடயங்களில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். ஏனையவை முக்கியமன்று. (1) தனக்கே எல்லாம் தெரியும் எனும் கர்வம் (2) அதுதானே அல்லது இல்லையா எனும் சந்தேகம்; இவையே சாதகனின் பிரதான எதிரிகளாகும். எத்தகைய எதிரிகளாய் இவை இருப்பினும் என்ன தான் நடந்துவிடப போகிறது? தனது உண்மையில்தான் தான் உறுதியாக நிலைத்திருப்பதாக ஒருவர் தானே தீர்மானித்துக் கொள்ளவேண்டும். அது தூய்மையானதாயின் மற்றெல்லாம் தூய்மையே. அது உண்மையாயின் எல்லாமே உண்மையாகும் பல்வேறு வர்ண ஜாலங்களை இயற்கை கொண்டிருப்பினும், நீல நிற மூக்குக் கண்ணாடியை நீங்கள் அணிந்திருந்தால் நீங்கள் காண்பது நீங்கள் அணிந்திருக்கும் நிறத்தையல்லவா? உலகம் உங்களுக்கு வித்தியாசமாகத் தோற்றமளிப்பினும், அது உங்களிடமுள்ள தவறேயாகும். எல்லாமே ஒரே பிரேமை மயமாக இருப்பின் அதுகூட உங்களிடமுள்ள பிரேமையினாலேயேயாகும். இவை இரண்டிற்கும் காரணம் உங்களிடமுள்ள உணர்வே. தான் கொண்டுள்ள தவறுகளாலேயே உலகத்தை ஒருவன் தவறாக நோக்குகிறான். ஒருவரிடம் தவறான எண்ணமேதும் இல்லையேல் தேடிப்பார்ப்பினும் அவரிடம் தவறைக் காண முடியாது. ஏனெனில் எவை தவறுகள் என்பதை அவர்கள் அறியார்களல்லவா?

இறைவனிடம் கூட தவறுகள் உள்ளன என்னும் கேள்வி இப்போது தோன்றலாம். ஏனெனில் அவருமே தவறுகளைத் தேடுகிறார். ஆனால் தவறுகளை இறைவன் தேடுகிறார் என்று

எவ்வாறு கூற முடியும்? தவறுகளையும் பாவங்களையும் விட்டு அவர் நல்லதையே தேடுகிறார். இவை ஒவ்வொருவரின் குணங்களின் தரத்தில் தங்கியுள்ளது. செல்வம், குடும்பம், கோத்திரம், பால், அந்தஸ்து இவற்றை இறைவன் சோதிப்பதில்லை. ஒருவரின் சத்பாவத்தையே அவர் உற்று நோக்குகிறார் சத்பாவத்தைக் கொண்டவர் யாராயினும் அவரது அருளைப் பெறும் தகுதி பெற்றவராகிறார்.

எனவே சத்பாவத்தையும் சீலத்தையும், தர்மத்தையும் விருத்தி செய்யுங்கள். ஆனந்தத்திலும் பிரேமையிலும் வாழ்ந்து பணியாற்றுங்கள். இவை இரண்டுமே போதுமானது. எதுவித தடங்களுமின்றி முத்தி கிட்டும்.

22. மானவனும் தானவனும்; குணங்களில் வேறுபாடுகள்

மானவர்கள் அல்லது மனிதர் பிரேமை நிறைந்தவர்கள். அவர்களது இருதயங்கள் கருணையின் ஊற்றுக்கள். அவர்கள் சத்திய வாக்குக் கொண்டவர்கள். அமைதியே மனித மனத்தின் இயல்பாகும். அதுவே மனிதனினுள்ளுறையும் குணும்சமாகும். வேறெங்கும் சாந்தியைத் தேடிச் செல்ல வேண்டியதில்லை. தங்கமும், வெள்ளியும் பூமியின் அடியில் மறைந்திருப்பது போலவும், முத்தும், சிப்பியும் சமுத்திரத்தினுள் இருப்பது போலவும் ஆனந்தமும், மகிழ்ச்சியும் மனதின் செயல்களுள் மறைந்துள்ளது. மறைந்து கிடக்கும் இப்பொக்கிஷங்களை ஒருவர் பெற்றுக் கொள்ள மனதின் செயல்களுள் அவர் அமிழ்ந்து அதனை உள்முகமாகத் திருப்பின் பிரேமையினால் நிரம்பி அவர் விளங்குவார். இவ்வாறு தங்களைப் பிரேமையினால் நிரப்பிக் கொண்டு அதன் ஒளியில் வாழ்பவர்களே மனிதர் என அழைக்கப்படுவார். பிரேமையற்றவர்கள் தானவர்கள், இராட்சதர்கள், மிருகங்களாவர். அத்தெய்வீகம்மிக்க பிரேமைத் தத்துவமோ இடைக்கிடை வெளிப்படுவதோடு நிற்பதில்லை. அது மாற்றமேதுமின்றி என்றும் இருக்கின்றது. அது பிரிக்க முடியாத ஒன்று. பிரேமையினால் நிறைந்தவர்கள் ஹிம்சை, சுயநலம், அநீதி, தவறு, பிழையான நடத்தை ஆகியனவற்றைப்பற்றி ஏதும் அறியார். ஆனால் இக்குணங்களே மற்றெல்லாவற்றிலும் மேலாக பிரேமையற்றவர்களில் மேலோங்கி நிற்கும். பிரேமையை நசுக்கிக் கீழான குணங்களை மேலாகக் கருதுவோரே தானவர்கள். இத்தகைய கீழான குணங்களை ஒழிக்க வேண்டிய சர்ப்பங்களாகக் கருதி பிரேமைத்

தத்துவம் ஒன்றையே பேணி வளர்ப்பவர்கள் மானவர்கள் எனப் படுவர் துர் நடத்தையும், தீய பழக்கமும் மனிதனின் மானுட இயல்பை திரித்து விடுகின்றன. மனிதனிடம் உள்ள உண்மை யான மனித இயல்பைக் காட்டுவது பிரேமை என்னும் தேனால் நிரப்பப்பட்ட இருதயங்களே. பிரேமை என்பதன் பொருள் களங்கமற்றது, சுயநலமற்றது, மாசற்றது, தொடர்ச்சியானது என்பதாகும்.

மானவனுக்கும் தானவனுக்கும் இடையிலுள்ள வேறுபாடு 'மா'வும் 'தா'வுமாகும். ஆனால் 'மா' என்னும் சொல்லோ இதமும், இனிமையும் தோற்றத்தில் அழியாத்தன்மையும் கொண்டது. ஆனால் 'தா' என்னும் ஓசையோ குரூரமானது, நீதியற்றது, எரிக்கும் தன்மையது. தம்மில் இனிமையின்றி அமரத்துவம் அடைய விரும்பும் இச்சையை நசுக்குபவர்கள் மனிதர்களா? அவர்களின் உருவம் மனிதனையினும் தன்மையோ தானவர்களையொத்தது. ஏனெனில் தோற்றம் முதன்மையானதல்ல. கருணையும், தர்மமும் இன்றி தானவர்களின் இயல்பைக் கொண்டிருப்பவர்கள் மனித உருவம் தாங்கியிருப்பினும் அவர்களை மனிதர்கள் என்று எவ்வாறு அழைக்க முடியும்? இல்லை. அப்படி அவர்களை அழைக்கவே முடியாது. இப்போது எனது உரையில் காணும் வசனங்கள் தோற்ற அடிப்படையில் சொல்லப்பட்டதல்ல. அவை மனிதகுணங்களைத் தழுவியது. மனிதர்களுள் தானவர்கள் ஏராளம்பேர் உள்ளனர். இவ்விருவரும் பார்வைக்கு ஒத்திருப்பினும், அவர்களின் குணங்களே மானவர்களாகவும், தானவர்களாகவும் அவர்களைப் பிரிக்கிறது. இதமும் இனிமையுமளிக்கும் செயல்களாகிய கருணை, தர்மம், பிரேமை, சத்தியம் இவற்றில் மானவர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். ஒருவர் தமது அமரத்துவத் தன்மையை வெளிப்படுத்துவதற்கும் அடைவதற்கும் சாட்சியாக அவர்கள் திகழ்கிறார்கள். அவர்களின் நல்லியல்புகள் அவர்களின் முகங்களில் ஆனந்தமாகப் பிரகாசிக்கின்றன. ஆனால் அவரது முகத்தில் நல்லியல்புகளில்லையேல் அவரின் முகம் மகிழ்ச்சிகரமாக இருப்பினும் அது தானவர்களின் அழிச்சுமியல்புள்ள தீயையே காட்டி நிற்கும். அது ஆனந்தத்தின் அருளைக் கொண்டிருக்காது.

23. நேற்றைய கர்மங்களே இன்றைய வார்த்தைகள்

திரேதாயுகத்தில் நாரதர் ஸ்ரீராமச்சந்திரனிடம் ராமதாஸர்கள், சாதகர்கள் ஆகியோரின் இயல்பை விளக்குமாறு வினவிய போது ராமர் கூறியது:

"கேளும் ஓ நாரதரே! என் தாசர்கள் பக்தி மிகுந்தவர்கள். தர்ம வழி தவருதவர்கள். சத்தியத்தையே பேசுபவர்கள். கருணையுள்ள அவர்களின் இருதயங்கள் உருகும். குற்றமற்றவர்கள். பாபம் செய்வதைத் தவிர்ப்பவர்கள். அவர்களின் இயல்பு நல்ல அத்திவாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எதனையும் மகிழ்ச்சியுடன் தியாகம் செய்ய அவர்கள் தயங்கமாட்டார்கள். மிதமாகவே அவர்கள் உண்பார்கள். பிறருக்கு நன்மை செய்வதிலேயே ஈடுபட்டிருப்பவர்கள். சுயநலம் சிறிதுமற்றவர்கள். அவர்கள் ஒருபோதும் சந்தேகங்களால் வருந்துவதில்லை. முகத்துதிசளுக்கு ஒருபோதும் அவர்கள் செவிமடுப்பதில்லை. பிறரின் நல்லியல்புகளை புகழுரையில் வீருப்பத்துடன் அவர்கள் கேட்பர். அழகும், பலமும், தெய்வீகமும் அவர்களிடம் திகழும். இத்தசைய செயல்களையும் குணங்களையும் பெற முயற்சி செய்பவர்களே சாதகர்கள். என்னிடம் அன்பு பூண்டுள்ளவர்களைப் பற்றி இப்பொழுது கூறுகிறேன். ஜபம், தபம், விரதம் அநுட்டித்து சம்யமம் அல்லது தன்னடக்கம், நியமம் உடையோரும், நம்பிக்கை, பொறுமை, தோழமை, கருணை, மகிழ்ச்சி, என்மீது கலப்பற்ற பிரேமை... கொண்டவர்களே எனக்குப் பிரியமானவர்கள்.

இனி மெய்யான எனது பக்தர்களைப்பற்றி, விவேகமும், வைராக்கியமும் கொண்டு விநயத்துடன் விஞ்ஞானமும் சேர பணிவும் ஞானமும் பொருந்திய ஆத்மீக அறிவை உணர்ந்த எவரும் எந்நேரமும், எனது லீலையில் மூழ்கியிருப்பவரெவரும், எக்காலத்திலும் எச்சந்தர்ப்பத்திலும் எனது நாமத்தில் ஆழ்ந்திருப்பவர் எவரும், தமது உதடுகளிலிருந்து இறைவனது திரு நாமம் உச்சரிக்கப்பட்டதும் பக்தி மிகுந்த கண்களிலுள் நீர் உகுப்பவர்கள் எவராயினும், அவர்களே எனது மெய்யான பக்தர்களாவர்"

இவ்வாறு ஸ்ரீராமர் நாரதரிடம் கூறினர். ஒரு தாய் தனது சிசுவை எவ்வாறு காக்கிறாளோ தாய்ப் பசு எவ்வாறு தனது கன்றை ஆபத்திலிருந்து காக்கின்றதோ, கண் இமைகள் கண்களை எவ்வாறு பாதுகாக்கின்றனவோ, அவ்வாறே தன்னை பரிபூர்ண பக்தியுள் வணங்குவோரை இறைவன் எக்காலங்களிலும் எப்பொழுதும் முயற்சியின்றித் தாமாகவே பாதுகாப்பார். சிசு வளர்ந்து முதிர்ச்சியடைந்ததும் அதன் பாதுகாப்பில் தாய் அவ்வளவு சிரத்தை எடுப்பதில்லை. இறைவனும் இவ்வாறே ஞானியின்மீது அதிக சிரத்தை காட்டுவதில்லை. இறைவனின் சிசுவே

சகுண பக்தன். எனவே இறைவனின் பலத்தைத்தவிர அதனிடம் எவ்வித பலமும் இல்லை. ஞானிக்கோ அவனது பலமே போதுமானது. தனது சொந்தப் பலத்தில் ஒருவர் தங்கியிருக்கும் வரை இறைவனது கரங்களில் அவர் சகுண பக்தரைப்போன்று சிசுவாகத்திகழ வேண்டுமல்லவா? சகுண பக்தனுகாது ஒருவர் நிர்க்குண பக்தராக முடியாது. எனவே தாய்மடியில் சிசுவைப் போன்று பக்தர்கள் வளர்ந்து பின்னர் தம் சுயபலத்தில் தங்கியிருக்கும் ஞானிகளாகி சுதந்திரமாக விளங்கலாம் இருப்பினும் இருவரும் ஒரே பிறப்பிடமான தாயிலிருந்தே சக்தியைப் பெறுகின்றனர். இப்பக்தி மார்க்கத்தின் ரகசியத்தை விளங்கியவர்களும் ஒரு முக பக்தியை வளர்த்து அதனுல் தம் குண இயல்பை பலப்படுத்துவோரும் இறைவனது மடியில் தம்மைக் குழந்தைகளாக்கிக் கொண்டு தாம் வேண்டுவனவற்றை அவர் மூலம் பெறுபவர்களுமே மெய்யான பாக்கியம் பெற்றவர்கள்.

எனவே தாசர்களாகவும், பக்தர்களாகவும், பிரியர்களாகவும் அனன்ய பக்தர்களாகவும் விரும்புவோர் அதற்கான மார்க்கம் நாமம், சேவை என்பனவற்றைக் கைக்கொண்டு அதன்படி வாழ்வார்களாக! பக்திக்குரிய மேற்கண்ட குணம்சங்களை பக்தன் வளர்க்க வேண்டும். பிரியர்களோ இறைவனிடம் பிரேமையை வளர்க்க வேண்டும். அனன்ய பக்தனே இறைவனிடம் பரிபூர்ண சரணுகதியடைய வேண்டும். வெறுமனே வாசித்தலும், நாக்கை உருட்டுதலும் பயனளிக்கா சேவையிலிருந்தே ஆனந்தம் விளையும். சாதி அல்லது மொழி அல்லது பால் வேறுபாட்டில் இவ்வானந்தம் தங்கியிருப்பதில்லை. அந்நாட்களிலும் கூட சபரியின் ஆச்சிரமத்திற்கு ராமர் வருகை தந்திருந்தபோது ஒவ்வொரு காய்களனிகளாகச் சுவைத்துப் பார்த்த பின்னர் அவற்றிலிருந்து பிரத்தியேகமானவற்றைச் சபரி தெரிந்தெடுத்து ராமருக்கு அளித்த விருந்தை அவா மகிழ்வுடன் உண்டதன் பின்னர் சபரி ராமரை பின்வருமாறு வினவினுள்:

''பிரபு; நான் ஒரு பெண். அதுவும் ஓர் அபலை. இதற்கு மேல் நான் தாழ் குலத்தோள், உங்களை எவ்வாறு நான் புகழ முடியும்? எனக்கு என்ன செய்வதென்றே, எப்படிச் செய்வதென்றே புரியவில்லை'' புன்னகை புரிந்த ராமர் கூறினர், ''சபரி, பக்தியெனும் உறவொன்றே எனது அவதாரப்பணி. என்னிடம் சாதி, குல, உறவொன்றுமில்லை. பக்தியின்றி அந்தஸ்து, செல்வம், குணம் இவற்றை வைத்திருந்து யாது பயன்? சாதி, செல்வம், புகழ், பலம் இவற்றில் எத்துணை தகுதியை

ஒருவர் பெற்றிருப்பினும் வானத்தில் அலையும் மழை சுமக்காத மேகம் பக்தியின்றி இம்மக்கள் காற்றின் தயவில் தங்கியிருக்கின்றனர். ஒன்பது வகைப் பக்தி மார்க்கங்களின் மூலம் பக்தர்கள் என்னையடைகின்றனர். அவற்றில் ஏதேனும் ஒன்றின் மூலம் என்னை அடையலாம்.

பின்னர் சபரியின் வேண்டுகோட்கிணங்க ராமர் கூறியது:

''ஸ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணுஸ்மரணம் பாதஸேவனம்
வந்தனம்
அர்ச்சனம் தாஸ்யம் ஸ்நேஹம் ஆத்ம நிவேதனம்''

இம்மார்க்கங்களில் ஏதேனுமொன்றை உண்மையாகப் பயிலும் பக்தன் என்னையடைகிறான். ஒவ்வொன்பது வகைப் பக்தியிலும் நான் கட்டுண்டுள்ளேன். இதனாலேயே யோகிகளினாலும் பெறற்கரிய என்னுடனான தர்சன், ஸ்பர்ஷன், சம்பாஷண் என்பனவற்றைப் புரியும் பாக்கியத்தை இலகுவில் நீங்கள் பெற்றுள்ளீர்கள். வாழ்வின் குறிக்கோளை இன்று நீங்கள் அடைந்து விட்டீர்கள்; பார்த்தீர்களா; நேற்றைய பணிகளே இன்றைய வார்த்தைகள்!

24. பக்தி இருவகை

மேற்கூறிய ஒன்பதுவகைப் பக்தி மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் இரு வகையினர். (1) கடினமான பாதையிற் செல்வோர் (2) பாதுகாப்பான இலகுவான பாதையிற் செல்வோர். இவை சில நேரங்களில் (1) பக்தி (2) பிரபக்தி என்றும் அழைக்கப்படும். அதாவது மார்க்கடகிசோர (குட்டிக்குரங்கு) முறையைப் பின்பற்றுதல் பக்தி என்றும் மார்ஜரகிசோர வழியைப் (குட்டிப்பூனை) பின்பற்றுதல் பரபக்தி என்றும் அழைக்கப்படும்.

ஒரு பாத்திரத்திலிருந்து இன்னொன்றுக்குப் பாயும் தைலதாரை போன்று பக்தியும் ஒயாது தொடர்ச்சியாக இருக்க வேண்டும். இவ்விருவகைப் பக்திகளும் அடிப்படையில் ஒன்றுபயினும் பயிற்சி முறைகளில் வேறுபடுகின்றன. பிரேமையின்றி எதனையும் இவ்வுலகில் பெற முடியாது. பிரேமை இருந்தாற்தான் பாதுகாத்துக் காவல்காக்கும் விருப்பம் அனுராகத்திலிருந்து உருவாகும். இவ்விரண்டு வகைப் பக்தியிலும் பிரேமை ஒரே அளவில் இருக்கின்றதென்பதில் ஐயமில்லை. ஆனால் புற வெளிப்படுதலில் வேறுபாடுள்ளது. மார்க்கடகிசோர மார்க்கத்

தில் தாய்க்குரங்கு எங்கு தாவிச் செல்லினும் தன் பலத்தில் தங்கி குட்டியானது தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். குட்டி தனது பிடிதளரினும் விடாது தாயின் வயிற்றுடன் தன்னைப் பிணைத்துக் கொள்ள வேண்டும். இறைவனது கரங்களில் பக்தனும் இவ்வாறு சோதனைகளைத் தாங்க வேண்டும். உலகத்தின் கேலியையும் தூற்றுதலையும் தாங்கிக் கொண்டு வெட்கம், தோல்வி என்னும் உணர்ச்சிகளை முறியடித்து சோர்ந்து விடாது சற்றேனும் விருப்பு வெறுப்பின்றி எந்நேரமும் எப்போதும் இறைவனின் திருநாமத்துடன் பக்தன் தன்னைப் பிணைத்துக் கொள்ள வேண்டும். பக்தர்களில் தலைசிறந்தவனாகிய பிரகலாதனே இவ்வித பக்திக்கு உதாரணமாகும்.

பிரபக்தி மார்க்கமோ இத்தகையதல்ல. அது மார்ஜரகிசோர குட்டிப் பூனையின் இயல்பையொத்த ''சர்வபாரசமர்ப்பித'' பாவனை கொண்டது. ஓர் இடத்தில் இருந்த வண்ணம் மியாவ் என்று கத்தியபடி பூனைக்குட்டியானது தனது சுமைகளை எவ்வாறு தாய்ப் பூனையில் பொறுப்பித்துள்ளதோ, அவ்வகையில் இறைவனிடம் பரிபூர்ண நம்பிக்கையை பக்தனும் வைத்துள்ளான். பூனைக்குட்டியை வாயில் கவ்வியபடி தாய்ப்பூனை அதனை உயரமான இடங்களுக்கும் கொண்டு செல்கிறது. அல்லது நன்கு ஒடுங்கிய பாதைகளூடு பூனைக்குட்டியைக் கொண்டு செல்கிறது. இவ்வாறே பக்தனும் தனது சுமைகளெல்லாவற்றையும் இறைவனிடம் வைத்து அவரது சங்கல்பத்திற்கு பூரண சரணாகதியடைகிறான். இம்மார்க்கத்திற்கு எடுத்துக்காட்டு லட்சுமணனே.

பக்தியிலும் பிரபக்தி மார்க்கமே சாலச் சிறந்தது. எல்லா வகைகளிலும் பரிபூர்ண சரணாகதியடைதலே பிரபத்தியின் தன்மையாகும். ராமனுக்குப் பணிவிடை செய்வதற்காகத் தடங்கல்களாயிருந்த செல்வம், மனைவி, தாய், இல்லம், தூக்கம், உணவு என்பனவற்றை லஷ்மணன் அகற்றினான். அதுவும் ஒரு நாள் ஒரு மாதம், ஒரு வருடமல்ல. பதினான்கு வருடங்கள் முழுவதுமே. ஸ்ரீராமரே தனது எல்லாமும், ஆனந்தமும், மகிழ்ச்சியும் என்றும் தனக்கு வேண்டியதை அவர் தந்தருள்வாரென்றும் அவரைப் பின்பற்றி சேவகம் செய்து தனது சங்கல்பத்தை அவருக்கு அர்ப்பணம் செய்தலே தனது வாழ்வின் குறிக்கோள் என்றும் லஷ்மணன் உணர்ந்தான். எனவே சுமைகளெல்லாவற்றையும் அவரிடம் இறக்கி அயராது, என்றும் மறவாது அவரைப் பின்பற்றினால் வேண்டுவனவெல்லாவற்றையும் அவர் நிச்சயமருள்வார். இதுவே பிரபத்திமார்க்கப் பக்தியின் இயல்பாகும்.

25. வானப்பிரஸ்தன்

துன்பம், மகிழ்ச்சி, ஆனந்தம் இவற்றை இல்லறத்தில் இருந்த வாறு அனுபவித்து இவற்றின் மெய்யான அர்த்தத்தையும் கற்ற தன் பின்னர் 45 அல்லது 50 வயதானதும் மனிதன் தான் கட்டிய வீட்டையும் தான் வசித்திருந்த இடத்தையும் விட்டகன்று கான கம் செல்ல வேண்டும். அப்பொழுது மனைவி உயிர்வாழின் அவ ளின் அனுமதியை அவன் பெற்று மனைவியை மகனிடமோ அல் லது பெற்றோர்களிடமோ பொறுப்புக் கொடுக்க வேண்டும். அல் லது அவளையும் அழைத்துச் சென்று தனது சகோதரமாக அவ ளைக் கருதித் தானும் பிரம்மச்சரியத்தை அனுஷ்டிக்க வேண்டும். உணவிலும் பெரிய மாற்றமுள்ளது. காய் கனிகளைப் புசித்து பசுவின் பாலையே அவள் அருந்த வேண்டும். முழுமையாக வேக வைக்காது, பண்டங்கள் மூன்றில் ஒரு பகுதியே வெந்திருக்க வேண்டும். அரிசி அதிகம் பாவித்தலாகாது. இவ்வழிகளினால் தனது உணவைத் தயாரிக்க அவனால் முடியாதெனின் அண்மை யிலுள்ள கிராமத்திற்குச் சென்று உணவைப் பிச்சையேற்றுப் பெற வேண்டும். ஆனால் அவ்வுணவை அவர் கானகத்திலுள்ள தனது வதிவிடத்திற்குக் கொண்டு வந்தே புசிக்க வேண்டும். தான் புசிக்குமுன்னர் தன் தயவிலுள்ளவர்களுக்கும் அவர் வழங்க வேண்டும். ஏனெனில் அவர்களோ தமக்கு இஷ்டமான உண வைத் தாமாகவே தயாரிக்கவோ அல்லது அதனைப் பெற்றுக் கொள்ளவோ முடியாதிருப்பதனாலாகும். அதனை அவர்களால் ருசிக்க முடியாவிடின் பாலையும் கனிகளையுமே அவர் உண்டு திருப்தியுற வேண்டும். ஏனெனில் தனது நாளாந்த உணவை பிறரைத் திருப்திப்படுத்துவதற்காக மாற்றுதலாகாது. இக்கட்டுப் பாடு எவ்வளவு கடினமாயினும் இதனைத் தளர்த்துவதோ, விட்டு விடுவதோ தகாது. இது முக்கியமாகக் கவனிக்க வேண்டிய தொன்று. எத்தகைய வழிபாட்டையோ, தானமளித்தலையோ அல்லது இவையொத்த பணிகளையோ அவர் மேற்கொள்ளலா காது. அப்படியிருந்தும் பிறருக்கு உணவும், பொருளும் வழங்கப் படின் அது தானமாகக் கருதப்படமாட்டாது. அத்தோடு பிறரிட மிருந்து எதுவும் தானமாக அவர் பெறலாகாது. எல்லோரிடமும் சமமான தூய அன்பினை அவர் செலுத்த வேண்டும். ஒவ்வொரு வருடமும் பழைய ஆடைகளைக் களைந்து அவ்வருடத்து அஸ்வித மாதங்களில் புத்தாடைகள் புனையவேண்டும். வானப்பிரஸ்த விர தங்களிலே சத்யநாராயண விரதமே மிக முக்கியமானது. அம்மாதத் தில் முதல் 15 நாட்களொவ்வொன்றிலும் ஒரு கவளம் குறைத் துண்டும், மிஞ்சிய ஏனைய பதினைந்திலும் தினமும் ஒரு கவளம்

கூடுதலாகவும் புசிக்க வேண்டும். புதிய பௌர்ணமி முழுப் பௌர்ணமி தினங்களில் கஞ்சியையே அவர் புசிக்க வேண்டும். மழை நாட்களில் அவர் மழையில் நின்ற வண்ணம் தவம் செய்ய வேண்டும். இத்தகைய தவத்தை முறைப்படி செய்து தினமும் மூன்று முறை ஸ்நானம் செய்ய வேண்டும். உபநிடதங்களின் பல்வேறு உபதேசங்களைக் கற்றுப் பொருள் விளங்கித்தெளிய வேண்டும். இத்தகைய வாசைப் பிரஸ்தான நோயேதாவது பீடிக்கின் நாளாந்த உணவுவகைகளை ஒதுக்கி விட்டு காற்றிலும் நீரிலும் அவர் வாழ வேண்டும். மரணம் கிட்டும் வரை வட கீழ்த் திசை நோக்கி அவர் நடந்தவாறு இருக்க வேண்டும். அதை விட அவர் தேக சுகயீனமேதுமற்றவராயின் தேகாரோக்கியமும் சுறுசுறுப்பும் மிகுந்தவராயின் இச்கட்டுப்பாடுகளை மேற்கொண்டதன் பின்னர் ஞானசூரியன் தானுகவே பிரகாசிப்பதை அனுபவித்துணர்வார். இவ்ஞானத்தினுல் அவர் முத்தியடைவார்.

இத்தகைய கட்டுப்பாட்டினுல் எவ்வாறு ஞானம் உதயமாகிறதென்று பலர் வாதிடுகிறார்கள். இவை வெறும் தேக எல்லைக் குட்பட்டனவல்லவா என அவர்கள் கேட்கிறார்கள். குறிக்கோளை அடைவதாலேயே ஞானம் உதயமாகும். ஆத்ம அனுபூதியை நிச்சயிக்கும் குறிக்கோளற்ற ஒன்றை எவ்வாறு ஞானம் எனக் கூற முடியுமென அவர்கள் வாதிடுகிறார்கள். ஆனுல் இது ஒரு பெரும் பிழையின் அடிப்படையில் கூறப்படுகிறது. இத்தேகக் கட்டுப்பாடுகளினுல் வாஸனைகள் ஒழிக்கப்பட்டு மன ஒருங்குகுவிப்பு ஸ்தாபிக்கப்படுகிறது. மன ஒருங்குகுவிப்பைப் பேணி பலப்படுத்த உபநிடத வாக்கியங்கள் உதவுகின்றன. உபநிடதவாக்கியங்களின் அனுபவமே படிப்படியாக ஞானேதயத்தை அளிக்கும். உபநிடதங்களே ஞானஸ்வரூபமாக இருக்கவில்லையா? அந்த ஞானஸ்வரூபத்தை உற்ற தோழனைக் கொண்டு தனது அனுபூதியில் அதனை ஒருவர் அறிந்துணரின் வேறெங்கேயும் ஞானத்தைத் தேடும் அவசியமேற்படுமோ? இருதயத்தில் பலமாக ஞானத்தைப் பதிக்க மன ஒருங்கு குவிப்பு அவசியம். மேற்கூறிய தேகக் கட்டுப்பாடுகளினுலும் தவங்களினுலேயுமே இதனைப் பெறலாம். புறக்கட்டுப்பாடு பல வழிகளில் உட்கட்டுப்பாட்டிற்கும் உதவுகிறது. வெளிக் கட்டுப்பாடுகளில் சித்தியடைவது உட்கட்டுப்பாடுகளில் பெறும் வெற்றியிலும் சிரமமானது. ஒரு கையினுல் காரின் முன் உந்துவளையம் (steering wheel) எத்திசையில் திருப்பினும் அவரின் கைப்பிடிக்குளகப்படாத காரின் சக்கரங்களும் அத்திசையில் திரும்பும். முன் உந்து வளையம் திரும்பும் திசையை விட்டு வேறெத்திசையிலும் காரின் சக்கரங்கள் உருளா. வெளிப்

புறமான முன் உந்து வலையத்திலேயே உட்புறமான கார்ச் சக் கரங்கள் தங்கியுள்ளன.

இதுவே இயற்கையான இயல்பு. சில நேரங்களில் ஒரு திசையில் முன் உந்து வலையம் திரும்பின் கார்ச்சக்கரங்கள் வேறு திசையில் இழுக்கக் கூடும். இதற்குக் காரணம் இயல்பான தன் மையை இழப்பதாலாகும். கார்ச்சக்கரங்களின் உண்மையான சாரமாகிய காற்றில்லையேல் அவை முன் உந்து வலையத்துடன் தொடர்பேதுமில்லாதவாறு இயங்கக்கூடும். ஆயினும் முன் உந்து வலையத்தின் வரைவெல்லைகளுக்கப்பால் அவை செல்ல முடியாது. கீழே காணப்படும் சக்கரங்களுடன் கையிலுள்ள முன் உந்து வலையம் தொடர்புள்ளது. இத்தகைய தொடர்பில்லையேல் பிர யாணம் செய்ய முடியாதிருக்கும். இவ்வுறவு தவிர்க்க முடியா தது. எனவே வெளிப்புறமனப் போக்குகளுடன் போராடி அவற்றை வென்றவனுக்கு உள்முகமான போக்குகளைக் கட்டுப் படுத்துவது இலகுவாகிறது. வெளிப்புற மனப்போக்குகள் நாம ரூபம் தாங்கியன. அவை நுகர்ச்சிக்குரிய பொருட்களாகி கவரப் படுகின்றன. எனவே அவற்றை முறியடிப்பது சிறிது சிரமமானது. ஆனால் சிலவேளைகளில் உட்புற மனப்போக்குகளுக்கு நாமமிருப் பினும் அவற்றிடம் உருவமில்லை. அவையும் கூட ஆனந்த வடி வில் அனுபவிக்கப்படுகின்றன. எனவே அவற்றை இலகுவாக முறியடித்து விடலாம். மிக இலகுவாக அவற்றைப் பழக்கியாள முடியும். வெளியொழுக்கத்திற்கும் நடத்தைக்குமே மிகுந்த சிரமம் தேவை. இவை சுவை, உருவம், நிறையுடன் தொடர் புள்ளவை. உள்முகமான இயல்புகளுக்கோ, சுவை, உருவம் அல்லது நிறை கிடையாது. தூயநீருக்கு உருவமும் சுவையு மில்லை. இம்மூன்று குணங்களிலும் அசுத்த நீர் வேறுபட்டுள்ளது. எனவே அசுத்த நீரை தூய்மைப்படுத்துவது உண்மையில் சிரம மானது. ஆனால் எத்தகைய உருவத்தையும் தூயநீருக்கு மிக இலகு வாகக் கொடுத்து விடலாம்.

இவ்வாறு உலக மாயைகளினால் அழுக்கடைந்துள்ள மனப் போக்கைச் சுத்திகரிக்கும் பணியே சிரமமானது. இத்தகைய மாயைகளிலிருந்து விடுபட்ட மனப்போக்கைத் திருத்தும் அவசி யமேயில்லை. மாயை நீங்கிய மனப்போக்கு நிச்சயமாகத் தூய்மை யானது. சொற்ப அளவுகூட சந்தேகமோ பழுதோ அற்றது அது. எதற்காக அதனைத் திருத்த வேண்டும்? எனவே வெளிப் புறமாயையை முடியுமானவரை கட்டுப்படுத்தி வெற்றியடையின் உள்முக மனப்போக்குகள் ஆத்மானந்தத்தை நோக்கி இலகுவில்

நகரும். இத்தகைய வெளி மனப்போக்குகளையும் மாயைகளையும் கட்டுப்படுத்தி வெற்றி பெறும் மார்க்கத்திற்கின்னுமோர் பெயரே யோகமும் தபசுமாகும். இந்த யோகம் அல்லது தவத்தில் வெற்றியடையும் வழிகளே வானப்பிரஸ்தத்திற்குரிய நியதிகளாகும். வானப்பிரஸ்த நிலையிலுள்ள மாயைகளெல்லாவற்றையும் அடக்கி மனிதன் ஆளின். பிரயாணம் முத்தியில் முடிவடையும். ஆனால் இது ஒன்றே மோட்சத்துக்குரிய பாதை என்று நாம் கூறிவிட முடியாது. இறைவனின் திருவருள் எவ்வழியில் பெறப்பட்டதோ அவ்வழியைத் தெரிவு செய்து கொள்ளலாம். வானப்பிரஸ்தத்திற்கான இந்நியதிகளையும் அனுஷ்டானங்களையும் கடைப்பிடித்து இவ்வழியில் சென்று மோட்சத்தை அடையலாம். அத்துடன் அது மாயையினின்றும் மனிதனை விடுவிக்கிறது. அவனிடம் மன ஒருங்கு குவிப்பை அது அளிக்கிறது.

26. முத்தி நான்கு வகைப்படும்

ஸ்திரமான உள்ளுணர்வும், தூய்மையான உணர்ச்சியும் புறத்தே செல்லாத எண்ணமும் கொண்ட வழிபாடே பாவ சமாதியாகிறது. இப்பாவசமாதியிலுல் பக்தனொருவன் அவன் வழிபடத்தெரிந்தெடுத்த உருவத்திலேயே அவனது அகக்கண் முன் இறைவன் தோன்றுகிறார். இத்தோற்றம் ஒரு வெறும் கற்பனையல்ல. அது ஒரு முகத்திற்குமுக அனுபவமாகும். இடவேற்றுமையின்றி இறை சாந்நித்தியத்திலேயே அவன் வாழலாம். இது சாலோக்கிய முத்தி என அழைக்கப்படும். சாலோக்கிய முத்தியிலுள்ளதுபோன்று இறைவனுடன் இணைபிரியா திருப்பதுடன், தாங்கள் காண்பனவற்றையெல்லாம் இறைவனின் மகிமையாகப் பக்தர்கள் கண்டு கொள்வார்கள். இவ்வனுபவம் சாமீப்ய முத்தி எனப்படும். இறைவனோடு இணைபிரியாது இருந்தவாறு அவரின் மகிமையை என்றும் பார்த்தவாறு இறையுணர்வு நிறைந்து விளங்குதலே சாரூப்யமுத்தியாகும். பக்தி சாஸ்திரத்தின் இறுதிப் பலன் இதுவே. ஆனால் இந்நிலையிலும் பேத உணர்வின் சுவடு சற்றேயுள்ளது. எனவே இதனை மேன்மைமிக்கதாக அத்வைத சித்தாந்தம் அனுமதிக்காது சாரூப்யத்தை அல்லது இறைவனின் ரூபத்தை பக்தன் பெற்று விட்டதனால் கடவுளிடம் காணப்படும் சக்திகளான சிருஷ்டி, காத்தல், அழித்தல் என்பன அவனிடம் இருப்பதாக நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. பேதங்களெல்லாம் அகன்று ஒருமைப்பாட்டை அடைந்தாலேயே உயர்ந்த நிலை பெறப்படுகிறது. இதுவே சாயுச்சியம் எனப்படும். ஒவ்வொருவரின்

சாதனையின் சாராம்சத்தினால் இறைவனருள் மூலம் இது கிட்டு கிறது. முயற்சியின் பலனல் அது கிட்டியதாக உரிமை கோர முடியாது. இத்தகைய ஐக்கியத்தையே பக்தனும் விரும்புகிறான். தான் விரும்பியவாறு இறைவனுக்குப் பணி செய்யவும் தான் அவருக்களித்த தோற்றத்தின் ஆனந்தத்தில் திளைத்திருக்கவும் பக்தன் விளைகிறான். ஆனால் இறைவனோ கருணை மிகுந்து சாலோக்கியத்துடன் சாமீப்ய, சாரூப்யத்தையும், சாயுச்சியத் தையுமே பக்தனுக்கு வழங்குகிறான். பிரம்ம ஞானத்தைப் பெறவும் பக்தி மார்க்கம் வழி கோலுகிறது. பக்தன் அதற்கு விளைய முற்படாவிடினும் அதனை அவனுக்கு இறைவனே கொடுத்தருள்கிறார். சாயுச்சிய முத்தி, ஏகாந்த முத்தி என்றும் அழைக்கப்படும்.

27. இறை சாந்நித்தியத்தையடைய சத்சங்கற்பமே வழி

மாயையாலான உயிர்களிடம் இரண்டு மாயாவாயில் கதவு கள் உள்ளன. இவை பாலுணர்வு வேட்கையும் நாவின் பசியு மாகும். இவையிரண்டும் ஒவ்வொரு மனிதனும் வெற்றி கொள்ள வேண்டியன. அவை நிலைத்திருக்கும் வரை துக்கத்தைக் கொடுத்த வண்ணமிருக்கும். இவை இரண்டினாலேயுமே உலகப்பற்றுக்க ளெல்லாம் அறியப்படுகின்றன. இவை இரண்டையும் முறியடித்த வர்களே வெற்றிகரமாக உலகினைத் தாண்டியவர்களாவர். பாபங்களெல்லாவற்றிற்கும் இவை இரண்டுமே காரணம்; மாயை தளைக்கும் உரமே பாபமாகும். உண்மையில் கூறப்புகின் இத் தேகத்தைப் பராமரிக்கும் குறிக்கோளே இம் மாயப் பிரபஞ்சம் அல்லது உலகின் பணியாகும். விடுதலையை நாடுவோர் புலன்களை அமைதிப்படுத்த வேண்டும். ''தேகத்தைப் பேண உணவு, குளி ரைப் போக்க உடை'' என்று உத்தர கீதை கூறுகிறது. எனினும் இத்தகைய போக்குகளில் மனிதன் மூழ்கின், தான் வந்திருக்கும் நோக்கத்தையும் செயல்களெல்லாவற்றினதும் சாதனையினதும் குறிக்கோளையும் மறந்து விடுவான். அதற்குப் பதிலாக எத்த கைய கர்மத்தில் ஒருவர் ஈடுபடினும் தன்னிச்சையாகத் தன் சுவாசம் இயங்குவதையொப்ப கீழே சொல்லும் வழியில் தியா னித்து விழிப்புணர்வுடனிருக்க வேண்டும். அது; 'இறைவனுக்கு பணி செய்யவும் ஆத்மாவை உணரவுமே நான் பிறந்துள்ளேன்' என்பதாகும். அணிதல், உண்ணல், நடத்தல், கற்றல், பணி செய்தல், நகருதல் இச்செயல்களெல்லாம் இறைவனின் சந்நிதிக்கு ஒருவரை இட்டுச் செல்லும் என்னும் நம்பிக்கையுடன் செய்யப் பட வேண்டும். இறையர்ப்பணமாகவே எல்லாவற்றையும் ஆற்ற வேண்டும்.

உழவனொருவன் நிலத்தைத் துப்பரவு செய்து சீராக்கி, கல்முள் அகற்றி, உழுது திருத்தி எருவிட்டு மண்ணை வளம்படுத்தி நீரும் பசளையுமிட்டு, விதைத்து, நாற்று நட்டுக் களை பிடுங்கி, கிருமிநாசினி தெளித்து, காத்திருந்து பயிரை அறுவடை செய்து, புடைத்து பின்னர் நெல்லைக் களஞ்சியப்படுத்துகிறான் இச் செயல்முறைகளெல்லாம் வயிற்றிற்காகவே. இவ்வாறு பசி, தாகம், மகிழ்ச்சி, துக்கம், துயரம், இழப்பு, வேதனை, கோபம், உணவு, வேட்கை என்பன இறை சாந்நித்தியத்தை ஒவ்வொரு வருமடைய உதவும் உணர்ச்சித் தூண்டுதல்களேயென உணர வேண்டும். இத்தகைய மனோபாவம் ஒருவரிடம் இருப்பின் இச்செயல்களைப் பாபம் ஒருபோதும் மாசுபடுத்தாது. நாமரூபச் சுவடுகளற்று ஆசை உணர்ச்சிகள் கூட மறைந்து விடும்.

28. செயல்களின் குறிக்கோள் நற்கர்மங்களே

உணவு அல்லது எதை உண்பினும் ஒருவர் நோய்வாய்ப் பட்டிருப்பின் அல்லது மனம் ஏதேனுமொன்றில் ஆழ்ந்திருப்பின் அதன் சுவையை புரிந்து கொள்ள முடியாது. அவ்வாறே நாமஸ் மரணை, பஜனை, ஜபம் அல்லது தியானத்தில் ஒருவர் ஈடுபட் டிருக்கையில் அவரது இருதயம் நாமலம் நிறைந்தோ அல்லது அமைதியற்றோ இருப்பின் எவ்வித மகிழ்ச்சியையும் அனுபவிக்க முடியாது. இச்சூழ்நிலைகளில் ஆனந்தம் ஒருபோதும் பொங்குவ தில்லை. நாவில் சர்க்கரை இருக்கும்வரை நாவில் இனிமை இருக்கும். இருதயக் குகையில் பக்தி எனும் சுடர் இருந்து அவ் விளக்கு எரியுமட்டும் இருளுக்கு இடமேயில்லை. இருதயம் பேரா னந்தத்தினால் பிரகாசிக்கும். கசப்பான பண்டம் நாவிலிருப்பின் முழு நாகுமே கசக்கும். பேராசையும், கோபமும் இருதயத் துள் நுழையின் பிரகாசம் மறைந்து இருள் அவ்விடத்திற்கு பெருகிச் சொல்லொணாத் துயரத்திற்கும் இழப்புகளுக்கும் மனிதன் ஆளாவான். எனவே இறைவனின் சாந்நித்தியத்தையடைய விரும்பும் ஒவ்வொருவரும் பழக்கங்கள், கட்டுப்பாடுகள், தன்மை கள், சிலவற்றைப்பெற வேண்டும். பழகிப்போன வழமையான வாழ்க்கை இறைவனிடம் இட்டுச் செல்லாது. சாதனை வழிகளினால் அவற்றைச் சற்றே திருத்தியமைக்க வேண்டும். கொக்கைப் பாருங் கள். மிக வேகமாக நீரில் அது நடந்து செல்கிறது. ஆனால் அந் நடை மூலம் மீனெதனையும் அதனால் பிடிக்க முடியாது. அதற் காக மெதுவாகவும், அமைதியாகவும், அசைவற்றும் அது நிற்க வேண்டும். அவ்வாறே பேராசை, கோபம் போன்ற குணங்களு டன் ஒருவர் சென்றால் சத்திய தர்ம சாந்தி என்னும் மீனைப் பிடிக்க முடியாது. எவ்விதமான சாதனை ஒருவரிடம் இருப்பினும்

இல்லையேனும் நாமஸ்மரணையை இடைவிடாது அவர் பயில வேண்டும். பேராசை கோபம் என்னும் இயல்பான தன்மைகளை அப்பொழுதுதான் அவரால் கட்டுப்படுத்தி ஆள முடியும். சாஸ் திரங்களெல்லாம் புகட்டும் பாடம் ஒன்றுண்டு. இறைவனே பிர பஞ்ச லட்சியமாதலாலும் வாழ்க்கைப் பயணம் முடியுமிடமும் அவரேயாதலாலும் எம்கண் முன்னர் அவரை என்றுமிருத்தி பாதையை விட்டகன்று செல்லும் மனத்தை அமைதிப்படுத் துங்கள். பேச்சில் கட்டுப்பாடும் இடைவிடா இறை தியானமும் பயிலும் ஒருவரை நல்லியல்புகள் தானுகவே வந்து சூழ்ந்து கொள்ளும். பார்த்தீர்களா பழைய புண்ணியங்களின் பலன்களை துவாபர யுகத்தின்போது கௌரவர்கள் அனுபவித்துக் கொண் டிருக்கையிலும் கூட பாபகர்மங்களில் அவர்கள் ஈடுபட்டிருந் தார்கள். பாண்டவர்களோ தம் முந்திய பாபகர்மங்களுக்குரிய பலன்களை அனுபவிக்கையிலும் கூட புண்ணியத்தையே நிகழ்ந் தும் செய்து கொண்டு மிருந்தார்கள். சான்றேருக்கும். அறிவிலி களுக்கு மிடையிலான வேறுபாடு இதுவே. பசி, பாலுணர்வு இவற்றிற்கு கௌரவர்கள் அடிமைகளாகியிருக்கப் பாண்டவர் களோ சத்தியத்தையும், தர்மத்தையும் தம் தேர்ச்சாரதியாகக் கொண்டு பணிகளெல்லாவற்றையும் இறைவனுக்காகவே புரிந் தார்கள். துன்பம் நிறைந்து வருந்துலோர்கள் விருந்திலோ, வேட்டையிலோ ஒருபோதும் சிரத்தை கொள்ளார்கள். அவ்வாறே இறை சிந்தனையில் ஊறியிருக்கும் மெய்யான சாதகன் லௌகிக இன்பமளிக்கும் பொருட்களைப்பற்றி ஒருபோதும் சிந்திக்க மாட்டான்.

29. நல்லியல்பே மானிட வாழ்க்கையின் அணிகலனுகும்

என்றுமுள்ள சத்தியத்தையும் அதற்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பையும் மரணம் தன் பிடியை இறுக்குமுன்னர் இத் தேகத்திலேயே ஒருவர் அறிந்துணர வேண்டும். கடோபநிஷத் கூறுகிறது: உத்திஷ்ட; ஜாக்கிரத;; பிராப்யவராணிபோதத;;; எழுந்திரு, விழித்திரு, மகான்களிடமிருந்து உபதேசங்களைப் பெறு. எதனை விலக்கி எதனை ஏற்பது என்னும் சந்தேகங்களினுல் அவதியுறுபவர்கள், அறியாமையினுல் இருள் சூழ்ந்தவர்கள், ஒளிக்கும் இருளுக்கும், மரணத்திற்கும் இறவாமைக்கும் இடையே யான வேறுபாட்டைக்காண முடியாதவர்கள், இவர்கள் யாவரும் என்றுமுள்ள சத்தியத்தை சிருஷ்டியின் அடிப்படையான ஸ்வயம் பிரகாசத்தை அடையும் வழியைக் காட்டவல்ல மகான்களை அணுக வேண்டும்: அப்பொழுது இதே பிரகாசத்தில் இவ்வுலக

மும், மோட்சமும் ஒன்றறக்கலந்துவிடும். இவ்வனுபூதியைப் பெற மனிதன் தன்னிடம் கடுமையான ஒழுங்கு முறைகளையும் ஆழமான விருப்பத்தையும் கொண்டிருக்க வேண்டும். கணக்கற்ற நற்செயல்களின் விளைவே இம்மானிடப் பிறப்பாதலால் அதனை ஒருபுறம் ஒதுக்கிவிடலாகாது. இச்சந்தர்ப்பத்தை முழுக்கப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

''நசேதிஹவதின் மஹதோ விஞ்ஞஸ்தி'' என்று கேஞ்ப நிடதம் கூறுதல் போன்று கையிலிருக்கும் தங்க நகையை விட்டு விடலாகாது. தன்னைக் காத்துக் கொள்ளப் பல்வேறு சந்தர்ப்பங்க ளிருக்கையில் தப்பித்துக் கொள்ளும் வழிமுறைகளை அவர் சற் றேனும் நினையாதிருப்பது ஒரு பெரும் இழப்பல்லவா? உண்மை யிலே விலங்குகளாக மனித உருவில் உள்ளோர், விலங்கின் தன்மைகள், பெருமை இவற்றிற்கு அடிமையாஞோர் ஆகியோ ருக்கு காலத்தைப் பற்றிய விழிப்புணர்வு மிக அத்தியாவசிய மானது. தாமதிப்பதில் பயனில்லை. வீடு பற்றி எரிகையில் கிணறு வெட்ட ஆரம்பிப்பது மூடத்தனமானது. எனவே விவேக முள்ளவன் தன்னிடமுள்ள முழுவழி முறைகளையும் கொண்டு அடிப்படைத் தத்துவங்களை விளங்க முயற்சி செய்து ஆத்மவழி யிற் சென்ற மகான்களின் போதனைகளை அறிந்துணர்ந்து இயலு மானவரை இவற்றையெல்லாம் தனது அனுபவக் கூண்டுக்குள் கொண்டுவர முயல்வான். இம்முயற்சியின்றி பாதையைத் தவற விட்டு தன் வாழ்வை வீணடிப்பது அவனது வர்க்கத்தின் பெய ருக்கே அவதூறளிக்கும்! அநித்தியமானதும் மாயமானதிற்கும் அடிமைப்பட்டு அவற்றைப் பின்தொடர்வதனால் காலத்தை வீண டிப்பதை விட்டு, சத்தியத்தைக் கண்டறியவும் என்றும் நிலையான என்றும் உண்மையான இறைவனைத் தியானிப்பதற்கு ஒவ்வொரு நிமிடத்தையும் அர்ப்பணியுங்கள். இவ்வித அர்ப்பணமே ஜீவியின் உண்மையான பணியாகும். அதற்குப் பதிலாக மாயை மிகு வேட்கைகளிலே காலத்தைக் கழித்தல் உலகத்தின் இழுவையா லாகும். லௌகீக சுகங்களின் நச்சுப் பொருந்திய கவர்ச்சிக்கும், மனத்தைக் கவர்ந்திழுக்கும் அழகிற்கும் ஒருவர் இரையாகக் கூடாது. கிளர்ச்சியூட்டும் இப்புலன்கள் கனவில் விரிந்த கதை போன்று ஒருநாள் மறைந்தோடி விடும்.

மனிதனுக்கு எது நடப்பினும் அவனை வளர்த்துப் பெரி தாக்கக் கல்வியும், ஏனையவையும் முயன்றாலும் ஆத்மீக முன்னேற் றத்திற்கு அவை ஒரு பயனுமளிக்கா. அவனது ஆத்மீக வீழ்ச்சி யையே அவை கொடுக்கும். அதனாலேயே இது ஓர் மாயப்

பிரபஞ்சமாகும். எத்தகைய மாயையிலும் சத்தியம் மூழ்கியிருப் பினும் மேலும் அதிகமாகவே அது பிரகாசிக்கும். அத்தகையது சத்தியத்தின் தன்மை. ஒவ்வொரு க்ஷணமும் மாறுதலுக்குட்பட்டு, தோற்றல், மறைதல் என்றும் மாறுதலினல் தேய்ந்து அழிந்து கொண்டிருக்கும் இவ்வுலகை எவ்வாறு என்றுமுள்ள சத்தியம் என்று கூறமுடியும்? எனவே சத்தியத்தையடைவதே சாதகனின் இயல்பன்றி இம்மாய உலகில் பொய்யைத் தேடுவதன்று. இம்மாய உலகில் சத்தியாசாரமே இருக்க முடியாது. மித்தியாசாரமே இருக்க முடியும். இறைவனை அடைவதையே உண்மையான வாழ்வு கொண்டுள்ளது. வாழ்வின் ஒவ்வொரு க்ஷணத்திலும் இதனை ஒவ்வொரு மனிதனும் மனத்திலிருத்த வேண்டும்.

30. சஹஜ மார்க்கமும் சாதனை மார்க்கமும் ஒன்றல்ல

சாதாரண ஒருவருக்கும் சாதகனுக்குமிடையிலுள்ள நடத்தை யின் வேறுபாட்டை சாதகன் கவனிக்க வேண்டும். பொறுமை யின்மை, அஹங்காரம், லௌகிகமான ஆசைகள் நிறைந்து அதன் மூலம் திருப்தியான பிறப்பைப் பெற முயலுதல் என்பவற்றைக் கொண்டவனே சஹஜ மனிதன். சாதனை மனிதன் என்பவர் சமுத்திர அலைகளைப் போன்று ஓயாது சர்வேஸ்வர சிந்தனை கொண்டவரும், எல்லாம் இறைவன் செயலே அவனதல்லாது இங்கு வேறென்றுமில்லை என்னும் சிந்தையோடு திருப்தியுற பவர்களிடம் சமநோக்கு, சம அன்பு எனும் செல்வத்தைச் சொரிந்து சேகரித்து வைப்பவர்களுமாவர். வேதனை இழப்பு அல்லது கோபம், பொறுமை அல்லது சுயநலம், பசி, தாகம் அல்லது பலஹீனம் இவற்றின் முன்பு சகஜமனிதனைப்போன்று ஒருபோதும் சாதனை மனிதன் வளைந்து கொடுக்க மாட்டான். மேற்சொன்னவற்றையெல்லாம் முடியுமானவரை ஒருவன் கட்டுப் படுத்தி, வைராக்கியம், பலம், மகிழ்ச்சி, அமைதி, தானம், தாழ்மை இவற்றுடன் வாழ்க்கையினூடாகப் பயணம் சென்ற டைய வேண்டும். தேகத்தைப் பராமரிப்பதே முக்கியமான செயல் என்பதை விட்டு பசியையும் தாகத்தையும்கூட அமைதி யுடன் தாங்கியவாறு ஓயாது இறைசிந்தனையில் ஒருவர் ஈடுபட வேண்டும். இதற்குப் பதிலாக அற்ப விஷயங்களுக்கும் தர்க்கம் செய்வது, தனது மனநிலையை இழப்பது, ஆத்திரமூட்டும் சிறிய தூண்டுதலுக்கும் துக்கப்படுவது, அற்பமான அவதூறுக்கும் கோவிப்பது, பசிக்கும் தாகத்திற்கும் நித்திரை இழப்பதற்கும் கவலைப்படுவது என்னும் இவை சாதகனொருவனுக்குள்ள குணங்க ளல்ல. அரிசி, சாதம் இவை இரண்டும் ஒன்றுகுமா? அரிசியின் சுத்தம் சாதத்திலிருப்பதில்லை. வெந்த சாதம், மெதுவாயும்

தீங்கற்றும் சுவையாகவும் இருக்கும். வேகாத அரிசியோ கடின மும், அஹங்காரமும அறியாமையும் நிறைந்து விளங்கும். இவ் விரண்டு வகையும் ஜீவிகளும் மனிதர்களும் என்பதில் சந்தேக மில்லை. அவித்யா மாயையில் (புறவுலகு) அமிழ்ந்திருப்பவர்கள் மனிதர்கள். வித்யா மாயையில் (அகவுலகு) மூழ்கியிருப்பவர்கள் 'சாதகர்கள்' இவை இரண்டிலும் மூழ்கிவிடாது இவையிரண்டு மற்றுத் திகழ்பவரே இறைவன். அவித்யா மாயையற்றவர்கள், சாதகர்களாவார்கள். அவரிடமிருந்து வித்யா மாயை அகன்றதும் அவரைக் கடவுள் என்றே அழைக்கலாம். அத்தகையவரின் இருதயம் இறைவன் வதியும் இடமாகிறது. ஆதலால் இறைவனு லேயே எல்லாம் நிறைந்துள்ளது என எண்ணிக்கொள்ள முடி கிறது. ஒவ்வொருவர் இருதயத்திலும் இறைவன் விளங்கினும் அதனை ஒருவர் தானே கண்டுபிடிக்கச் சாதனை அவசியமல்லவா? நாமே எமது முகத்தை பார்க்க முடியாதிருக்கிறது. அதன் பிம் பத்தைக் காட்டும் ஒரு கண்ணாடியை நாம் வைத்திருக்க வேண்டும். அவ்வாறே குணங்களற்று விளங்க அடிப்படை மார்க்கமொன்று சாதனை முறையொன்று அவசியமாகிறது.

31. சாதகனின் அறுவடை

வைராக்கியத்தைவிட உயர்ந்த தவமேதும், திருப்தியிலும் மேலான ஆனந்தமேதும், கருணையை விடப் புனிதமான புண்ணிய மேதும், பொறுமையை விடத் தலைசிறந்த ஆயுதமேதும் இவ் வுலகிலில்லை.

தேகத்தைப் பூமியாயும் நற்கர்மங்களை விதைகளாகவும் இருதயம் என்னும் உழவனைக் கொண்டு இறைவனின் நாமத் தைப் பயிரிட்டு அறுவடையாக இறைவனையே பக்தர்கள் பெற வேண்டும். பயிரிடாமல் விளைச்சலை எவ்வாறு ஒருவர் பெறமுடி யும். பாலில் படு நெய்போலவும், விறகில் தீ போலவும் எல்லா வற்றிலும் இறைவனிருக்கிறார். இதன் மீது முழு நம்பிக்கை வையுங்கள். பாலிலிருந்தே வெண்ணெயும் விறகிலிருந்தே தீயும், அவ்வாறே சாதனையிலிருந்தே சாட்சாத்காரம் இருக்குமல்லவா? நாமஸ்மரணை மூலம் முத்தி நேரடியாகக் கிட்டாவிடினும் அவ் வனுபவம் பெற்றவர்களுக்கு நான்கு பலாபலன்கள் தெட்டத் தெளிவாகத் தோன்றும். அவை (1) சத்சங்கம் (2) சத்தியம் (3) திருப்தி (4) புலன்களின் கட்டுப்பாடு. இவ்வாயில்களில் எதன் மூலமும் ஒருவர் நுழையின் அவர் இல்லறத்தான், அல்லது துறவி அல்லது ஏதாவது ஒரு ஆஸ்ரமப் பிரிவைச் சேர்ந்தவன்

என்போரில் யாராயிருப்பினும் இறைவனை அவர் தவறுது சென்றடைவார். இது உறுதி. உலக இன்பங்களில் மனிதர் ஆசைப்படுகிறார்கள். முறையாக ஆராய்ந்து பார்க்கையில், நோய்களும், துன்பங்களுமே நாம் உட்கொள்ளும் மருந்துகள். இவ்வுலக இன்பங்களுக்கு மத்தியில் இறைவனை அடையும் ஆசையை ஒருவர் மிக அரிதாகவே விரும்புகிறார்.

அத்துடன் மனிதனது ஒவ்வொரு செயலையும் ஆராய்ந்து பகுத்தறிவது அவசியம். ஏனெனில் இத்தகைய ஆராய்ச்சியிலிருந்தே துறவு மனப்பான்மை பிறக்கிறது. அது இன்றி துறவை மேற்கொள்வது சிரமமாகும். உலோபித்தனமோ நாயிற்குச் சமமானது. அது மாற்றப்பட வேண்டியதொன்று சாதகனின் முதலாம் எதிரி கோபம். அதுவோ உமிழ் நீருக்கொப்பானது. எனவே அதனை எச்சிலாகக் கருத வேண்டும். பொய்ம்மையோ இன்னும் அருவருக்கத் தக்கது. எல்லாரிடமுமுள்ள பிரதானமான சக்திகள் பொய்மையினால் அழிக்கப்படுகின்றன. அழுக்குப் பொதிந்த குப்பையாகவே அது கருதப்பட வேண்டும். களவோ வாழ்க்கையையே நாசமாக்கிறது விலைமதிப்பற்ற மனித வாழ்வை அது ஒரு பைசாவிலும் மலிவானதாகத் தாழ்த்துகிறது. அழுகிய துர்நாற்றம் வீசும் மீன்போன்றது அது மிதாகாரம், மிதத் தூக்கம், பிரேமை, வைராக்கியம் இவையே தேகத்தையும் மனத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகின்றன. எச் சூழ்நிலையிலும் விரக்திக்கு இடம் கொடுக்காது பயம் சற்றேனும் இல்லாது உள்ள எவராயினும் பலனெதுவும் வேண்டாது மாறுப் பக்தியுடன் இறைவனை நினைப்பின் அவரிடமிருந்து கவலைகள், துன்பங்கள் யாவுமகன்றுவிடும். இறைவனே நீங்கள் எச் சாதியைச் சேர்ந்தவர் எவ்வாசாரத்தைப் பரம்பரையாகப் பின் பற்றியவர் என்று எந்நேரத்திலாவது விசாரிப்பதில்லை.

காவிவஸ்திரம் அணிவதிலோ, உத்ஸவங்கள் நடாத்துவதிலோ, யக்ஞங்கள் செய்வதிலோ, தலைமயிரை மழித்தலிலோ கமண்டலம் அல்லது தண்டத்தைக் கொண்டு திரிவதிலோ, தலைமயிரைச் சடையாக முடிவதிலோ பக்தி தங்கியிருப்பதில்லை. தூய்மையான அந்தக்கரணத்தினுல் இறைவனை இடைவிடாது நினைத்த வண்ணம் சிருஷ்டி முழுவதும் இறைவனின் படைப்பே என்று நினைந்து புலன் விடயங்களில் பற்று வைக்காது, எல்லோரிடமும் சம அன்பு பாராட்டி, தன்னை சத்தியவாக்கிற்கே அர்ப்பணித்து இருப்பதுவே பக்தியின் தன்மையாகும்.

பல்வேறு பக்தி வகைகளில் நாமஸ்மரண பக்தியே தலை சிறந்தது. தன்னை ஒருவர் பாதுகாத்துக் கொள்ளும் வழி நாமமே, ஜெயதேவர், கோரக்கர், தியாகையர், துக்காராம், கபீர், ராம்தாஸ் என்னும் மாபெரும் பக்தர்கள் இந்த ஒரு நாமம் மூலமே இறைவனையடைந்தார்கள். ஏன் ஆயிரம் விஷயங்களைப் பற்றிக் கூற வேண்டும்? இறைவனோடு தர்சன், ஸ்பர்சன், சம்பாஷன் இவற்றை நாமமூலம் பிரகலாதன், துருவன் என்போர்களும் கூட அடையவில்லையா? எனவே சாதகரொவ்வொருவரும் இறைவனின் நாமத்தைத் தனது ஜீவநாடியாகக் கருத்தில் கொண்டு நற்கர்மங்களிலும் நல்லெண்ணங்களிலும் முழு நம்பிக்கை கொள்ள வேண்டும். சேவை மனப்பான்மையையும், சமஅன்பினையும் அவர் எல்லோரிடமும் வளர்ப்பாராயின் இதைவிட முக்திக்கான பாதை வேறொன்றில்லை. இதனை விட்டு விட்டு மூலையொன்றில் ஒருவர் உட்கார்ந்து கொண்டு தனது மூச்சைப் பிடித்தவாறிருப்பின் தனது உட்குணங்களை அவர் எவ்வாறு வெற்றி கொள்ள முடியும்? தான் அவற்றை வெற்றி கொண்டு விட்டதாக அவர் எப்படி அறிவார்? அம்பரிச பக்தி துர்வாசச் செயல்கள் எனும் இலை இரண்டின் சேர்க்கையும் துர்வாசர் தமக்கு இறுதியில் தேடிக் கொண்ட வினையிலேயே விட்டுவிடும். துர்வாசர் அம்பரீசனின் கால்களில் விழ வேண்டும். இத்தகைய திரிசங்குகள் போன்று நீங்கள் உருவாகாதிருப்பின் மெய்யான நிலையை அடைந்து என்றுமுள்ள சத்திய அனுபவத்தைப் பெறுவீர்களாக.

32. சாதகர் தெரிய வேண்டிய கருவி

ஒவ்வொருவரும் தங்களையறியாமலே தவறிழைக்கும் தன்மை மிக்கவர்கள். தீ அல்லது ஒளி எத்தகைய பிரகாசம் பொருந்தியிருப்பினும் அதிலிருந்து சிறிதாவது புகை தோன்றிய வண்ணமிருக்கும். அவ்வாறே எத்தகைய நற்கர்மத்தை மனிதன் புரியினும் அதில் நுண்ணிய அளவில் தீதும் கலந்திருக்கும். தீயவை குறைவாயும் நன்மையைக் கூடுதலாகவும் இருக்குமாறு உறுதிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆரம்ப முதலாவது முயற்சியிலேயே வெற்றியை நீங்கள் தற்போதைய சூழ்நிலையில் பெறமுடியாது. நீங்கள் எதைச் செய்தாலும் பேசினாலும் அல்லது பணியாற்றினாலும் அவற்றின் பின்விளைவுகளைக் கவனமாகச் சிந்திக்க வேண்டும். உங்களைப் பிறர் நீங்கள் விரும்பும் எவ்விதத்தில் கௌரவிக்கவேண்டுமோ முதலில் நீங்களும்

அவ்வாறே பிறருடன் உறவாடி அவர்களிடம் அன்பு செலுத்திக் கௌரவிக்க வேண்டும். அப்பொழுதே உங்களைப் பிறர் கௌரவிப்பார்கள். அதற்குப் பதிலாக நீங்களே பிறரை கௌரவிக்காது அன்பு செலுத்தாதிருப்பின் உங்களை முறையாக அவர்கள் கவனிக்கவில்லை என்று நீங்கள் முறைப்பாடு செய்வது தவருன ஒரு முடிவாகும். இதற்குப் பதிலாக எத்தகைய கொள்கைகள் நேர்மையானவை எவை உண்மையானவை நல்லவை எத்தகைய செயல் தலைசிறந்தது? போன்ற அறிவுரைகளைப் பிறருக்குக் கூறுவோர் தாமே அவ்விதம் நடப்பின் அவ்வறிவுரைகளைச் சொல்லும் அவசியமே ஏற்படாது. தம் உண்மையான நடத்தையைக் கவனித்துப் பார்ப்பதனால் பாடத்தை இலகுவாகக் கற்று விடுகிறார்கள். அதை விட்டு விட்டு பிறரைப்போன்று வேதாந்தத்தை கிளிப் பிள்ளை போல் பேசித் தனது நடத்தையில் கொஞ்சமேனும் அவற்றைப் பயிற்சி செய்ய முடியாது விடுவது பிறரை மாத்திரம் ஏமாற்றுவதல்ல, அதிலும் மேலாக தன்னைத்தானே ஒருவர் ஏமாற்றுவது போலாகும். எனவே பிறர் எவ்வாறு இருக்க வேண்டும் என நீங்கள் விரும்புகிறீர்களோ அவ்வாறே நீங்களும் விளங்க வேண்டும். பிறரில் குற்றங்களைத் தேடி தன் தவறுகளைத் தானே மூடி மறைப்பது சாதகனொருவனின் இயல்பன்று. உங்கள் தவறுகளை எவராவது ஒருவர் உங்களிடம் சுட்டிக் காட்டின் அதற்காக அது சரியானது என்று நிரூபித்து தர்க்கம் புரிதலோ அல்லது அவர் மீது எரிச்சலோ கொள்ளாதிர்கள். அவை தவருனவையா என்று நீங்களே உங்களுள் பகுத்தாராய்ந்து உங்கள் நடத்தையைச் செப்பனிடுங்கள். அதற்குப் பதிலாக உங்களது சுய திருப்திக்காகக் காரணம் புனைதலோ அல்லது அதனைச் சுட்டிக் காட்டியவரிடம் பழிவாங்குவதோ, நிச்சயமாகச் சாதகனுக்கோ, பக்தனுக்கோ உரிய தன்மைகளல்ல.

சத்தியமும். ஆனந்தமும் நிறைந்ததையே எப்பொழுதும் சாதகன் தேடவேண்டும். சோகத்தன்மையும், விரக்தியும் கொண்ட எண்ணங்களெல்லாவற்றையுமே அவன் தவிர்க்க வேண்டும். விரக்தி, சந்தேகம், அகங்காரமே சாதகனின் இராகு கேதுக்களாம். ஒருவரிடம் பக்தி நன்கு ஸ்தாபிக்கப்பட்டுவிடின் இவ்விராகு கேதுக்கள் தோன்றிடினும் இலகுவாக அவற்றை வென்றிடலாம். ஒருவரின் சாதனையை அவை தாக்கும் எச்சூழ் நிலை தோன்றினும் மகிழ்ச்சி நிறைந்தும் சிரித்த வண்ணமும் உற்சாகத்துடன் சாதகன் விளங்குவதே இதனினும் மேலானது. தூய்மைமிக்க இப்பாவனையே பக்தியிலும் ஞானத்திலும் மேலாக விரும்பத்தக்கது. இதனைப் பெற்றவர்களே இலட்சியத்தை

முதலில் சென்றடையும் தகுதி பெற்றவர்களாவர். எந்நேரமும் மகிழ்ச்சியுடனிருக்கும் இவ்வியல்பு முற்பிறவிகளில் ஆற்றிய நன்மையின் பயனேயாகும். எப்பொழுதும் சோகமாயும் விரக்தியடைந்தும் சந்தேகமுடனும் ஒருவர் இருப்பின் எத்தகைய சாதனையை அவர் மேற்கொள்ளினும் பேரானந்தத்தை ஒருபோதும் அவரால் பெறமுடியாது. அவ்வுற்சாகமூலம் ஆனந்தத்தை எவ்வித வடிவிலும் அவரால் பெற்றுக் கொள்ள முடிகிறது. உங்களைப் போற்றுகையில் ஒருபோதும் பெருமையுறுதீர்கள். உங்களைத் தூற்றுகையில் ஒருபோதும் தாழ்மையடையாதீர்கள். இவை இரண்டுமின்றி ஆத்மீக சிங்கமாகத் திகழுங்கள். தானே தனது தவறுகளைப் பகுத்தறிந்து சீர் செய்தல் மிக முக்கியமான தொன்று.

இனி இறைவனையடையும் விஷயங்களிலும் ஒருவர் அவதானமாக இருத்தல் வேண்டும். ஒருவருக்கு எத்தகைய இடர்ப்பாடு நேரிடினும் பயிற்சி முறைகளில் எவ்வித மாறுபாடோ தடையோ இன்றி தனது சாதனையை ஒருவர் தொடர வேண்டும். தான் விரும்பிப்போற்றி ஸ்மரணைக்குத் தெரிந்தெடுத்த நாமத்தை ஒருவர் மாற்றுதலாகாது. சில நாட்களுக்கொருதரம் நாமத்தை மாற்றின் மனக்குவிப்பு இயலாது போய்விடும். மன ஒருங்குகுவிப்பை மனம் பெறுது, சாதனைகளெல்லாம் மன ஒருங்குகுவிப்பையே தமது இறுதி நோக்கமாகக் கொண்டுள்ளன. இறைவனின் பல்வேறு நாமங்களையும் ரூபங்களையும் ஒருநேரம் கடைப்பிடிப்பதும் பின்னர் கைவிடுவதும் என்பதை விட்டுவிட்டு ஒரே ஒரு நாமத்தையே தொடர்ந்து ஜபத்திற்கும் தியானத்திற்கும் கடைப்பிடிக்க வேண்டும் ஒருவர் தியானிக்கையில் உருவகிக்கும் ரூபமும், ஜபம் செய்கையில் கூறும் நாமமுமே இறைவனுக்குரிய நாமரூபங்களெல்லாம் என்னும் ஸ்திரமான மன நிலையை ஒருவர் பெறவேண்டும். அந்நாமமும் ரூபமும் சற்றேனும் வெறுப்புணர்வை அவருக்களித்தலாகாது லௌகீகமான இழப்புக்கள், வேதனைகள், கவலைகள் என்பனவெல்லாவற்றையும் நிலையற்றதும் மாயமானதுமென ஏற்றுக் கொண்டு இவ்வேதனைகளைத் தாண்டவே இத்தகைய ஜபம், தியானமெல்லாம் என உணர்ந்து இதை அதனுடனும், அதை இதனுடனும் சாதகர்கள் கலவாது இரண்டையும் வேறாக வைத்திருக்க வேண்டும். இழப்பு, வேதனை என்பன புறமான இவ்வுலகிற்குரியன என்றும் ஜபமும், தியானமும் உள்முகமான இறைவனின் பிரேமையுலகைச் சார்ந்தன என்றும் அவர் புரிந்து கொள்ள வேண்டும். இதுவே பதிவிரதபக்தி என அழைக்கப்படும். ஒரு நாமத்தையும் ஒரு ரூபத்தை

யும் சாதகர் தெரிந்தெடுத்து சிலநேரங்களின் பின்னர் வேறு நாம ரூபத்திற்காக அதனை விட்டு விடுகின்ற மற்ற வகை, வியபிசார பக்தி எனப்படும்.

இது அறியாமையினால் புரியப்படின் அதில் தவறேதுமில்லை. ஆனால் இது தவறு, இடர்மிக்கது என்று அறிந்த பின்னரும் அந்நாம ரூபம் மூலம் தியானத்தையும் ஜபத்தையும் நம்பிக்கையுடன் தொடர்ந்துவிட்டுப் பின்னர் அதனை மாற்றின் அது நிச்சயமாகத் தவருகும். நம்பிக்கையோடு நாம ரூபத்துடன் இணைந்திருத்தல் அதி உயர்ந்த தவமும் அதியுயர்ந்த வாக்குறுதியுமாகும். பெரியவர்கள் யாராயினும் உங்களுக்கறிவுரை வழங்கினும் உங்கள் மனம் ஏற்றுக்கொண்ட பாதையை மாற்றுதீர்கள். இறைவனது நாமத்தை மாற்றுமாறும் நீங்கள் போற்றும் நாமத்தை விட்டு விடுமாறும் எப்பெரியவர்கள் உங்களுக்கறிவுரை கூறப் போகிறார்கள். அப்படி உங்களுக்கறிவுரை கூறுபவரெவரையும் பெரியவராகக் கருதாதீர்கள். அவர்களை மந்த புத்தியினர் என்றே கருதுங்கள் மேலும் ஜபம், தியானம் செய்யும் நேரத்தையும் இடத்தையும் முடியுமானவரை மாற்றவோ, இடம்பெயராதவாறே பார்த்துக் கொள்ளுங்கள். பிரயாணம் செய்கையிலும் இடத்தை மாற்றும் அவசியமேற்பட்டாலும் நேரத்தையாவது மாற்றாது வைத்திருக்க வேண்டும். பேரூந்தொன்றிலோ அல்லது புகையிரதத்திலோ அல்லது அது போன்ற வசதிகுறைந்த சூழ் நிலையில் ஒருவர் இருக்கையிலும் முன்னர் அதே நேரத்தில் அவர் மேற்கொண்ட ஜபத்தையும், தியானத்தையும் குறித்த நேரத்தில் எவ்வாறுவது தனது மனக்கண் முன்னர் கொணர்ந்து நிறுத்த வேண்டும்.

இவ்வகையில் ஆத்மீகச் செல்வத்தைச் சேகரித்து நிச்சயமாக வெற்றியடைந்து ஆத்மாவையடையலாம்.

33. நேற்றைய சுபீட்சமும் இன்றைய வறுமையும் இரண்டும் 'மகான்கள்' என்று அழைக்கப்படுபவராலேயே.

எவ்வுயிருக்கும் தீங்கிழைக்காது தம் வாழ்வை ஒவ்வொருவரும் நடாத்த வேண்டும். அவரின் தலையாய பணி அதுவே. இம்மானுடப் பிறவி வாய்த்தவர்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடமை தமது சக்தியில் ஒரு பகுதியை எப்பொழுதாவது பிரார்த்தனைக்கும் நாமஸ்மரணைக்கும் தியானத்திற்கும் ஒதுக்கி வைத்தலாகும். அத்துடன் தமது வாழ்வோடு சத்தியம், தர்மம்,

சாந்தி, பிறர் சேவை என்பவற்றையும் அவர் பொருந்த அமைத்துக் கொள்ள வேண்டும். நெருப்பைத் தீண்டவும், பாம்பை அச்சுறுத்தவும் எவ்வாறு ஒருவர் பயப்படுகிறாரோ அவ்வாறே பிறர் நலன் கெடுக்கும் பணிகளை அல்லது பாபம் மிகுந்த கர்மங்களைச் செய்ய ஒருவர் பயப்பட வேண்டும். தற்போது தங்கம் செல்வங்களைச் சேர்க்க ஒருவர் மேற்கொள்ளும் பல்வியமும் சிரத்தையும் பிறரை மகிழச் செய்யும் பணிகளிலும் இறைவனை வழிபடுதலிலும் காட்ட வேண்டும். இதுவே மனிதனின் தர்மமாகும். இத்தகைய நற்பண்பை வலுப்படுத்தவே இறைவன் மனித அவதாரம் கொள்கிறான். ஆனால் இல்லாததொன்றுக்கு எவ்வாறு பல மனித்து வளர்க்கலாம் என்னும் கேள்வியெழுகிறது. இப்பண்புகள் உண்மையாகவே இல்லாததொன்றல்ல. மனிதனிடத்திலேயே அவை காணப்படுகின்றன. ஏற்கனவே காணப்படும் இப்பண்புகள் குன்றி நலிவடைகையில், அவற்றை ஸ்தாபிக்கவும் இவற்றினை எதிர்த்து இயங்கும் சக்திகளை ஒதுக்குமாறும் இறைவன் திருவவதாரம் செய்கிறார். இக்குறிக்கோளைத் தெளிவாக்குவதற்காகவே துவாபரயுகத்தில் அர்ஜுனனுக்கு கிருஷ்ணன் பின்வருமாறு போதிக்கிறார்:

பரித்ராணாய சாதூனாம் விநாசாய துஷ்கிருதம்
தர்ம சமஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகேயுகே.

கூறப்போயின் சாதுக்களின் பாதுகாப்புக்கும், வளர்ச்சிக்குமே இறைவனின் திருவவதாரங்களெல்லாம் தோன்றியுள்ளன சாது என்னும் பதமானது ஏதேனும் ஒரு சமயத்தையோ சாதியையோ அல்லது கோத்திரத்தையோ அல்லது ஆச்சிரம வகுப்பையோ அல்லது சமூகத்தையோ அல்லது மானுட வர்க்கத்தையொத்த ஏதேனுமொரு வர்க்கத்தையோ கூட குறிப்பதில்லை. அது சமயங்களெல்லாவற்றையும், ஆச்சிரமங்களெல்லாவற்றையும் சாதிகளெல்லாவற்றையும், பிராணிகளெல்லாவற்றையுமே குறிக்கும். தனது பிரபஞ்ச மனத்தை கீதையில் பகவான் காட்டியுள்ளார். இத்தகைய மகாவாக்கியம் மூலம் மிகத் தேவையானதும், புகழ்மிக்கதுமாகக் கீதை விளங்குகிறது. ஏன், பல்வேறு சூழ்நிலைகளிலும் இடங்களிலும் பக்தர்களின் தாசன் தான் என்பதை ஸ்ரீ கிருஷ்ணரே கூறியுள்ளார். இதற்கு உதாரணம்அர்ஜுனனுக்கு அவர் தேரோட்டியாக விளங்கியதே.

ஒரு சாதாரண மனிதனின் பண்பே இத்தகைய உன்னத நிலையடையின், ஆத்மீக சாதனைகளிலும் ஓயாது இறை சிந்தனையிலும் ஈடுபட்டுள்ளோரின் பண்புகள் எவ்வளவு தூய்மையும்

தெய்வீகமும் பொருந்தியவை என்பதை ஒவ்வொருவரும் தமக் குள்ளே தீர்மானித்துக் கொள்ளலாம். இவ்விருவகை மக்களுக் கும் பண்பின் தராதரமே முக்கியமான தீர்மானியாகும்.

தற்போதைய பிரம்ம நிஷ்டர்களுக்கும், முற்காலத்தைய பிரம்ம நிஷ்டர்களுக்கும் மிகுந்த வேறுபாடுண்டு. பிரம்ம நிஷ் டரின் மகிமையை முதலில் அறிந்து கொள்ளுவதவசியம். தற் போதைய சாதுக்கள் இம்மகிமையை அறியாததனாலேயே எங்க ளிடையே வறுமை தோன்றியுள்ளது. முற்காலங்களில் இம்மகிமை அறியப்பட்டிருந்தது. அதனால் தெய்வீகத்தை அனுப விப்ப தி லேயே அவர்கள் அமிழ்ந்திருந்தார்கள். இத்தெய்வீக உணர்வு கள் தற்போதேன் எழுவதில்லை என்னும் கேள்வியெழலாம். ஆனால் அவை மறைந்திருக்கவில்லை. நெருப்பு அதிகரிக்கவும், குறையவும் ஒரேஒரு காரணம் எரிபொருளேயன்றி வேறேது மில்லை. எரிபொருள் அதிகரிக்க பிரகாசமும் அதிகரிக்கும். இந் நெருப்பில் எரிபொருளை இடும் பணிக்கு எவரும் தட்டிக்கேட்க முடியாத உரிமை மானிட சமூகம் முழுவதற்குமுண்டு. நெருப்பு ஒளியை வழங்கும் சக்தியை தனதியல்பாகக் கொண்டது. அவ் வாறே சாதகனுடையதும், ஆத்மீகப் பயிற்சியாளனுடையதும் ஞான ஒளியைத் தரும் புத்தி என்னும் நெருப்பில், தாறவு, சாந்தி, சத்தியம், தயை, பொறுமை, சுயநலமற்ற சேவை என்னும் எரிபொருட்களை ஒயாதிட வேண்டும். இவற்றை மேலும் அதிகரிப்பின் மிகுந்த திறனும் தேஜசும் கொண்டு சாதகர் விளங்குவார்கள். வளம் மிக்க மண்ணிலே வளரும் மரங்களே நல்ல பழங்களை வழங்கும். உவர் நிலத்தில் வளருபவை மிகவும் நலிவாயிருக்கும். இவ்வாறே களங்கமற்ற இருதயங்களிலேயே தெய்வீக உணர்வுகளும் சக்திகளும், கொடைகளும் பிரகாசித்து மிளிரும். முந்தைய பிரம்மநிஷ்டர்களுக்கும் தற்போது உள்ளவர் களுக்குமிடையேயான வேற்றுமையிதுவே. முன்னர் பிரம்ம நிஷ் டர்கள் என்ற பெயரில் வாழ்ந்தவர்கள் செய்த அதே தியானம், அதே பிரணவத்தையுமே தற்போதைய பிரம்மநிஷ்டர்கள் பயிலு கிறார்கள். ஆனால் சாதனை வழிமுறைகளில் சுய கட்டுப்பாடு குறைந்து காணப்படுதலே அவ்வேறுபாடாகும். தனிமையான இடங்களில் இறைவனை நோக்கி ஒயாது இடைவிடாது தியா னத்தில் ஈடுபடும் மகான்களின் எண்ணிக்கை குன்றியதும் உலகில் துயரம் மிகுந்து விட்டது. தற்போது வாழும் பிரம்ம நிஷ்டர்களோ கீழ்த்தரமான புகழ்ச்சிக்கும் பெருமைக்கும் அடி மைப் படுவதாலும், அறியாமையில் சிக்கியிருப்பதாலும் பேரும் புகழும் பெற அயராது முயற்சி செய்வதாலும், தாம் ஸ்தா

பித்த நிறுவனங்களை பெருக்குவதாலும், தடங்கல்களைத் தாமே சேர்த்துத் தம் சாதனையைத் தொடர முடியாது தமது பிரம்ம நிஷ்டையைப் பாழாக்குகின்றனர். பிரம்ம நிஷ்டையில் தம்மை நிலைநிறுத்த விரும்புவோர், தனிமையைநாடி தியானத்தையும், ஜபத்தையும் குறித்த நேரங்களில் பயின்று இவ்வாத்மீகப் பயிற்சிகளினால் மன ஒருங்கு குவிப்பைப் பெற்று ஜீவராசிகளெல்லாவற்றிற்கும் நன்மையளிக்கும் பணிகளை என்றும் செய்யும் விருப்பமும், பலன் கருதாது பணி புரிவதில் எந்நேரமும் ஈடுபாடும் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய மனிதர் பூமி மிசை அவதரிப்பின் துயரங்களெல்லாம் மறைந்துவிடும். கலியுகத்தின் அடையாளம் இதுவே.

கருணைமிகு இதயங் கொண்ட மருத்துவர்கள் உலகில் இங்கும் அங்கும் வைத்தியசாலைகளை நிர்வகித்து நோயுற்றோருக்கு பணி செய்வதும், பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சையளிப்பதும் போன்று, நாமும் இங்குமங்குமாக 'பவசாகரம்' என்னும் நோயைக் குணப்படுத்தவும், சிகிச்சையளிக்கவும் பக்தி மிக்க சாதுக்களின் ஆச்சிரமங்களை அமைப்பின் அறியாமை, அசத்தியம், ஒழுக்கவீனம், தற்புகழ் என்னும் நோய்களிலிருந்து மக்களைக் குணப்படுத்தலாம். அறியாமை கேட்டை விளைவிக்கும். பிரம்ம ஞானம் என்னும் மருந்தையும், அதற்கு ஆதரவான சாந்தம், தமம், சமம் என்னும் குளிசைகளையும் கொண்டே அதனைக் குணப்படுத்தலாம். இதற்குப் பதிலாக தம்மை அண்டி வருவோருக்கு அவர்கள் கேட்கும் மருந்தையும் நோயாளர் ருசிக்கும் குளிசைகளையுமே இன்றைய 'பெரிய மனிதர்கள்' அளிக்கிறார்கள். இவ்வாறு தம்மைப் பின்தொடர்பவர்களின் கருவிகளாகி பேரும் புகழும் வேண்டி நோயாளிகளினால் கட்டுப்படுத்தப்படும் மருத்துவர்களாக அவர்கள் செயற்படுகிறார்கள். பேரும் புகழுக்குமான பேராசையின் பிடிகளுக்கு இரையாவதால் ஏற்படும் பல வீனத்தாலும், மூடத் தனத்தாலும் 'மகான்கள்' என்று தம்மைக்கூறிக் கொள்வோர், பேரானந்தத்தில் திளைக்க முன்னர் தாமாகவே நரகத்தில் வீழ்கிறார்கள். தற்காலத்தில் நிலவும் வறுமைக்கு இதுவே முக்கிய காரணம். தற்போதைய சாதுக்களும் மகான்களும் இக்கருத்தினை உணராது அவ்வாறு செயற்படுவதுமில்லை.

இத்தெய்வீக சாராம்சத்தை அனுபவித்து அறிந்துணர வேண்டும். ஒருவரின் சுயநலத்தேவைகள் தியாகம் செய்யப்பட வேண்டும். பிறருக்கு நன்மை செய்வதில் ஓயாத முயற்சி மேற்

கொள்ள வேண்டும். உலக நலனே ஸ்தாபிப்பதே ஒருவரின் நோக்கமாக இருக்க வேண்டும். இத்தகைய உணர்வுகள் இரு தயத்தை நிறைத்திருக்கையில் இறைவனே ஒருவர் தியானிக்க வேண்டும். இதுவே சரியான வழியாகும். இவ்வாறு மானுட சேவையில் மகான்களும் அதிகாரத்தைக் கையில் கொண்டவர் களும் ஈடுபட்டு உலக ஷேமத்தை முன்னேற்றின் மனிதர்களின் மனத்துள் காம, குரோத, மோக, மதமாச்சரிய அகங்காரக் கொள்ளையர்கள் நுழைய முடியாது. மனிதனின் தெய்வீக சம் பத்துக்களான தர்மம், தயை, சத்தியம், பிரேமை, ஞானம், அறிவு என்பன இடையூறுகளினால் பாதிப்படையாது பாதுகாப் பாக இருக்கும். காவல்துறையினராலும், அரசாங்கத்தாலும் புற எதிரிகளையே அடக்க முடியும். அக எதிரிகளை அழிக்க அவர்களி டம் சக்தி எதுவுமில்லை. அவர்களுக்கு இப்பணி மிகச் சிரமமான தாக இருக்கும். அவர்கள் அதற்கு அதிகாரிகளல்லர். சாதுக் களின் உபதேசங்களாலும், பக்தியாலும், ஞானத்தாலும், மகான் களுடனான சத்சங்கத்தாலுமே மனிதனுள் செயற்படும் அக எதிரியான அரிசட்வர்க்கமென்னும் ஆறு எதிரிகளையும் வேரூடன் களைய முடியும். கொள்ளையர்களை மடக்கிப் பிடிக்கும் அதிகாரி களும் காவல்துறையினரும் அக்கொள்ளையர்களிலேயே தங்கி இருத்தல் போன்று, பிரம்ம நிஷ்டர்களும் மகான்களும் உலக நலனைக் கைவிட்டு புலன்களுக்கு அடிமைப்பட்டு பேரும் புகழும் தரும் பேராசைக்குட்படின், உலகம் கொடியவர்களின் கைகளில் அகப்பட்டுத் துயருறும். அறியாமைப் பேரிருளில் உலகம் மூழ்கித் தர்மம் அழிவுறும். இவை இரண்டும் மேற்கூறியவாறே இப் பொழுது உலகில் காணப்படுகின்றன. எனவே வேதனை தினமும் பின் தொடருகிறது. இவ்விரு குழுவினரும் எப்பொழுதும் நற் பண்புகளை அறிந்து எல்லோரது நலனையும் இருதயத்தில் தாங்கி இறைவனின் சர்வ வல்லமையை நினைந்து செயற்படுகிறார்களோ, அந்நாளிலேயே உலகம் சாந்தியிலும் ஆனந்தத்திலும் திளைத் திருக்கும். இவை இரண்டும் மனிதனின் இரு நிலைகளுக்குரிய இரு அரசாங்கங்களே. அக அரசாங்கத்திற்கு ஆத்மீகமான பெரியோர்களே செங்கோலர்கள். நிர்வாக அதிகாரிகளே வெளி அரசாங்கத்தின் செங்கோலர்கள். இவ்விரண்டு குழுக்களும் முறையாகச் செயற்பட்டு நடப்பின் இரண்டு அரசாங்கங்களும் ஆனந்தத்தை அளிக்கும் வகையில் தொழிற்படும். எனவே தற் போதைய துன்பத்திற்கான தவறில் இவர்கள் இருவருமே பங் கேற்க வேண்டும். இத்தகைய நேரங்களிலேயே அறியாமையை யும் அநீதியையும் அடக்கி அரசாங்கங்கள் எல்லாவற்றிற்கும் ஆனந்தம் வழங்க இறைவன் திருவுள்ளம் கொள்கிறார். இதனைத் தெளிவுபடுத்தவே கீதையில் பகவான் கூறியது:

யதா யதாஹி தர்மஸ்ய கிலானிர்பவதி பாரத
அப்யுத்தானமதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம் யஹம்.

ஓ பாரதனே; எப்பொழுது தர்மம் நசுங்கி அதர்மம் தலையெடுக் கிறதோ அப்பொழுது நான் திரு அவதாரம் செய்கிறேன்.

உண்மையாகவே கூறின் இறைவனின் அவதார நிகழ்ச்சி யுமே, மகான்களின் பிரார்த்தனைகளின் அழைப்பின் செயலாலே யாகும். பிரஜைகள் புறவுலகில் தமக்கு ஏதாவது சௌகரியமோ அல்லது உதவியோ தேவைப்படின் தமது தேவையை ஆட்சி யாளர்களே அணுகித் தெரிவிப்பார்கள். அவ்வாறே அகவுலகிலும் பக்தி, தாமம், சாந்தி, சத்தியம் என்பவற்றைப் பெற்றடையும் சாத்தியமில்லையேல் அவற்றைப் பெற்றுக் கொள்ள இறைவனை நோக்கி மகான்களும் சாதுக்களும் தமக்குள் பிரார்த்தித்துக் கொள்கிறார்கள். பின்னர் அவர்களின் பிரார்த்தனைக்குச் செவி சாய்த்து தானுகவே அவர் உலகிற் தோன்றி, அவர்களிடம் கருணை மழையை இறைவன் பொழிகிறார். இது எல்லோரும் நன்கு அறிந்ததே. இராமரும் கிருஷ்ணரும் ஏன் அவதாரம் செய்தருளி னார்கள்? முனிவர்களின் பிரார்த்தனைக்கு இறைவன் செவி சாய்த்ததாலேயாகும். இராமாயணத்திலும், பாகவதத்திலும் இதனைப் பலர் வாசித்திருப்பார்கள். தான் தெய்வீக பிறப்பம்ச மாக இருந்துமே, ஏன் இராம கிருஷ்ணர் கூட அதீதியையும் சுயநலத்தையும் வேரோடு களையும் தர்மத்தை முழு உலகுக்கும் உபதேசிக்க வல்ல ஒருவரை அனுப்புமாறு காளியிடம் பிரார்த் தித்துள்ளார். இது அவரது வாழ்க்கைச் சரிதத்தை வாசித்தவர் கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். எனவே இப்பணியை மேற் கொள்ளுமட்டும் மீண்டும் மீண்டும் பிரார்த்தனைகள் செய்யப்பட வேண்டும். தம் பிரார்த்தனைகளுக்கு இறைவனின் அவதாரம் தோன்றுவிடின் எவருமே பீதியடைந்து பிரார்த்தனையை விடலா காது. புறவுலகில் தனக்குரிய பணியை நிறைவேற்றுவதற்காக எத்தனை முறை ஒருவர் எழுதியும் அலைந்தும் இறுதியில் சில வேளைகளில் அது சற்றேனும் பலனளிக்காது போய் விடுகிறதே!

இனி ஜீவனன் விருப்பங்களிலிருந்து தோன்றும் பலன்களை ஒருவர் எவ்வாறு அறிய முடியும்? இது அறிய முடியாததொன் றுனதனுல் உலகம் ஆனந்தத்தில் நிலை நாட்டப்படும்வரை அவர் பிரார்த்திக்க வேண்டும். அவரது வருகைக்குரிய அறிகுறி உல கத்தின் மகிழ்ச்சியே. இதனை விளங்கின் அவதார புருஷரை உடனே கண்டு கொள்வது இலகு. அப்பொழுதே சத்தியம்,

தலை, ஞானம், பிரேமை என்னும் சமயங்கள் வளர்ந்து சுபிட்ச மடையும். எனவே இவை நன்கு ஸ்தாபிக்கப்படும்வரை மக்கள் தமது பிரார்த்தனைகளைத் தொடர வேண்டும். அதுவே மக்களின் கடமையாகும். சாதுக்களால் இடப்பட்ட பாதையின் மீது பயணம் செய்பவர்கள் அல்லது அதன் மேல் அதிகார உரிமை கோருவோர்கள் அப்பாதையை அடிக்கடி திருத்தம் செய்ய வேண்டும். இதுவே போதம் (உபதேசம்) எனப்படும்.

இத்தகைய செப்பனிடும் பணிகளுக்காகவே அதிகாரம் கொண்டவர்கள், முனிவர்கள், தெய்வீக புருஷர்கள் ஆகியோரை இறைவன் அவ்வப்போது அனுப்புகிறார். சாதுக்களினால் திறந்து விடப்பட்ட பாதையானது, இவர்களின் சத்போதனையால் மீண்டும் தெளிவாகவும் சௌகரியமிக்கதாகவும் ஆக்கப் பட்டுள்ளது. இவ்வாறு இறை சங்கற்பமும் சாதுக்களின் தேவைகளும், மகான்களின் உபதேசங்களும் சேர்ந்த ஒருங்கிணைந்த விளைவினால் ஆனந்தம் உலகில் உறுதிப்படுத்தப்பட்டு குன்றுதிருக்கும். அசாந்தி, அநீதி, குழப்பம், பொய்மை என்பன சாந்தி, சத்தியம், பரஸ்பர சேவை, பிரேமை என்பனவாக மாறும் வண்ணம் மானிட சமூகம் முழுவதும் ஒருமித்துப் பிரார்த்திக்கின் நிலைமை நிச்சயமாகச் சீர்திருந்தும். தற்போது இதற்கு வேறு வழியேயில்லை. கவலைப்படுவது பயனற்றதாகும். வருந்துவதற்குரிய தருணம் இதுவன்று. பலஹீனனென்றும், நலிவானவனென்றும் மன்றாடுவது மனித இயல்புக்கெதிரானது. எனவே வேறு வழிகளைத் தேடுவதை விட்டுவிட்டு பிரார்த்தனை, பிறர்சேவை, பரஸ்பர அன்பு, மரியாதை என்பனவற்றைப் புரிய மனிதன் முயல வேண்டும். இனி மேலும் அவர்கள் தாமதிக்கலாகாது. திருப்தியையும், மகிழ்ச்சியையும் விரைவில் அவர்கள் பெற்றுவிடுவார்கள்.

மாதவ சேவையே மானுட சேவையென மக்கள் கூறுகிறார்கள். அது ஒரு மெய்யான கூற்றாகும். ஆனால் மானிட சேவை புனிதமாயினும் உயர்ந்த லட்சியத்துடன் அதனை இணைத்துக் கொள்ளாவிடில் அது எத்தகைய மகத்தான சேவையாயினும் மனிதர்கள் நன்மையடைய மாட்டார்கள். தான் தெய்வீக மானவன் என்னும் நம்பிக்கையை மனிதன் மனத்திலிருத்தாது பலன்களையும், பேரையும், புகழையும் தான் செய்யும் செயல்களில் தேடிச் செய்வானாயின் சுலோகத்தை (மானுடசேவையே மாதவசேவை) மாத்திரம் வெறுமனே கூறுவதில் பயனேதுமில்லை. எச்செயல்களை மனிதன் புரியினும் தனது நிரந்தர சகாவாக

இறை தியானத்தையும் தன்னுள் உறையும் தெய்வீகத்தில் நம் பிக்கையையும் அவன் கொண்டு விளங்கின் மானிட சேவையே மாதவ சேவை என்பது நியாயப்படுத்தப்படும். மாதவனின் சிந்தனையில்லையேல் மாதவ சேவை எவ்வாறு தோன்றும்? இத் தகைய பேச்செல்லாமே வெறும் சோடனையாகும். அதற்கு நான் ஒத்துக்கொள்ளமாட்டேன்; அதற்குப்பதிலாக மனதில் இறைவனை யிருத்தி தர்ம நெறிகளின் வழியில் எது செய்தாலும் அது மாதவ சேவையாக ஏற்கப்படும் பேரும், புகழும், பலனும் வேண்டி எது செய்தாலும் அது மாதவ சேவையாகாது.

உண்மையில் இறை தியானத்தில் இடைவிடாது அமிழ்ந் திருப்பவர்கள் வேறெவ்வித பணியும் செய்ய வேண்டியதில்லை. அவர்களது பிரார்த்தனையின் பலனே உலகைப் புனிதமாக்கும். ஆனால் அவ்வாறு எல்லோராலும் ஈடுபட முடியாது. எனவே எல்லோரும் தமது மனத்தைத் தூய்மையாக்கி விருப்பங்களைக் குறைத்து அத்தகைய நிலையை யடைய வேண்டும். அதனை யடைந்த சாதுக்கள் தாமே எல்லாவற்றையும் அறிந்துணர்வர். மானவசேவையே மாதவ சேவை என்னும் ஒற்றுமையைப் பிற ரால் புரிந்து கொள்ள முடியாது.

ஆனால் அதற்காக சும்மா வெறுமனே இருந்து விடுவதென் பது அர்த்தமல்ல. அதனைப் புரிந்து கொள்ளுவது ஒவ்வொரு வரின் விதியிலும் அவரின் முந்தைய செயல்களிலும் சாதனையிலும் தங்கியுள்ளது. அது கிட்டும்வரை உணர்வலைகளிலிருந்து மனம் விடுபடுமாறும், தெய்வீக உருவத்திலுள் நிறைந்திருக்குமாறும், ஜபத்திலும் தியானத்திலும் ஈடுபடுங்கள். அத்துடன் பிறர் நலன் அளிக்கும் பணிகளையாற்றுங்கள். பலன் கருதாது உலக சேவைக்கு உங்களது நேரத்தை அர்ப்பணியுங்கள். இவ்வாறு நீங்கள் இறையருளுக்குப் பாத்திரமாவீர்கள். இல்லையேல் தேகம் வேலை செய்யாவிடினும் மனமோ தானாக மிகுந்த சுறுசுறுப்புடன் ஈடுபடும். ஒன்றும் புரியாது இவர்கள் சும்மா இருப்பினும் கர் மத்திற்கிரையாவர். உலக சேவையில் ஒருவரின் தேகமும் புலன் களும் ஈடுபடினும், தமது மனத்தை அவர் இறைதியானத்திலும் சத்திய மார்க்கத்திலும் நிலை நாட்டின், அவை அச் செயல்களி னால் தாக்கமுறு. அவர்கள் கர்மத்தில் ஈடுபடினும் கர்மம் செய் யாதவர்களாகிறார்கள். பகவத்கீதையின் பாடம் இதிலடங்கியுள் ளது. புனித எண்ணங்களினால் தன் மனதை வளர்க்காதவனின் இருதயமானது, நிச்சயமாக தீங்கும் கேடும் நிறைந்த 'சொர்க்க' பூமியாக மாறிவிடும். முத்தியடைய விரும்புவோரும் மன ஒருங்கு

குவிப்பைத் தேடுவோரும் மேன்மையடைய விருப்பமுள்ளோரும் மனதில் இதனைக் கொள்ள வேண்டும் சாதி, துறவு, பூஜை, புனஸ்காரங்கள், சாஸ்திரங்கள், பாண்டித்தியம் என்னும் எவையுமே இத்தகைய ஆத்ம அறிவை அடைய தீர்மானிக்கும் காரணிகளல்ல. பிரம்ம நிஷ்டையொன்றே அதனைத் தீர்மானிப்பது. உபநிடதங்களே இதனைக் கூறுகிறது.

நாஸ்ரமம் காரணம் முக்தே தர்ஸனானி நகாரணம்
ததைவ சர்வ கர்மாணி ஞானமேவகி காரணம்.

ஞானம் ஒன்றே விடுதலைக்குக் காரணம். ஆஸ்ரமோ, தத்துவ சாஸ்திரமோ அல்ல. எங்கும் நிறைந்த இறைவன்மேல் தியானம் செய்து தன்னை ஒருவர் நிலைநிறுத்த கால, இட வரையறைகள் ஒன்றுமேயில்லை. இதற்குப் புனிதமான இடமொன்றே அல்லது பிரத்தியேகமான இடமொன்றே இல்லை. எங்கிருப்பினும் மனம் இறைவன்மீது தியானத்தில் ஈடுபடின் அதுவே புனித இடமாகும். இச்செயலை மனம் எப்பொழுது செய்கிறதோ, அதுவே புனிதமான நேரமாகும். இறைவனை அங்கேயே அப்பொழுதே அவர் தியானிக்க வேண்டும்.
ஆகவேதான் இதுபற்றி முன்பே கூறப்பட்டுள்ளது.

ந காலா நியமோ யாத்ர ந தேசய
ஸ்தலஸ்ய ச யத்ராஸ்ய ரமதே
சித்தம், தத்ர தியானே ந கேவலம்

இத்தகைய புனிதமான இருதயங்களைக் கொண்ட உலகத்தின் பிரதிநிதிகளான ஒழுக்க சிலர்களாலேயே உலகம் சுபீட்சமடையும். இத்தகைய மகான்களின் அவதரிப்பை வேண்டி இப்பொழுதிலிருந்தே ஒவ்வொருவரும் பிரார்த்தித்து அவர்களின் ஆசி பெறும் தகுதியையடைய முயற்சி செய்து உலக நலனை ஸ்தாபிப்பதில் தினசரி வேதனைகளை மறக்கப் பாடுபடுங்கள்.